# 1. வாழ்வியல் தத்துவமும் சமூக மதிப்பும்

மனிதனை முன் வைத்து மனிதனுக்கு என தனி இலக்கியமாக அமைந்த நூல் திருக்குறள் ஆகும். ஒரு மனிதன் தன்னைப் போன்ற பிற மனிதரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையே முதன்மையாகவும், முழுமையாகவும் கூறுகின்றது.

மனிதராகப் பிறந்த அனைவரும் தேடுவதும் விழைவதும் வாழ்வின் இன்பத்தைத்தான். அதற்காக இன்பத்தை நாடி எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது முறையான வாழ்வு அல்ல. கூடி வாழும் மனிதன் மற்றவருடைய இன்ப வாழ்வைக் கெடுக்காத வகையில் வாழவேண்டும். அதற்குச் சில வரன்முறைகள் உள்ளன. அவற்றையே வள்ளுவம் எடுத்துக் கூறுகின்றது.

கட்டுப்பாடு என்பது பறவை விலங்குகளுக்கு இல்லை. ஆனால் உண்டு, உறங்கி, எப்படி வேண்டுமானாலும் வாழ்வது மனித வாழ்வு ஆகாது. இப்படித்தான் வாழவேண்டும் என்னும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு வாழ்வதே வாழ்வு ஆகும். ஆதலால் யார் எத்தகைய வாழ்வு வாழ்ந்திருந்த போதிலும் திருக்குறளைக் கற்றுப் பின் தூய மனமாற்றம் பெறவேண்டும். அது ஒரு நாளில் வந்துவிடாது. வேண்டாத குணங்களை விலக்க, விலக்கத் தான் நல்ல குணங்கள் உருவாகும். கல்லில் இருந்து வேண்டாத பகுதிகளை நீக்கிவிட்டுச் சிலையைச் செதுக்கி எடுப்பதைப்போல் உள் மனத்தை உயரிய மனமாக உருவாக்க வேண்டும்.

எத்தகைய தன்மையுடைய மனிதனாயினும் பிறரால் புகழப்படுவதையே விரும்புவான். இந்த நிலையில்லாத உலகில் நிலையாக நிற்பது புகழ் ஒன்றுதான். அதனால் வாழப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தான் புகழுடன் வாழ்ந்து மறைவதையே விரும்புகிறான். அத்தகைய வாழ்வு வாழவேண்டுமானால், உடலுக்கு ஒவ்வாததை நீக்கி, சக்தி தரும் உணவை உட்கொள்ளுதல்போல் உள்ளத்திற்கு ஒவ்வாத தன்மைகளை நீக்கி, நல்ல பண்புகளை வளர்த்து கொள்ளவேண்டும்.

அன்பு, அடக்கம், பொறுமை, பிறர்க்கு உதவும் எண்ணம், மாசற்ற மனம், பெருந்தன்மை, மன்னிக்கும் பண்பு, ஒழுக்கம், தூய்மை, துணிவு, ஊக்கம், முயற்சி, தன்னலமற்ற செயல் ஆகியவை வாழ்வை வளப்படுத்தும். அழுக்காறு, அவா, வெகுளி, கடுஞ்சொல், ஆணவம், பேதைமை, மறதி, சோம்பல் ஆகியவை வாழ்வைக் கீழ்மைப்படுத்தும். இவற்றை நன்கு உணர்ந்து, வாழ்வை மேன்மைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே திருக்குறளின் நெறியாகும்.

## 1. திருக்குறள்

திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல் ஆகும். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, 21ம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினருக்கும் வழிகாட்டும் புரட்சி நூல் ஆகும். திருக்குறளின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்துக்களைத் தந்து இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வலுப்படுத்துகிறது.



Scanned with CamScanner

திருக்குறள் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லி கொடுக்கிறது. திருக்குறள் 'இலக்கியம்' என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது.

உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது. **“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு”** என பாரதியும், **“அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்”** என கல்லாடரும் புகழ்ந்துரைக்கிறார். நாடு, மொழி, இனம் கடந்து உலகினர் அனைவருக்கும் அறம் உரைக்கும் பெரு நூலாக இன்று திகழ்வது திருக்குறள் ஆகும். இந்நூல் முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவப்பயன், திருவள்ளுவம் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்நூலை இயற்றிய திருவள்ளுவரும் நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்புலவர், பெருநாவலர், பொய்யில் புலவன், மதானுபங்கி, செந்நாப்போதார் என்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்பெறுகின்றார்.

### திருக்குறளின் அமைப்பு:

திருக்குறளில் அறத்துப்பால் 38 அதிகாரம், பொருட்பால் 70 அதிகாரம், காமத்துப்பால் 25 அதிகாரம் என மொத்தம் 133 அதிகாரம் அமைந்துள்ளன. 1330 குறள்கள் உடையது. அறம், பொருள், இன்பம்(காமம்) ஆகிய 3 பால்களும் கொண்டமையால் முப்பால் எனப் பெயர் பெற்றது. முப்பால்களாகிய இவை ஒவ்வொன்றும் இயல் என்னும் பகுதிகளாகவும், ஒவ்வொரு இயலும் சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. ஒவ்வொரு அதிகாரமும் 10 பாடல்களை தன்னுள் அடக்கியது. இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை ஆகும். அக்காலத்தில் இவ்வகை வெண்பாக்களால் ஆகிய முதல் நூலும், ஒரே நூலும் இந்நூலே ஆகும்.

### அறத்துப்பால்(1-38):

அறத்துப்பாலில், 1. கடவுள் வாழ்த்து 2. வான்சிறப்பு 3. நீத்தார் பெருமை 4. அறன் வலியுறுத்தல் 5. இல்வாழ்க்கை 6. வாழ்க்கைத் துணைநலம் 7. மக்கட்பேறு 8. அன்புடைமை 9. விருந்தோம்பல் 10. இனியவை கூறல் 11. செய்ந்நன்றி அறிதல் 12. நடுவுநிலைமை 13. அடக்கம் உடைமை 14. ஒழுக்கம் உடைமை 15. பிறன்இல் விழையாமை 16. பொறை உடைமை 17. அழுக்காறாமை 18. வெ∴காமை 19. புறங்கூறாமை 20. பயனில் சொல்லாமை 21. தீவினை அச்சம் 22. ஒப்புரவு அறிதல் 23. ஈகை 24. புகழ் 25. அருள் உடைமை 26. புலால் மறுத்தல் 27. தவம் 28. கூடா ஒழுக்கம் 29. கள்ளாமை 30. வாய்மை 31. வெகுளாமை 32. இன்னாசெய்யாமை 33. கொல்லாமை 34. நிலையாமை 35. துறவு 36. மெய் உணர்தல் 37. அவா அறுத்தல் 38. ஊழ் என்ற 38 பகுதியை உள்ளடக்கியது ஆகும்.



Scanned with CamScanner

திருவள்ளுவர் அறத்தில் அழுத்தமான நம்பிக்கை உடையவர். அறநெறியைப் போற்றி வாழும் மனிதனே உயர்ந்த குறிக்கோளுடன் வாழமுடியும் என்பது இவர்தம் நம்பிக்கை ஆகும். மனிதன் நெறியோடு வாழ்வதற்குரிய பல்வேறு நிலைகளை வள்ளுவர் அறத்துப்பாலில் விளக்குகிறார். அறத்தின் சிறப்பு இப்பகுதியில் நுட்பமாகக் கூறப்பெறுகிறது. மனிதன் பிறந்து வளர்ந்து கல்வி கற்று இல்லறம் ஏற்று வாழ்வைச் செம்மையாக நடத்துவதற்கும் துறவறத்தில் மனத்தைச் செம்மைப்படுத்துவதற்கும் தேவைப்படும் அறப்பண்புகளை அறத்துப்பால் விளக்குகின்றது. இல்லறம்-துறவறம் இரண்டும் தொடர்புபட்டு விளங்குவதைத் தெளிவுறுத்துகின்றது.

பொருட்பால் (39-108):

பொருட்பாலில், 39. இறைமாட்சி 40. கல்வி 41. கல்லாமை 42. கேள்வி 43. அறிவுடைமை 44. குற்றம்கடிதம் 45. பெரியாரைத் துணைக்கோடல் 46. சிற்றினம் சேராமை 47. தெரிந்து செயல்வகை 48. வலிஅறிதல் 49. காலம் அறிதல் 50. இடன் அறிதல் 51. தெரிந்து தெளிதல் 52. தெரிந்து வினையாடல் 53. சுற்றம் தழால் 54. பொச்சாவாமை 55. செங்கோன்மை 56. கொடுங்கோன்மை 57. வெரு வந்த செய்யாமை 58. கண்ணோட்டம் 59. ஒற்றாடல் 60. ஊக்கம் உடைமை 61. முடிஇன்மை 62. ஆள்வினை உடைமை 63. இடுக்கண் அழியாமை 64. அமைச்சு 65. சொல்வன்மை 66. வினைத்தூய்மை 67. வினைத்திட்பம் 68. வினைசெயல்வகை 69. தூது 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல் 71. குறிப்பு அறிதல் 72. அவைஅறிதல் 73. அவை அஞ்சாமை 74. நாடு 75. அரண் 76. பொருள்செயல்வகை 77. படைமாட்சி 78. படைச்செருக்கு 79. நட்பு 80. நட்புஆராய்தல் 81. பழைமை 82. தீநட்பு 83. கூடாநட்பு 84. பேதைமை 85. புல்லறிவாண்மை 86. இகல் 87. பகைமாட்சி 88. பகைத்திறம் தெரிதல் 89. உட்பகை 90. பெரியாரைப் பிழையாமை 91. பெண்வழிச்சேறல் 92. வரைவில் மகளிர் 93. கள் உண்ணாமை 94. சூது 95. மருந்து 96. குடிமை 97. மானம் 98. பெருமை 99. சான்றாமை 100. பண்புடைமை 101. நன்றியில் செல்வம் 102. நாண்உடைமை 103. குடிசெயல்வகை 104. உழவு 105. நல்குரவு 106. இரவு 107. இரவச்சம் 108. கயமை என்ற 70 பகுதியை உள்ளடக்கியது ஆகும்.

வளர்ச்சியுற்ற மனிதன் சமுதாயம், நாடு, அரசியல் எனப் பல்வேறு நிலைகளில் நாட்டம் கொள்கின்றான். இவை பற்றிய விளக்கம் பொருட்பாலில் பேசப்படுகின்றது. திருவள்ளுவர் பொருட்பாலில் அரசியலை அறத்தின் அடிப்படையிலேயே வலியுறுத்துகின்றார். போர் வெற்றியாயினும் பொருள் ஈட்டமாயினும் நெறியறிந்தே இயற்ற வேண்டும் என்பது திருவள்ளுவரின் குறிக்கோள் ஆகும். ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் சான்றோர் பழிக்கும் வினைகளைச் செய்தல் கூடாது என்று எடுத்து உரைக்கின்றார்.

காமத்துப்பால் (109-133):

காமத்துப்பாலில், 109. தகையணங்குறுத்தல் 110. குறிப்பறிதல் 111. புணர்ச்சி மகிழ்தல் 112. நலம்புனைந்து உரைத்தல் 113. காதல்சிறப்பு உரைத்தல் 114. நாணுத்துறவு உரைத்தல் 115. அலர் அறிவுறுத்தல் 116. பிரிவாற்றாமை 117. படர்மெலிந்து இரங்கல் 118. கண்விதுப்பு



Scanned with CamScanner

அழிதல் 119. பசப்பு உறு பருவரல் 120. தனிப்படர்மிகுதி 121. நினைந்தவர் புலம்பல் 122. கனவுநிலை உரைத்தல் 123.பொழுதுகண்டு இரங்கல் 124. உறுப்புநலன் அழிதல் 125. நெஞ்சோடு கிளத்தல் 126. நிறைஅழிதல் 127. அவர்வயின் விதும்பல் 128. குறிப்பு அறிவுறுத்தல் 129. புணர்ச்சிவிதும்பல் 130. நெஞ்சொடு புலத்தல் 131. புலவி 132. புலவிநுணுக்கம் 133. ஊடல்வகை என்ற 25 பகுதியை உள்ளடக்கியது ஆகும்.

திருவள்ளுவரின் கலை உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுவது காமத்துப்பால் ஆகும். காதலன் காதலியர் அன்புடன் கூடி உள்ளம் ஒன்றுபட்டு மாண்புற மனையறம் நடத்தச் சில அடிப்படைகள் தேவை. இந்த அடிப்படைகளைத் திறம்பட விளக்குவது காமத்துப்பால் ஆகும். காமத்துப்பாலில் வள்ளுவர் கூறும் உணர்ச்சிகளும், கற்பனைகளும் காதலரின் பண்பட்ட நெஞ்சத்தை விளக்குவன ஆகும். உடலின் கவர்ச்சிக்கு முதன்மை அளிக்காது உயர்ந்த அன்பின் வளர்ச்சியையே கூறுகின்றார். ஆதலால் காதல் பாடல்களிலும் நல்ல பண்பாடே மிளிர்கின்றது.

## 2. வாழ்க்கை

ஒவ்வொரு மனிதனும் தானும் துன்பப்படாமல் பிறரையும் துன்பப்படுத்தாமல் வாழ்வதே உயர்ந்த வாழ்க்கை ஆகும். தானும் துன்பப்பட்டுக் கொண்டு பிறரையும் துன்பப்படுத்துவது மனித வாழ்வே அல்ல. வாழ்க்கையில் வெற்றிபெற அறிவு, அனுபவம் மட்டும் போதாது. தன்னம்பிக்கை, மனோபாவம் அவசியம் தேவை. வாழ்க்கையின் பல்வேறு பிரச்சனைகளுக்கு மனோபாவம் மட்டுமே தீர்வாக இருக்கிறது. ஒவ்வொருவரும் அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாய் அமையவேண்டும். மனித மனங்களை விரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்கமாகவும் உள்ளது.

மனம் + இதன் = மனிதன். மனத்தை இதமாக வைத்துக் கொள்பவன் மனிதன் ஆவான். மனித வாழ்க்கையானது தான், சமுதாயம், இயற்கை என்ற மூன்றின் இணைப்பில் நடைபெறுகிறது. தான் என்பது தனி மனிதனைக் குறிக்கின்றது. சமுதாயம் என்பது மனிதர்களின் தொகுப்பு ஆகும். இயற்கை என்பது தனிமனிதனைச் சுற்றி உள்ள உயிரற்ற பொருள்களும், உயிரினங்களும் அமைந்தவை ஆகும். இந்த இயற்கையோடு ஒத்து வாழ்ந்தால், வாழ்க்கை இனிமையாக இருக்கும். இயல்பாக இருக்கின்ற வகை இயற்கை ஆகும். செயல் செய்கின்ற வகை செயற்கை ஆகும். வாழ்கின்ற வகை வாழ்க்கை ஆகும். திருவள்ளுவரும், இன்பம் வந்த காலத்தில் மகிழாதவன், துன்பம் வந்த காலத்திலும் வருந்தமாட்டான் என்கிறார். இதனை,

**இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்** (குறள் 629)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.



Scanned with CamScanner

**வாழ்வின் நோக்கம் :**

உலகில் பிறந்த அனைவரும் இறப்பது என்பது இயற்கை ஆகும். உடல் அழியக் கூடியது. ஆன்மா அழிவற்றது. உடல் என்பது பொருள். ஆன்மா என்பது ஆவி. உடல் ஸ்தூலமானது. ஆன்மா தெய்வீகமானது. ஒரு பலூனில் காற்று இருக்கும் வரைதான் அதன் அலகு, வடிவம், அளவும் உள்ளது. காற்று வெளியேறியவுடன் அதன் வடிவம், அழகு, அளவுகளில் மாற்றம் அடைந்து காற்று சுற்றுப்புறத்தில் கலக்கிறது.

நமது வாழ்வின் இலட்சியம் பரம்பொருளை அடைவது ஆகும். உடல் என்னும் வாகனத்தில் பயணம் செய்யும் பயணி என ஆன்மாவை எடுத்துக் கொள்ளலாம். தண்டவாளங்கள் வாழ்க்கையின் வழியைக் குறிக்கிறது.

மனித வாழ்வின் நோக்கம் இறைநிலை உணர்தல், அறிவு முழுமை பெறுதல் ஆகும். வாழ்க்கையில் குற்றங்களை போக்கி, இயற்கை இன்பங்களைத் துய்த்து அறிவு நிறைவும், அமைதி அடைதலும், மனிதரிடையே அன்பும், கருணையும் கொண்டு தெய்வீக மனிதராக வாழ்தலும் மனித வாழ்வின் நோக்கம் ஆகும். வாழுகின்ற காலத்தில் அறநெறியை கடைபிடித்து அன்பும் சமாதானத்துடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். திருவள்ளுவரும், அறவழியில் இல்லற வாழ்க்கையை நடத்தினால் வேறு வழிகளில் சென்று அடைய வேண்டியது ஒன்றும் இல்லை என்கிறார். இதனை,

> **அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
> **போஒய்ப் பெறுவது எவன்** (குறள் 46)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.

**வாழ்க்கைத் தத்துவம் :**

வாழ்க்கை வெற்றிமிக்கதாக அமையவேண்டுமாயின் நாம் இயற்கையையும், சமுதாயத்தையும் உணர்ந்து மதித்து வாழவேண்டும். அவற்றோடு எந்தக் காரியத்துக்காக இந்தப் பிறவியை எடுத்து வந்தோமோ அந்த நோக்கத்திற்கு ஒத்ததாக பிறவித் தொடரை முடித்துக் கொண்டு வீடுபேறு அடையவேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்கு ஒத்ததாக வாழும்முறை அமையவேண்டும். அப்போதுதான் துன்பத்தைத் தோற்றுவித்துக் கொள்ளாமலும் வாழலாம். தவறுதலாக நாம் தோற்றுவித்துக் கொள்ளும் துன்பத்தில் இருந்தும் மீண்டு கொள்ளலாம். பிறரால் தோற்றக்கூடிய துன்பங்கள் இருந்தும் நம்மை நாம் காத்துக் கொள்ளலாம். எனவே வாழ்க்கையின் தத்துவத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் பெற்று அதன்படியே வாழ்ந்து வரவேண்டும்.

வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தத்துவங்கள் மொத்தம் 12 ஆகும். அவை 4 தொகுதிகளாக அமைந்து உள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் 3 விளக்கங்கள் உள்ளன. அவை 1. தேவைகள் மூன்று 2. பாதுகாப்புகள் மூன்று 3. அறநெறிகள் மூன்று 4. அறிவின் படி நிலைகள் மூன்று ஆகும்.

**தேவைகள் மூன்று :**

வாழ்க்கைத் தத்துவத்தில் தேவைகள் 3 வகைப்படும். அவை, (அ) பசி, தாகம் ஆகியவற்றால் எழும் துன்பங்களை ஒட்டி ஏற்படும்



Scanned with CamScanner

தேவைகள் (ஆ) வெப்ப, தட்ப மாறுதலால் ஏற்படும் தேவைகள் (இ) உடல் கழிவுப் பொருள்களின் உந்துவேகத்தின் விளைவால் எழும் தேவைகள் என்ற மூன்று வகையில் அமைகின்றன.

**பாதுகாப்புகள் மூன்று :**

மனித வாழ்க்கை துன்பமின்றியும், தடையின்றியும் தொடர்ந்து நடைபெற மனிதனுக்குச் சில பாதுகாப்புகள் தேவை. இல்லையெனில் துன்பம் ஏற்படலாம். அதனால் வாழ்க்கையே முடிந்துவிடலாம். காப்புகள் 3 வகைப்படும். அவை (அ) இயற்கைச் சீற்றம் (ஆ) வேற்றுயிர்ப் பகை (இ) தற்செயலான விபத்துக்கள் ஆகும்.

**அறநெறிகள் மூன்று :**

மனிதன் சமுதாயமாகச் சேர்ந்து வாழப் பழகி விட்டான். இனி இந்த நிலையை மாற்றிக் கொண்டு விலங்குகளைப் போல் தனித்தனியாக வாழ முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு மனிதனுக்கும் பலருடைய உழைப்புத் தேவைப்படுகிறது. அறநெறியில் குழப்பம் விளையாமல் இருக்கவும், தீமைகள் தோன்றாமல் இருக்கவும், விலங்கினங்களுக்குத் தேவைப்படாத ஒன்று மனிதனுக்குத் தேவைப்படுகிறது. அதுவே அறநெறி ஆகும். அறநெறிகள் மூன்று வகைப்படும். அவை (அ) ஒழுக்கம் (ஆ) கடமை (இ) ஈகை ஆகும்.

**(அ) ஒழுக்கம் :**

ஒழுக்கம் என்னும் தமிழ்ச்சொல் ஒழுங்கு என்பதில் இருந்து வந்தது ஆகும். இயற்கையில் எதைப் பார்த்தாலும் அது ஓர் ஒழுங்குடன் இயங்குவதைக் காணலாம். இயற்கையின் ஒழுங்கு தவறினால் எல்லாமே தவறிப் போய்விடும்.

நம்மை நல்வழியில் நெறிப்படுத்தி மேன்மையோடு கூடிய வாழ்வில் தழைக்கச் செய்யும் பண்பே ஒழுக்கம் ஆகும். வாழ்வில் ஒழுங்கைக் கடைப்பிடித்து வாழ்வதே நாம் தலைச்சிறந்து வாழ வழிவகுக்கும். ஒழுங்கு என்பது சாட்சிகள் இல்லாத இடத்திலும் தவறு இழைக்காமல் நேர்மையாக நடப்பது ஆகும். இதை முன்னோர் அறநெறிகள், அனுபவங்கள் மூலம் ஒழுக்கத்தை உணர்த்திச் சென்றுள்ளனர்.

எண்ணம், சொல், செயல் ஆகியவற்றால் தனக்கும், பிறருக்கும் நிகழ்காலத்தில் உடலுக்கோ, உள்ளத்திற்கோ, அறிவிற்கோ துன்பம் தராத செயல்கள் எல்லாம் ஒழுக்கம் எனப்படுகிறது. இதனை மீறும் செயல்கள் தீயசெயல்கள் எனப்படும். எந்த ஒரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. ஒரு மனிதனின் செயல் அவனையும் பாதிக்கலாம். எனவே துன்பம் தனக்கோ, பிறருக்கோ தோன்றாமல் ஒவ்வொருவரும் தத்தம் செயலை வகுத்துக் கொள்ளவேண்டும். அத்துன்பம் உடலுக்கும் கூடாது. அறிவிற்கும் கூடாது. எதிர்காலத்திலும் தோன்றக் கூடாது. அத்தகு செயல்களை மட்டும் புரிதலையே ஒழுக்கம் என்கிறோம். திருவள்ளுவரும், ஒழுக்கமானது எல்லார்க்கும் பெருமையினைத் தருவதால் அவ்வொழுக்கம் உயிரைவிட மேலாகக் காக்கப்படும் என்கிறார். இதனை,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் (குறள் 131)

என்ற குறளில் குறிப்பிடுகிறார். நன்னடத்தைக்கு அடிப்படையே ஒழுக்கம்தான். ஒழுக்கம் இல்லாதவரை யாருமே மதிக்கமாட்டார்கள்.



Scanned with CamScanner

(ஆ) கடமை :

ஒவ்வொருவருக்கும் சமூக கடமை உண்டு என்பதை உணர வேண்டும். ஒவ்வொருவடைய அறிவு, ஆற்றல், அனுபவம், திறன் ஆகிய அனைத்தும் சமூகத்திடமிருந்து பெறப்பட்டது ஆகும். ஆகவே சமுதாயத்திற்கு பிரதிபலனாக ஏதேனும் ஒரு கடமையைச் செய்தாக வேண்டும். ஒவ்வொருவரும் சமூகத்தில் சிறந்த குடிமகனாக திகழ்வதே முதல் கடமையாகும்.

(இ) ஈகை :

மனிதர்களின் சிறப்பு பண்புகளில் முக்கியமானது ஈகையாகும். பிறர் துன்பப்படுவதை கண்டு, இரக்கம் கொண்டு துன்பத்தை போக்க முயற்சிக்கும் எண்ணம் ஆகும். வாழ்வை இழந்தவர்கள், பாதசாரிகள், ஏழைகள், கைவிடப்பட்டோர், அனாதைகள் அனைவருக்கும் அரசாங்கத்தால் மட்டுமே அனைத்து நலத்திட்ட உதவிகளை பூரணமாக செய்திவிட இயலாது. அதனால் ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற உதவியை வழங்கிட வேண்டும். ஆகவே உடை, உணவு, இருப்பிடம் இன்றி கஷ்டப்படும் நபர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்யும் பண்புகளை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளவேண்டும். திருவள்ளுவரும், பொருளற்ற ஏழையின் பசியைப் போக்குவதே செல்வத்தை தனக்குப்பின் சேமித்து வைக்கும் இடமாகும் என்கிறார். இதனை,

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி (குறள் 226)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.

அறிவு நிலைப்படிகள் மூன்று :

ஒவ்வொருவரின் தவறுகளும் அவரை மட்டுமின்றி ஓரளவில் சமுதாயத்தையும் பாதிக்கின்றன. இந்த நிலை தோன்றாமலும், வளராமலும் இருக்க ஒவ்வொருவரும் தத்தம் அறிவை உயர்ந்த நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். மனிதன் தனது பிறவியின் நோக்கமான இறைநிலையை உணர்ந்து அமைதி பெற மூன்று படித்தளங்களைக் கடக்க வேண்டி உள்ளது. அம்மூன்று படித்தளங்களே 'அறிவு நிலைப்படிகள்' ஆகும். அவை, 3 வகைப்படும். 1. நம்பிக்கை 2. ஞானமார்க்கம் 3. முழுமைப்பேறு ஆகும்.

வாழ்க்கை முறை :

மனித சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் அறிவின் திறமையாலும், உடல் உறுப்புகளின் செயல் திறமையினாலும் உற்பத்தி செய்து கொடுக்கும் பொருள்களின் மூலம் மனிதகுலம் மொத்தம் வாழ்ந்து வருகிறது. இவ்வாறு ஒவ்வொருவருடைய தினசரி வாழ்க்கையும் அமைந்து உள்ளது.

மனிதன் பிறக்கிறான். சிறிது காலம் வாழ்கிறான். பின்னர் இறந்து விடுகிறான். வாழும் காலத்தில் குடல் சீரணிக்கக் கூடிய அளவுக்கு மேலாக உணவை உட்கொள்ள முடியாது. உடல் சுமக்கும் அளவுக்கு மேலாக உடைகளை அணியவும் முடியாது. நின்றால் ஒன்பதுக்கு ஒன்பது



Scanned with CamScanner

அங்குலம் பூமி, படுத்தால் ஒன்றரை அடிக்கு ஆறடி அளவு நிலம் உட்கார்ந்தால் மூன்றடிக்கு மூன்றடி தரை. இதற்கு மேல் எவராலும் அனுபவிக்கவும் முடியாது.

எவ்வளவு தான் ஒரு மனிதன் சம்பாதித்து இருப்பு வைத்திருந்தாலும் இறக்கும்போது அவற்றில் ஒரு துளியைக் கூட எடுத்துக் கொண்டு போகவும் முடியாது. இந்த உண்மைகளை மனித அறிவுக்கு எட்டாதவை அல்ல. சிந்தித்துச் செயலாற்றிப் பழகிக் கொள்ள வேண்டும். இயற்கை என்னும் பேராற்றலினுடைய அறிவு தக்க தருணத்தில் தக்க சூழ்நிலையை அமைத்து மனித அறிவுக்குத் தெளிவாக இந்த அறிவைப் புகட்டி விடும். திருவள்ளுவரும், நல்ல குடும்பத்தில் பிறந்தவர் ஒழுக்கம், வாய்மை, பழிக்கு நாணுதல் ஆகிய மூன்றில் ஒருநாளும் தவறமாட்டார் என்கிறார். இதனை,

> ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
> இழுக்கார் குடிப்பிறந் தார் (குறள் 952)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.

## 3. குடும்பம்

மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு குழுக்களில் பங்கேற்றுச் செயல்படுகிறான். அவற்றுள் முதன்மையானது குடும்பமாகும். இதில்தான் அவனுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி அமைகிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் இக்குழுவோடு பிணைப்பு வைத்திருக்கிறான். அவனுடைய உடல் உள்ளத் தேவைகளைப் பெரிதும் நிறைவேற்றி அவனுடைய வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது குடும்பமே ஆகும்.

குடும்பம் என்பது மிகவும் பாதுகாப்பான சிறிய சமூக நிறுவனம் ஆகும். கன்பூசியஸ் கூற்றுப்படி, ஒரு அரசின் அடிப்படை 'குடும்பம்' ஆகும். குடும்பத்தில் பல உறவுகளும் பிணைந்து இருப்பதால் முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் இருக்கும். ஆனால் அவற்றை அவ்வப்போது தீர்த்து கொள்ள வேண்டும். கணவன்-மனைவி, பெற்றோர்களுடன், சகோதர-சகோதரிகளுடன் கலந்துரையாடி கருத்துக்களை பகிர்ந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் பிறரின் கருத்துக்களை, சுயகௌரவத்தை போற்றி பாதுகாக்க வேண்டும். குறிப்பாக பெரியவர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் வாக்குவாதம் செய்யாமல் விட்டு விடுவது சாலச் சிறந்தது ஆகும். மாறாக சிறிய விசயத்திற்காக வாக்குவாதம் செய்து கருத்து யுத்தம் நடத்தி தீராத பகையை உருவாக்கும் அளவிற்கு செல்லக்கூடாது. நமது குடும்ப உறுப்பினர்களை குறையுடன் ஏற்றுக் கொள்வதே நிறைவான குடும்ப வாழ்க்கைக்கான அடிப்படையாகும். திருவள்ளுவரும், இல்வாழ்வில் அன்பும் அறமும் இணைந்து நிற்பின் பண்பும் பயனும் நிறைந்த வாழ்வாக அமையும் என்கிறார். இதனை,

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது (குறள் 45)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.



Scanned with CamScanner

குடும்ப அமைதி :

சமுதாயத்தின் அடிப்படை அலகாக குடும்பம் திகழ்கிறது. நம் நாட்டின் பண்பாட்டினை உலகிற்கு எடுத்துச் செல்வது குடும்ப அமைப்பு முறையே ஆகும். நம் நாட்டின் குடும்பத்தில்தான் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் மரபு பின்பற்றப்பட்டது. இதுதான் ஐரோப்பிய நாடுகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் சமூக காரணமாகத் திகழ்கிறது. குடும்பம் என்பது கணவன், மனைவி, குழந்தைகள், பெற்றோர்கள், உடன் பிறந்தவர்களின் இணைப்பே கூட்டுக் குடும்பம் முறையாகும். அமைதியாக திகழும் குடும்பம் கோயில் ஆகும். எனவே சமுதாயமும் கூட்டாக அமைதியுடன் இருந்து வந்தது. இன்று கூட்டு குடும்பமுறை ஒழிக்கப்பட்டு தனிக்குடும்ப முறை பின்பற்றப்படுகிறது. இதனால் குடும்பங்களில் அமைதி குறைந்து விட்டது. எனவே சமூகத்திலும் அமைதி குறைந்து காணப்படுகிறது.

நம் குடும்ப உறுப்பினர்களுக்கு அமைதியான, திருப்தியான வாழ்க்கையை அமைத்து தரவேண்டும். குடும்ப கட்டுப்பாடு என்ற பெயரில் உறுப்பினர்களின் சுதந்திரத்தை பறிக்கக் கூடாது. குடும்பத்தின் வருமானம் பெருக உறுப்பினர்களிடையே அமைதி நிலவ அன்பு, அரவணைப்பு, அமைதி நிலை கடைபிடிக்க வேண்டும். குடும்ப உறவுகளில் பிணக்குகள் ஏற்பட 4 காரணங்கள் உள்ளன. அவை தேவை, அளவு, தன்மை, காலம் ஆகும். ஆகவே குடும்ப உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் மதித்து புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து அன்போடு பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக குடும்ப உறுப்பினர்களின் நிறைகளை மனதில் கொண்டு குறைகளை மறக்க வேண்டும். திருவள்ளுவரும், குற்றம் சாராது தன் குடியை உயர்த்தி வாழ்பவனை உயர்ந்தோர் எல்லாம் தமது சுற்றமாக நினைத்துச் சூழ்வர் என்கிறார். இதனை,

> **குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
> **சுற்றமாச் சுற்றும் உலகு** (குறள் 1025)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.

எத்தனையோ நன்மைகள் பிறரிடம் இருந்து நமக்குக் கிடைக்கின்றன. சிலவற்றில் அவர்கள் விருப்பம்போல் செய்தார்கள். அவர்களது சில செயல்கள் நமக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். நூறு நன்மைகளை நான் அனுபவிக்கின்றபோது, இரண்டு நன்மைகளை அவர்களுக்காக நான் விட்டுக் கொடுத்தால் என்ன? என்று அவர்கள் விருப்பம்போல் செய்வதைப் பொறுத்துப் போவதுதான் சகிப்புத்தன்மை ஆகும். சகிப்புத்தன்மை என்பது 'பொறுமை' ஆகும்.

அதேபோல அவர்கள் செய்வதைச் செய்யட்டும். எந்த அளவில் நான் அவர்களுக்கு உதவியாக இருப்பேன் எனப் பார்த்து எப்பொழுதுமே உதவிக் கொண்டிருப்பதுதான் விட்டுக் கொடுத்தல் ஆகும். சிலசமயம் நமக்குச் சிரமம் இருந்தாலும், சரி அவர்கள் நன்றாக இருந்தால் போதும். அந்த அளவுக்குக் கடைசி வரையில் ஒருவருக்கு விட்டுக் கொடுப்பதில் தவறு ஏதும் இல்லை. இதுதான் 'தியாகம்' என்பது ஆகும். இப்படிச் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் என்ற மூன்றைச் சரியாகத் தெரிந்து கொண்டோம் எனில் குடும்பத்தில் அமைதி நிலவும்.



Scanned with CamScanner

## 4. சகோதரத்துவம்

சகோதரம் என்ற வார்த்தையைச் சக + உதரம் என்று பிரிக்கலாம். ஒரே வயிற்றிலிருந்து தோன்றியவர்கள் என்பதைக் குறிக்கும். இந்த பூமியில் தோன்றி உள்ள தாவரங்கள், புழுப்பூச்சிகள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் தாயாக விளங்குவது பூமிதான். எல்லா உயிரினங்களும் வயிறார உண்ணும் அளவு உற்பத்தியைக் கொடுக்கிறது. அவை சிரமமின்றி வாழ்வதற்கேற்ப தட்ப வெப்ப நிலையை உருவாக்குகிறது. எல்லாவற்றுக்கும் தனித்தனியாக வாழ்வதற்குச் சுதந்திரத்தையும், கூட்டாக வாழ்வதற்கு அன்பையும் ஒன்றுக்கொன்று உதவி வாழ்வதற்குக் கருணையையும் இயல்பாக மலரச் செய்கிறது. திருவள்ளுவரும், அன்போடு பழமையாகக் கொண்ட நண்பர் தனக்கு அழிவு தருவனவற்றைச் செய்தாலும் அன்பு குறையமாட்டார் என்கிறார். இதனை,

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர் (குறள் 807)

என்ற குறளில் குறிப்பிடுகிறார். பாரதியும்,

காக்கை குருவி எங்கள் சாதி
நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குமிடமெல்லாம் நாமின்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

என்று கூறுகின்ற வகையில் காக்கை, குருவி இவையெல்லாம் உயிரினங்கள். நாமும் உயிரினங்கள் என்ற வகையில் தான் உள்ளோம். ஆகவே இருவரும் ஒரே சாதி தான். பசி, தாகம் என்ற உணர்வுகள் இருவருக்கும் உண்டு. பெற்றோர், குழந்தைகள் என்ற பாசம் உண்டு. பிறப்பு, இறப்பு என்பது உண்டு. இடைப்பட்ட வாழ்க்கையில் இன்பம் துன்பம் என்பது உண்டு. ஆக அனைத்து உயிரினங்களும் ஒரே சாதிதான். நீள்கடலும், மலையும் அணுக்கள் கூட்டம் ஆகும். எனவே நாம் எல்லோரும் சகோதரர்களே என்று எண்ண வேண்டும்.

## 5. ஐவகைக் கடமை(பொறுப்பு)கள்

ஒவ்வொரு மனிதனுக்கும் ஐவகைக் கடமைகள் உள்ளன. அவை, (அ). தனக்கு (ஆ). குடும்பம் (இ). சுற்றம் (ஈ). சமூகம் (உ). உலகம் என்பது ஆகும்.

### (அ) தனக்கு :

தனி மனிதன் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு மூன்றில் முழுமை அடைய வேண்டும். தான் என்பது மூன்று வகையில் வரும். அவை, 1. உடல்நலம் 2. மனவளம் 3. பொருள்வளம் ஆகும்.

வாழ்க்கைக்கு பொருள் மிகமிகத் தேவை ஆகும். அதை நேர்மையான வழியில் பெற உடல் நலமும், அறிவு வளமும் தேவைப்படுகிறது. உடல்நலமும், அறிவு வளமும் பெருக மனவளம் முக்கியப் பங்காற்றுகிறது. இதற்கு நான்கு வகையான கல்வியில் மேலோங்கி இருக்க வேண்டும். அவை, 1. எழுத்தறிவு 2. தொழிலறிவு 3. இயற்கைத் தத்துவம் 4. பண்பாட்டுக் கல்வி ஆகும்.



Scanned with CamScanner

முதல் இரண்டில் நாம் வெகுதூரம் முன்னேறி உள்ளோம். ஆனால் ஒழுக்கப் பழக்கங்கள் என்ற பண்பாட்டுக் கல்வி சரியான முறையில் கற்றுத் தராத நிலை நீடிப்பதால் பொருள் ஈட்டுவதில், பொருள் துய்ப்பதில் உள்ள உயர்வை நாம் நல்ல முறையில் அனுபவிக்க முடியாமல் உள்ளதைப் பார்க்கின்றோம்.

இந்த நிலை மாற, தன்னை உணர்ந்து இறைநிலையைப் பற்றிய அறிவை இயற்கைத் தத்துவத்தை எல்லோருமே பெறக்கூடிய தகுதியை அடைய வேண்டும். அப்போது தன்னை மட்டும் அல்லாமல் இந்த உலகத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும் துன்பம் அளிக்காமல் முடிந்தவரை அவற்றிற்குத் தன்னால் ஆன உதவியைச் செய்யக் கூடிய நிலைக்கு உயரலாம். அதுதான் தனி மனிதன் உடனே செய்யவேண்டிய முக்கிய கடமை ஆகும்.

(ஆ) குடும்பம் :

குடும்பம் என்பது நம்மைப் பெற்ற தாய், தந்தையர், வாழ்க்கைத் துணை, குழந்தைகள் ஆவர். இவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளில் இருந்து என்றும் தவறக் கூடாது. நம்மைப் பத்துமாதம் வயிற்றில் சுமந்து தன் உயிரையும் துச்சமென நினைத்து நம்மைப் பெற்று இரவு பகல் பாராது கண் துஞ்சாது தன்னுடைய நலன்களையெல்லாம் நமக்காகத் தியாகம் செய்தவள் தாய். ஆதலால் தான், **'தாயில் சிறந்ததொரு கோயிலுமில்லை'** என்கிறோம்.

குடும்பம் என்பது இரத்த உறவாலோ அல்லது திருமணம் போன்ற சட்டபூர்வமான முறைகளிலோ தொடர்புபட்ட ஒரு உறைவிடக் குழுவாகும். அனைத்துலக மனிதஉரிமைகள் சாசனத்தின் 16(3) ஆவது விதிப்படி "குடும்பம் என்பது சமூத்தின் இயல்பானதும், அடிப்படையானதுமான குழு அலகாகும் என்பதுடன், அது சமூகத்தாலும் தேசத்தாலும் பாதுகாக்கப்படுவதற்கு தகுதி பெற்றுள்ளது". கணவன் - மனைவி தொடர்பு, பெற்றோர் - பிள்ளைகள் தொடர்பு, உடன் பிறந்தோருக்கு இடையிலான தொடர்பு போன்ற அம்சங்களில் அநேகமாக எல்லாவகைக் குடும்பங்களும் ஒத்த இயல்புகளை வெளிப்படுத்தினாலும், வேறு பல அம்சங்களின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாக அமைகின்றன. குடும்பங்களின் அமைப்பைக் கருத்தில் கொண்டு அவற்றை, மணவழிக் குடும்பம், தனிக்குடும்பம், விரிந்த குடும்பம் என வகைப்படுத்தலாம்.

குழந்தைகள் சமுதாயத்தில் உயர்வான இடத்திற்குச் சென்று குடும்பத்திற்கும், சுற்றத்திற்கும், சமுதாயத்திற்கும் நல்ல தொண்டாற்ற வேண்டியவர்கள். இவர்களுக்கு எல்லாம் நாம் ஆற்ற வேண்டிய கடமைகளில் இருந்து தவறாமல் நலம் செய்ய வேண்டும். திருவள்ளுவரும், இல்வாழ்க்கையை மேற்கொண்டு இருப்பவன். பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவருக்கும் நல்வழியில் துணைநிற்பவன் என்கிறார். இதனை,

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை** (குறள் 41)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.



Scanned with CamScanner

(இ) சுற்றம் :

நாம் மட்டுமே தனியாக பிறந்து விடுவதில்லை. சிலருக்கு மட்டுமே இந்த வாய்ப்பு அமைகிறது. பெரும்பாலான குடும்பத்தில் அண்ணன், தம்பி, அக்காள், தங்கை என்று சிலர் பிறந்து வளர்ந்து பிரிந்து வாழக் கூடிய நிலைமைகள் உள்ளன. ஆனாலும் சகோதர சகோதரிகள் சக உதிரத்தைக் கொண்டவர்கள். அவர்கள் நன்றாக இருந்தால் நாம் நன்றாக இருப்போம். அவர்கள் துன்பப்பட்டால் அது நமக்குத் துன்பத்தைக் கொடுக்கும். அவர்களுக்கும் ஆற்றவேண்டிய கடமையில் இருந்து தவறக் கூடாது. அவர்களோடு எப்பொழுதும் இணைந்து நட்பு நலத்தோடு இருக்க நம் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். இதைத்தான் 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பார்கள்.

(ஈ) சமூகம் :

இன்பம், துன்பம் ஆகிய உணர்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு சேர்ந்து வாழும் மக்கள் குழு 'சமூகம்' எனப்படும். தங்களுடைய பொதுவான நன்மைகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் சேர்ந்திருந்து, தங்களுக்குரிய கடமைகளையும் உரிமைகளையும் இன்னின்னவை என்று அமைத்துக் கொண்டு வாழும் மக்கள் அமைப்பும் சமுதாயம் என்றே வழங்கப்படும்.

ஒரே சமுதாயத்தில் பல சமூகங்கள் இருப்பதும் உண்டு. இன்பம், துன்பம், கௌரவம் ஆகிய உணர்வுகள் சமூகத்தின் நாடித் துடிப்புகள் ஆகும். ஒற்றுமை, கடமை, உரிமை, பங்கேற்பு, பாதுகாப்பு, வளர்ச்சி ஆகியவை சமுதாயத்தின் உயிர்மூச்சு ஆகும். சமுதாயம், சமூகம் இவை இரண்டுமே ஒன்றோடு ஒன்று இணைந்த கூட்டு வாழ்க்கை அமைப்புகளாகும்.

நீ மற்றவர்களுக்காகவும், மற்றவர்கள் உனக்காகவும் பங்களிப்புப் பணி செய்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவர் உணர்வை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரின் உரிமைக்காகவும் எல்லாரும் குரல் கொடுக்க வேண்டும். மக்கள் எல்லாரும் தங்கள் பணி பங்களிப்பைச் செய்ய மகிழ்ச்சியுடன் முன்வர வேண்டும்.

தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதைப் போலவே, பொதுத் தேவைகளையும் நிறைவேற்றுவதில் பங்கேற்க வேண்டும். குடும்பம் என்பது நல்வாழ்வின் ஆதாரம் ஆகும். சமூகம் என்பது நிம்மதியான வாழ்வுக்கு வகை செய்கிறது. சமுதாயம் என்பது கடமை, உரிமை, உடைமை, பாதுகாப்பு, முன்னேற்றம் ஆகியவற்றை எல்லாருக்கும் வழங்க முற்படுகிறது.

வாழ்க்கை என்று எடுத்துக் கொண்டோமானால் அதற்கு எண்ணிறந்த பொருள்கள் தேவைப்படுகின்றன. அன்றாடம் நாம் உபயோகித்துக் கொண்டு இருக்கின்ற பொருள்கள் அத்தனையும் தனி மனிதன் ஒருவனால் உருவாக்கிக் கொடுக்க இயலாது. சமுதாயத்தில் மக்களின் உழைப்பினால்தான் அவற்றை நாம் பெற்று அனுபவித்துக் கொண்டு உள்ளோம். எனவே நாம் ஒவ்வொருவரும் சமுதாயத்திற்குக் கடன்பட்டு இருக்கின்றோம். கடமை என்பது 'கடன்' என்ற சொல்லில் இருந்து வந்தது ஆகும். திருவள்ளுவரும், அறிவார்ந்த பெரியோர் கூட்டத்தில் தானும் ஒருவனாகச் சேர்ந்துள்ளவனுக்குப் பகைவர் செய்யக்கூடிய துன்பம் ஏதமில்லை என்கிறார். இதனை,

> தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
> செற்றார் செயக்கிடந்த இல் (குறள் 446)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.



Scanned with CamScanner

சமுதாயம் என்ற வளத்தில் தான் தனி மனிதனுடைய வளமும் அடங்கி உள்ளது. அதேபோல் தனி மனிதன் ஒவ்வொருவரும் தன் கடமையை உணர்ந்து செயலாற்றும்போதுதான் சமுதாய நலம் காக்கப் பெறும். எனவே ஒவ்வொருவரும் அவரவர் நிலையில் என்னென்ன கடமைகள் ஆற்ற வேண்டுமோ அதில் குறைவு ஏற்படாமல் பார்த்துக் கொண்டால் அது தன்னை மட்டுமல்லாமல் குடும்பம், சுற்றம், ஊர், உலகம் என்று இப்படி எல்லா வகையினருக்கும் அதனுடைய நன்மைகள் போய்ச் சேர்த்து உலக அளவில் செழிப்பான நிறைவான வாழ்வை எல்லோருக்கும் அளிக்க முடியும்.

(உ) உலகம் :

மனிதன் தன்னுடைய வாழ்க்கை நிறைவாக இருக்க வேண்டுமென்றால் வாழ்க்கைக்கு உண்டான சிறப்பான பண்புகளை அவன் பெற்றிருக்க வேண்டும். சிந்தனை ஆற்றலால் ஆறாவது அறிவு பெற்ற மனிதன் தன்னுடைய அறிவைப் பெருக்கி பல வழிகளில் உயர்வு பெற்று வந்து உள்ளான். தொழில் வளர்ச்சியிலும், இயற்கை வளங்களை வாழ்வின் வளமாக மாற்றுவதிலும் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளான். திருவள்ளுவரும், தமது கடமையை உணர்ந்து நல்ல குணங்களுடன் பொருந்தி இருக்கும் சான்றோரிடம் அந்த நற்பண்புகள் இயல்பாகவே அமைந்து நிற்கும் என்கிறார். இதனை,

கடன்என்ப நல்லவை நல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (குறள் 981)

என்ற குறளில் குறிப்பிடுகிறார். மேலும் இறந்தோர், தெய்வம், விருந்து, உறவினருடன், தனக்கும் ஐந்து புலன்களாலும் அறம்பேண இல்வாழ்வோன் உரியவன் என்கிறார். இதனை,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (குறள் 43)

என்று குறளில் குறிப்பிடுகிறார்.

உலகம் எல்லா வளங்களையும் பெற்றிருந்தால்தான் அதிலுள்ள எல்லா நாடுகளும் அமைதியாக வாழ முடியும். முன்பெல்லாம் ஓர் ஊரில் வசிப்பவர்கள் மற்ற ஊரைப் பார்க்க முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டு இருந்தார்கள். இப்பொழுது உலகம் சுருங்கி விட்டது. எல்லா நாட்டவரும் எல்லா நாட்டிற்கும் சென்று பணியாற்ற வேண்டிய நிலைமை உள்ளது. அதுமட்டுமல்ல இன்றைய விஞ்ஞான உலகம் ஆபத்துக்கள் நிறைந்ததாக ஆகிவிட்டது. எனவே, மக்கள் எல்லோரும் சகோதரர்களே என்ற உண்மை நிலைமை உணரச் செய்து ஒருவர் மற்றவருக்கு துன்பம் கொடுக்கக் கூடாது என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். **'யாதும் ஊரே யாவரும் கேளீர்'** என்ற கணியன் பூங்குன்றனார் பாட்டிற்கு ஏற்ப மதிப்பு அளித்தோம் என்றால் இந்த உலகம் நட்போடும் ஒருவர் தேவையை மற்றவர் உணர்ந்து ஈகை செய்தும் எல்லோருடைய துன்பத்தைப் போக்கியும் வாழக் கூடிய ஓர் உன்னதமான நிலைக்கு உலக மக்கள் அனைவரும் வரமுடியும். உலகில் எந்தக் கண்டுபிடிப்பு நிகழ்ந்தாலும் அது உலகின் அனைவருக்குமே சொந்தமாகும். அந்த அறிவை வைத்துக் கொண்டு பொருள் பெருக்கி உலகின் பிற பகுதிகளுக்கு அளிக்காமல் முடக்கி வைப்பது சரியன்று. முடக்குவது உலக வளத்தையும் அமைதியையும் குலைக்கவே வழி செய்யும்.



Scanned with CamScanner

# உ. மனித உரிமைகளும் அமைப்புகளும்

மனிதஉரிமை என்பது எல்லா மனிதர்களுக்கும் உரித்தா அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் ஆகும். இந்த உரிமைக "மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையான விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியா சில உரிமைகளாக" கருதப்படுகின்றன.

## 1. தோற்றுவாய்

மனிதகுலத்தைச் சார்ந்த ஒவ்வொரு நபரின் அங்கீகரிக்கப்பட் இயற்கையாய் அமையப் பெற்ற கடமையும் சமமான மாற்ற முடியா உரிமைகளும் மனித உரிமை தோற்றத்திற்கான மனித சமுதாய உலகம் என்ற அமைப்பின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டபோது பேச்சுரிமை அச்சமற்றநிலை நிறைவேற்றிக் கொள்ள விரும்பும் தேவை போன்றவை மக்களின் உயர்ந்த விருப்பமாக இருந்தன.

மனிதன் தமக்கென ஒரு உறைவிடம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படாதபோதும், கொடுங்கோன்மைக்கு எதிரான கலவரத்தில் ஈடுபடாமல் இருப்பதற்கும் சட்ட விதிகளின்படி மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், நாடுகளுக்கு இடையே நட்புறவில் முன்னேற்றத்தைக் கொண்டு வருதல் அவசியமாகும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள், அடிப்படை மனித உரிமைகள்மீதும், கடமைமீதும், ஆண் - பெண் இருபாலரின் சமஉரிமைகள் மீதும் தமது நம்பிக்கையினை உறுதிப்படுத்தி உள்ளனர். மேலும் சமுதாய வளர்ச்சியில் மேம்பாடு காணவும், முழுச் சுதந்திரம் கொண்ட உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்காகவும் ஆர்வம் கொண்டு உள்ளனர்.

ஐக்கிய நாடுகளோடு ஒத்துழைப்பதிலும், மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்திற்கான உலகளாவிய நன்மதிப்பை அளிப்பதிலும் அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் வாக்குறுதி அளித்துள்ளன. இவ்வுரிமைகள் மற்றும் சுதந்திரம் பற்றிய பொதுவான கருத்து என்பது, வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஆகையால் பொதுச் சபையானது மனிதஉரிமை பற்றிய உலகளாவிய கருத்தினை தற்பொழுது நடைமுறைப்படுத்துகிறது.

எல்லா மக்களுக்காகவும், எல்லா நாடுகளுக்காகவும் என்ற பொதுவான சாதனையானது, ஒவ்வொரு தனி மனிதனும், ஒவ்வொரு சமூக அமைப்பும் இக்கருத்தை மனதில் நிலை நிறுத்தி உள்ளன என்பதை உணர்த்துவது ஆகும். கல்வி மற்றும் பயிற்சிகள் மூலமாக இவ்வுரிமைகள், சுதந்திரத்தின் மீதான நன்மதிப்பை உருவாக்கவும், தேசிய சர்வதேச அளவிலான வளர்ச்சிக்கான வழிமுறைகள் மூலமாக பயனுள்ள அங்கீகாரத்தைப் பாதுகாக்கவும், மாநில மக்களிடையேயும் சட்ட அதிகாரங்களுக்கு உட்பட்ட எல்லையில் வாழும் மக்களிடையேயும் இதற்கான முயற்சி இருக்கும்.

Scanned with CamScanner

வரலாறு :

மனித உரிமையின் வரலாறு பல ஆயிரம் ஆண்டுகளை உள்ளடக்கி உள்ளதுடன் பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக் காலம் முழுவதிலும் சமய, பண்பாட்டு, மெய்யியல், சட்டம் ஆகிய துறைகளின் வளர்ச்சிகளினால் வளம் பெற்றுள்ளது.

பல தொன்மையான ஆவணங்களும், பிற்காலத்தில் சமயமும், மெய்யியலும் மனித உரிமைகள் எனக் கருதப்படக்கூடிய பல்வேறு கருத்துருக்களைத் தம்முள் அடக்கியிருந்தன. இவற்றுள், கிமு 539ல் பாரசீகப் பேரரசன் சைரஸ் என்பவனால் வெளியிடப்பட்ட செய்தியும் கிமு 272-231 காலப்பகுதியில் இந்தியப் பேரரசனான அசோகன் வெளியிட்ட அசோகனின் ஆணையும், கிபி 622ல் முகமது நபியால் உருவாக்கப்பட்ட மதீனாவின் அரசியல் சட்டமும் குறிப்பிடத்தக்கவை ஆகும். மேலும், 1215ம் ஆண்டில் ஆங்கிலேயரால் வெளியிடப்பட்ட 'சுதந்திரத்துக்கான பெரும் பட்டயம்' ஆங்கிலச் சட்ட வரலாற்றில் முக்கியமானது ஆகும். இதனால் இது இன்றைய அனைத்துலகச் சட்டம், அரசமைப்புச் சட்டங்கள் ஆகியவை தொடர்பிலும் மிகவும் முக்கியமானதாக உள்ளது.

நவீன உரிமைச் சட்டத்தின் பெரும் பகுதியும், மனிதஉரிமை என்பதற்கான நவீன விளக்கங்களின் அடிப்படையும் ஒப்பீட்டு அளவில் அமைவது அண்மைக்கால வரலாறு ஆகும். 1525ம் அண்டில் விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக செருமனியில் வெளியிடப்பட்ட 'கருப்புக் காட்டின் பன்னிரண்டு அம்சங்கள்' என்னும் ஆவணமே ஐரோப்பாவின் முதல் மனித உரிமை தொடர்பான பதிவு எனக் கருதப்படுகிறது. 1689ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பிரித்தானிய உரிமைகள் சட்டத்தின் மூலம் குடிமக்களின் உரிமைகள், சுதந்திரங்கள், அரசுக்கான வாரிசு உரிமை தீர்மானித்தல் ஆகியவற்றுக்கான சட்டம், ஐக்கிய இராச்சியத்தில் பல வகையான அரசாங்க ஒடுக்குமுறைகளைச் சட்டத்துக்குப் புறம்பானவையாக ஆக்கியது.

18ம் நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்காவிலும், பிரான்சிலும் இரண்டு முக்கிய புரட்சிகள் இடம்பெற்றன. இவற்றின் விளைவாக இரண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஒன்று ஐக்கிய அமெரிக்க விடுதலை அறிக்கை, இரண்டாவது மனிதர்களுக்கும் குடிமக்களுக்குமான உரிமைகள் அறிக்கை ஆகும். இந்த இரண்டுமே சில சட்டம் சார்ந்த உரிமைகளை நிலைநாட்டி இருந்தன. மேலும் 1776ம் ஆண்டின் உரிமைகளுக்கான வெர்ஜீனியா அறிக்கையும் பல அடிப்படை உரிமைகளைச் சட்டத்தில் இடம்பெறச் செய்தது.

"எல்லா மனிதர்களும் சமமாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் படைத்தவன் உயிர்வாழும் உரிமை, சுதந்திரம், மகிழ்ச்சியை நாடும் உரிமை போன்ற அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத உரிமைகள் சிலவற்றை அவர்களுக்கு அளித்துள்ளான் என்னும் உண்மைகள் தாமாகவே விளக்கம் பெறுகின்றன" என 1776ம் ஆண்டு வெளியிட்ட ஐக்கிய அமெரிக்க விடுதலைக்கான அறிக்கை குறிப்பிடுகின்றது.

இவற்றைத் தொடர்ந்து 18, 19ம் நூற்றாண்டுகளில், தாமசு பைன், ஜான் இசுட்டுவார்ட் மில், ஜி டபிள்யூ போன்றோரால் மனித உரிமைகள் தொடர்பான மெய்யியல் வளர்ச்சி பெற முடிந்தது.



Scanned with CamScanner

20ம் நூற்றாண்டு முழுவதிலும் பல குழுக்களும், இயக்கங்களும் மனித உரிமையின் பெயரால் பலவகையான சமூக மாற்றங்களை ஏற்படுத்தின. மேற்கு ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் தொழிலாளர் சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, மிகக் குறைந்த வேலை நிலைமைகளை நிலைநாட்டுதல், சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடை செய்தல், பெண்களுக்கான வாக்களிக்கும் உரிமை போன்ற உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. பல நாட்டிலுள்ள விடுதலை இயக்கங்கள் பல குடியேற்றவாத அரசுகளை வெளியேற்றி விடுதலை பெற்று தந்தன. இவற்றுள் மகாத்மா காந்தியின் தலைமையிலான இந்திய விடுதலைப் போராட்டம் முக்கியமானது ஆகும்.

## 2. மனிதஉரிமைகள் - விளக்கம்

உரிமைகள் என்பது 'சமூகத்தினாலும் அரசினாலும் அங்கீகரிக்கப் பட்ட மனிதக் கோரிக்கைகள்' ஆகும். இதில் மூன்று கருத்துக்கள் முக்கியம் பெறும். அவை, மனிதக் கோரிக்கைகள், சமூக அங்கீகாரம், அரசியல் அங்கீகாரம் என்பன ஆகும். மனிதனது அனைத்துக் கோரிக்கைகளும் உரிமைகள் ஆகிவிடாத தன்மையில் தான் உள்ளது. கோரிக்கைகள் பாரபட்சமற்ற வகையில் அனைவரது நலனையும் நோக்கமாகக் கொண்டிருக்கும்போது சமூகம் அங்கீகாரம் வழங்கும். சமூக அங்கீகாரம் பெற்ற கோரிக்கைகள் யாவும் உரிமைகளாக அமைவது இல்லை. ஏனெனில் அவற்றுக்கு அரசின் அங்கீகாரம் அவசியம் ஆகும். அரசின் அங்கீகாரம் கிடைக்கப்பெறும் போதே உரிமைகள் சட்ட ரீதியாக நன்மைப் பெறும். ஏனையவர்களுக்கு தீமை விளைவித்து, சமூகப் பொது நலனை பாதித்து, சுயநலநோக்கில் உரிமைகளை அனுபவிக்க எவருக்கும் உரிமை கிடையாது.

**அறிஞர்கள் கருத்து :**

"மனிதன் பிறப்பது சுதந்திரமாகத்தான். ஆனால் பல்வேறு நிலைகளில் பல்வேறு தடைகளால் கட்டப்பட்டுள்ளான் என்பதே உண்மையாகும்" என்று மொண்டஸ்கியூ குறிப்பிடுகின்றார்.

"மனிதன் பிறக்கும்போது சுதந்திரமாகத்தான் பிறக்கின்றான். ஆனால் பின்னர் அவன் அடிமைச் சங்கிலியால் கட்டப்படுகின்றான்" என்கிறார் ரூசோ.

"மனிதன் வாழ்ந்தால் மட்டும் போதாது, நன்றாக வாழ வேண்டும். நலன்கள் பாதுகாக்கப்பட்டால்தான் மனிதன் நன்றாக வாழ இயலும். தனது நலனைப்பேணி பொது நலனையும் பாதுகாப்பதற்கு ஒருவனுக்குள்ள சக்தியே உரிமைகள் எனப்படும்" என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகின்றார்.

லஸ்கி என்பவர், "பிறருக்கு இடைஞ்சல் இன்றி ஒவ்வொரு மனிதனும் தனது ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கான சூழலை சமூகத்தில் நிலைநிறுத்திக் கொள்ளுதலையே உரிமைகள்" என்றார்.

லொக் என்பவர், "உரிமைகள் என்பன ஒவ்வொருடைய அதிகாரம் அல்லது கோரிக்கையை விட உயர்ந்தவையாகும்" என்றார்.

கோப் கவுஸ் என்பவர், "சமூக நலனை பேணும் நிபந்தனைகளே உரிமைகள்" எனக் குறிப்பிடுகின்றார்.



Scanned with CamScanner

ஹொப்ஸ் என்பவர், "உண்மையான உரிமைகள் சமூகப் பொதுநலத்தின் நிபந்தனைகள்" என்றார்.

பொசாங்கே, "சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு அரசால் செயல்படுத்தப்படும் கோரிக்கைகளே உரிமைகள்" ஆகும் என்கிறார்.

எர்னஸ்ட் பார்க்கர், "அரசால் உத்திரவாதம் அளிக்கப்பட்டவையே உரிமைகள்" ஆகும் என்கிறார்.

ஒவ்வொரு நாட்டிலும் சட்டமியற்றும் வழிமுறைக்கு ஏற்ப மனித உரிமைகள் சட்ட வடிவம் பெறுகின்றது. டி.டி. பாசு அவர்கள் மனித உரிமைகளை வரையறுக்கும் பொழுது, "எவ்வித மறுபயனும் இன்றி மனிதனாகப் பிறந்த காரணத்தினாலேயே அரசிற்கு எதிராக ஒவ்வொரு தனி நபருக்கும் இருக்கக்கூடிய குறைந்தபட்ச உரிமைகளே மனித உரிமைகள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

1993ம் ஆண்டு வியன்னா நகரில் நடைபெற்ற மனிதஉரிமைகள் குறித்த உலகமாநாட்டின் பிரகடனத்தில், "மனிதனின் மதிப்பிலிருந்தும், கண்ணியத்திலிருந்தும் விளைவதே மனித உரிமைகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதனாகப் பிறந்த காரணத்தினால், ஒருவனுக்கு இயற்கையிலேயே உடன் பிறந்த உரிமைகள் மனிதஉரிமைகள் ஆகும். இந்த உரிமைகள் எந்த ஒரு சமுதாயத்தினாலோ, அரசினாலோ அல்லது அரசியல் அதிகார அமைப்புகளினாலோ உருவாக்கப்பட்டதல்ல. அதனால்தான் எந்த ஒரு அரசிற்கும், அதிகார அமைப்பிற்கும் மனித உரிமைகளை மீறுவதற்கான அதிகாரம் அளிக்கப்படவில்லை.

"மனிதனை மனிதனாக மதிப்பதே மனித உரிமை" ஆகும். "மற்றவர்கள் உன்னை எவ்வாறு மதிக்க வேண்டுமென்று விரும்புகிறாயோ அதே மதிப்பை நீயும் அவர்களுக்கு அளி" என்பதே மனித உரிமையின் அடிப்படை தத்துவம் ஆகும்.

மனித உரிமைகள் என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல. அதுபோல் மனிதஉரிமைகள் எவராலும் வழங்கப்பட்டதுமல்ல. எனவே தான் மனிதஉரிமைகள் எவராலும் பறிக்கப்பட முடியாத உரிமைகள் என அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது.

## 3. மனித உரிமைகளின் முக்கியத்துவம்

ஒரு நாடு நல்லாட்சியாக அமைய வேண்டுமானால் அங்கு மனித உரிமைகள் சிறப்பான முறையில் நடைபெற வேண்டும். இதனாலேயே நல்லாட்சியின் அடிப்படை பண்பாக மனித உரிமைகளை இணைத்துள்ளனர். மனித உரிமைகளின் முக்கியத்துவத்தினையும், அது பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தாலும் உலக நாடுகள் பல ஒன்றிணைந்து பல மாநாடுகளை நடத்தி உள்ளன. எடுத்துக்காட்டாக, வியன்னா மாநாடு குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வதேச அளவில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு என்று ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம், மனித உரிமைகள் கண்காணிப்பு, சர்வதேச நீதியாளர்களின் ஆணைக்குழு



Scanned with CamScanner

என்பனவற்றை ஏற்படுத்தி அவற்றை பல நாடுகள் ஏற்றுக் கொண்டும் உள்ளன. ஐக்கிய நாடுகள் சபை நிலைப்பெறத் தொடங்கியதற்குப் பின் உள்ள ஆண்டுகளில் உலகலாவிய மனித உரிமைகள் அதிகம் வளர்ச்சி பெற்றுள்ளன. மேலும், அவை மனித உரிமைகளின் காவலராக விளங்குகிறது. ஒவ்வொரு நாடும் தனது பாரம்பரிய அடித்தளத்தின் மீது மனித உரிமைகளை பேணி வருகின்றன.

**உலக மனித உரிமைகள் நாள் :**

ஐ.நா. பொதுச்சபை 10.12.1948 அன்று மனித உரிமைகள் பற்றிய சர்வ தேசியப் பிரகடனத்தை நிறைவேற்றி வெளியிட்டது. அதில் விவரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் பட்டியல், எல்லா நாடுகளுக்கும் எல்லா மனிதருக்கும் பொதுவான மனித உரிமையின் எட்டப்பட வேண்டிய இலக்கினைக் குறிப்பிடுகின்றது. இப்பிரகடனத்தின் உலகளாவிய சரித்திரப் புகழ் காரணமாகவே டிசம்பர் 10ம் நாளை நாம் 'உலக மனித உரிமைகள் நாளாக' கொண்டாடி வருகிறோம்.

**தனி மனித உரிமை :**

1. குடியியல் உரிமைகள் 2. அரசியல் உரிமைகள் 3. பொருளாதார உரிமைகள் 4. சமூக உரிமைகள் 5. பண்பாட்டு உரிமைகள் என்கின்ற இந்த வகைப்பாடுகளுக்குள் இடம்பெறும் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரிமை உண்டு. இவ்வுரிமைகள் அனைத்துமே ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய பிறப்புரிமை ஆகும்.

**அடிப்படை உரிமை :**

ஐ.நா. பொதுச்சபையின் சர்வதேசியப் பிரகடனத்தின்படி ஒவ்வொரு தனிமனிதர்க்கும் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் முக்கியத்துவம் வாய்ந்த சில உரிமைகள் உள்ளன. அவை, 1. உயிர் வாழ்வதற்கான உரிமை 2. சமத்துவ உரிமை 3. சுதந்திரமாக வாழும் உரிமை 4. சட்டத்திற்கு முன் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை 5. கருத்துகளை வெளியிட உரிமை 6. வாக்கு அளிப்பதற்கான உரிமை 7. அரசியல் பங்கேற்புக்கான உரிமை 8. வேலைக்கான உரிமை 9. கல்வி பெறுவதற்கான உரிமை 10. சமூகப் பாதுகாப்புக்கான உரிமை 11. சுகாதாரப் பாதுகாப்புக்கான உரிமை 12. பாலியல் சமத்துவத்திற்கான உரிமை ஆகும்.

**இன்றைய கால கட்டத்தில் :**

மனித உரிமைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி இன்றைய கால கட்டத்தில் மிகவும் பேசப்பட்டு வருகின்றது. அவை, 1. மனித உரிமைகள் அபிவிருத்தியை அளவிடும் அளவு கோல் 2. வெளிநாட்டு உதவியை பெறுதல் 3. அரசின் அத்து மீறிய செயற்பாட்டை கட்டுப்படுத்தல் 4. பொருளாதார வளர்ச்சி 5. மனிதனை பாதுகாத்துக் கொள்ள 6. சிறுவர்களை பாதுகாத்துக் கொள்ள 7. பெண்கள் சமுதாயத்தில் கௌரவமாக வாழ்வதற்கு 8. தனிமனித ஆளுமையை விருத்தி செய்ய 9. சமூகத்தின் அபிவிருத்திக்கு 10. மானிட விடுதலைக்கு 11. இனமுரண்பாடு வன்முறையை தடுக்க என்பவை ஆகும்.



Scanned with CamScanner

தற்காலத்தில் **'மனித உரிமை'** என்பது அரசின்மேல் அல்லது அரசுக்கு எதிராகத் தனிமனிதனால் எழுப்பப்படும் கேள்விகள் என்றே கருத வேண்டிய சூழல் உள்ளது.

ஒரு நாடு சர்வதேச நாட்டினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் அந்நாடு மனித உரிமைகளை பேணும் நாடாக இருத்தல் அவசியமானது ஆகும். ஒரு நாட்டில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் ஊடகங்களின் செயற்பாடுகள் பற்றி சர்வதேச நாடு கண்காணித்துக் கொண்டுள்ளது. அவை மீறப்படும் சந்தர்ப்பங்களில் அதற்கான நடவடிக்கையினை சர்வதேச நாடு எடுக்கும். குறிப்பாக போர்கள் நடைபெறும்போது அங்கு மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். இல்லையெனின் மனித உரிமைகளை மீறிய நாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். உதாரணமாக இலங்கையில் இடம்பெற்ற போரின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கூறி இலங்கைக்கான ஐரோப்பிய நாடுகளின் வரிச்சலுகையான புளு **P10** வரிச்சலுகை நிறுத்தப்பட்டது. மேலும் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் பேரவையில் இரண்டு மசோதாக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க ஆகும்.

## 4. மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனம்

மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனம் **(Universal Declaration of Human Rights)** பற்றி அதன் வரலாற்றுப் பின்னணியை பார்ப்போம்.

**வரலாற்றுப் பின்னணி :**

1939ம் ஆண்டில் உலகம் மிகக் கொடுமையான 2ம் உலகப் போரை சந்தித்தது. அப்போரில் நாஜிப் படையினர் ஜீக்கள் இனத்தவர் மீதும் மற்ற இனத்தவர் மீதும் பல கொடுமைகள் செய்தனர். மதம், இனம், நாட்டுரிமை என்ற பெயரால் ஒரு சில இனத்தவரையே முழுவதுமாக அழிக்க நினைத்தனர். ஃபாஸீச தலைவர்களின் பயங்கரவாத செயல்கள், மனித உரிமைகளுக்கும் உயிர்களுக்கும் கேடுவிளைவிப்பதாக அமைந்தன. இந்நிலையில் உலக அமைதி காக்கும் முயற்சியாக பல நாடுகளின் ஒப்புதலுடன் 24.10.1945ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உதயமானது. ஐக்கிய நாடுகளின் சாசனமும் வடிவமைக்கப்பட்டு 1945ம் ஆண்டு முதல் செயலுக்கு வந்தது.

இரண்டாம் உலகப் போரின்போது அதிகாரத்தை உடைய அரசுகள் தாங்கள் ஆக்ரமித்த பகுதிகளில் மனிதஉரிமைகளை ஈவு இரக்கமின்றி பறிப்பதில் ஈடுபட்டன. இனம், மதம், நாட்டுரிமை என்ற பெயரால் ஒரு சில மக்களை ஒழித்துக் கட்டுவதிலும் அவை முனைந்து நின்றன. இதனால் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கு சர்வதேச அளவில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகளின் சாசனத்திலும் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அதன் முதல் சட்டமே, "இனம், பால், மொழி அல்லது மதம் என்ற பாகுபாடு கருதாமல் அனைவருக்குமான மனித உரிமைகள் மீதும், அடிப்படைச் சுதந்திரங்கள் மீதும் மதிப்பை வளர்த்து ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதார, சமூக, கலாச்சார அல்லது மனிதாபிமான தன்மை கொண்ட சர்வதேச பிரச்சனைகளைத் தீர்ப்பதில் சர்வதேச கூட்டுறவை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை பாடுபடும்" என்று குறிப்பிட்டுள்ளது.



Scanned with CamScanner

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 68வது சட்டத்தில் கூறியுள்ளா ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமுதாயக் குழுவான மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் ஆணையம் ஒன்றை 1946 ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிறுவியது. மனித உரிமைகளையு சுதந்திரங்களையும் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறும் "மனித உரிமைகளின் சர்வதேச மசோதா" ஒன்றை இந்த ஆணையத்திட ஒப்படைக்கப்பட்டது.

இந்த மசோதாவின் முதற்பகுதியைத்தான் "மனித உரிமைகளின் **அனைத்துலக பிரகடனம்**" என்ற பெயரில் 10.12.1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுப் பேரவை எவ்வித மாறுபட்ட கருத்தும் இல்லாமல் ஒருமனதாக ஏற்று வெளியிட்டது.

**பிரகடனத்திற்கு உரியவர்கள் :**

அனைத்துலக பிரகடனத்தை ஏற்று வெளியிடப்பட்ட தேதியா டிசம்பர் 10ம் நாள் 'மனித உரிமைகள் தினமாக' இன்று உலகம் எங்கும் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இந்தப் பிரகடனமானது திருமதி. எலினார் ரூஸ்வெல்ட் அவர்களின் தலைமையின் கீழ் மனித உரிமைகளின் மீதான ஐக்கிய நாடுகள் ஆணையத்தால் கொண்டு வரப்பட்டது.

இதற்கு மூல காரணமாக விளங்கியவர் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவரும் மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தின் தலைவருமான திரு. ரினி காஸின் என்பவர் ஆவார். 1946ம் ஆண்டில் மனித உரிமைகளின் மீதான ஐக்கிய நாடுகளின் ஆணையம் உருவாக்கப்பட்ட நாள் முதல் அதில் ஒரு உறுப்பினராக இருந்தார். திருமதி. எலினார் ரூஸ்வெல்ட் அவர்களின் தலைமையின் கீழ், ஐக்கிய நாடு ஆணையத்தின் துணைத் தலைவராக 1946ம் ஆண்டு முதல் 1955ம் ஆண்டு முடிய இருந்தார். திருமதி. எலினார் ரூஸ்வெல்ட் அவர்களின் தலைமைப் பதவிக்கு பிறகு 1955ம் ஆண்டு முதல் 1957ம் ஆண்டு முடிய ஐக்கிய நாடு ஆணையத்தின் தலைவராக இருந்தார். பின்ன 1959ம் ஆண்டில் மீண்டும் துணைத் தலைவர் பதவி வகித்தார். இவரை **'மனித உரிமைகளின் தந்தை'** என்று இன்று உலகம் போற்றுகிறது

**வகைமுறைகள் :**

மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனத்தில் ஒரு முகப்புரையும், 30 பிரிவுக்கூறுகளும் அடங்கி உள்ளன. இவை மக்களின் வாழ்வியல், அரசியல் உரிமைகள், பொருளாதாரம், சமுதாயம் கலாச்சாரம் உரிமைகள் பற்றி எடுத்துரைக்கின்றன.

**முகப்புரை :**

மக்கள் உரிமைகளைப் புறக்கணிப்பதும், மறுப்பதும் காட்டுமிராண்டித் தனமான செயல்கள் விளைவதற்கு காரணமாவதோடு அமையாமல் மக்களுடைய மனச்சாட்சியையும் கொதிக்குமாறு செய்து விடுகின்றன. ஆகையால் பேச்சுரிமை, சமயக் கோட்பாட்டு உரிமை, அஞ்சாமை உரிமை, வாழ்க்கைத் தேவை உரிமை இவைகளைத் தடையின்றிப் பெற்று இன்புறுவதற்கேற்ற ஒரு புத்துலகத்தை தோற்றுவிப்பதே பொதுமக்களுடைய பெரு வேட்கை ஆகும்.



Scanned with CamScanner

கொடுங்கோன்மை, அடக்குமுறை இவைகளை எதிர்த்துப் புரட்சிக் கலகம் செய்வதன்றி வேறு வழியில்லையென்று துணியும் நிலையை ஒருவருக்கு ஏற்படுத்தாமல் இருக்க வேண்டுமானால் மனித உரிமைகளை தக்க சட்டங்கள் மூலம் பாதுகாத்தல் இன்றியமையாதது ஆகும்.

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த மக்கள், தங்களுடைய அடிப்படை உரிமைகளிலும் தனி ஒருவருடைய மதிப்பு, தகுதி, ஆண் பெண் இவர்களின் சரிநிகர் சம உரிமைகள், சமூக முன்னேற்றம், வாழ்க்கை நிலை ஆகியவைகளை சுதந்திரத்துடன் மேம்படுத்த வேண்டுமென அவர்கள் தீர்மானித்தது ஆகும்.

மனித உரிமைகளையும், அடிப்படை சுதந்திரங்களையும் வழங்கும் முறைகளை கடைப்பிடிக்க உறுப்புநாடுகள் ஐக்கிய நாடுகளோடு ஒத்துழைக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டு உள்ளது என இப்பிரகடனத்தின் முகப்புரையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

**பிரிவுக்கூறுகள் :**

அனைத்துலக பிரகடனத்தில் மொத்தம் 30 பிரிவுக்கூறுகள் உள்ளன. அவை,

1. அனைத்து மனிதர்களின் சுதந்திரமும் அவர்களது பிறப்பினாலேயே ஏற்பட்டு விடுகிறது. அவர்கள் தங்களது மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் இயற்கையிலேயே பகுத்தறிவும் மனச்சாட்சியும் படைத்தவர்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் உடன் பிறப்புணர்ச்சியுடன் பழகுதல் வேண்டும்.
2. இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறுவகை கருத்துரை, பிறந்த நாட்டின் இயல்பு அல்லது பிறந்த சமூக இயல்பு, சொத்து, பிறப்பு அல்லது வேறுவகை அந்தஸ்து நிலை ஆகிய இவற்றின் காரணமாக பாகுபாடு ஏதுமில்லாமல் இப்பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.
3. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை, சுதந்திரம் உடற்பாதுகாப்பு ஆகியவைகளில் உரிமை உண்டு.
4. எவர் ஒருவரும் அடிமைத்தனத்திற்கோ அல்லது அடிமை ஆட்பணிக்கோ உட்படுத்தப்படக் கூடாது. அடிமைத்தனமும் அடிமை வணிகமும் அவை எவ்வடிவில் உருவெடுத்தாலும் தடை செய்யப்பட வேண்டும்.
5. எவர் ஒருவரும் சித்ரவதைக்கோ, கொடிய மனிதாபிமானமற்ற அல்லது இழிந்த நடத்தைக்கோ, தண்டனைக்கோ உட்படுத்தப்படக் கூடாது.
6. எங்கும் சட்டத்தின் முன் நிற்கும் ஒரு நபராக தம்மை அங்கீகரிக்க கோர ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.
7. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அச்சட்டத்தின் எவ்வித பாகுபாடும் இல்லாமல், சம பாதுகாப்பைப் பெற அனைவருக்கும் உரிமை உண்டு.
8. அரசியலமைப்பு அல்லது சட்டத்தால் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறிய செயல்களுக்கு தகுதி வாய்ந்த தேசிய தீர்ப்பாயங்களால் சிறப்பான நிவாரணம் பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.



Scanned with CamScanner

9. எவர் ஒருவரும் அதிகாரம் போக்கிற்காக கைது நடவடிக்கைகளுக்கோ, சிறை வைத்தலுக்கோ, நாடு கடத்தலுக்கோ உட்படுத்தப்படக் கூடாது.

10. தனக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டு மற்றும் தனது உரிமைகள் ஆகியவற்றை தீர்மானிப்பதிலும், ஒரு சுதந்திரமான, நியாயமான பொது விசாரணையைக் கோர ஒவ்வொருவருக்கும் சரிநிகர் சமஉரிமை உண்டு.

11. ஒரு குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் தனது எதிர்வாதத்திற்கு தேவையான அனைத்து உத்திரவாதங்களையும் கொண்ட ஒரு பொது விசாரணையில் சட்டப்படி தனது குற்றம் மெய்ப்பிக்கப்படும் வரையில் தன்னை ஒரு நிரபராதியாக அனுமதிக்க கோர உரிமை உண்டு.

தண்டனைக்குரிய ஒரு குற்றம் செய்யப்பட்ட காலத்தில் அக்குற்றம் தேசிய அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய ஒரு குற்றத்தை உருவாக்காத எந்த செயலுக்காகவும் எவர் ஒருவரும் எக்குற்றத்திற்காகவும் குற்றவாளி ஆக்கப்படக் கூடாது. அத்தண்டனைக்குரிய குற்றம் செய்யப்பட்ட காலத்தில் அக்குற்றத்திற்கு பொருந்தக் கூடிய தண்டனையைவிட அதிகமான தண்டனையை விதித்தல் கூடாது.

12. எவர் ஒருவரது அந்தரங்கமும், குடும்பமும், கடிதப் போக்குவரத்தும் மற்றவர்களின் அதிகார போக்கின் தலையீட்டிற்கு உட்படுத்தப்படக்கூடாது. அத்தகு தலையீடு மற்றும் தாக்குதல்களுக்கு எதிராக சட்டத்தின் பாதுகாப்பைப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

13. ஒவ்வொருவருக்கும் தனது நாட்டின் எல்லைக்குள் சுதந்திரமாக எங்கும் சென்றுவரவும், தங்கி வாழவும் உரிமை உண்டு. தனது நாடு உட்பட எந்த நாட்டை விட்டுச் செல்லவும், தனது நாட்டிற்கு திரும்பி வரவும் உரிமை உண்டு.

14. சித்ரவதையான தண்டனையிலிருந்து விலக பிறநாடுகளில் அடைக்கலம் கோரவும், ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

15. ஒவ்வொருவருக்கும் ஒரு நாட்டை சார்ந்து வாழும் நாட்டுரிமை உண்டு. எவர் ஒருவரது நாட்டுரிமையையும் அதிகாரத்தால் பறிக்கக் கூடாது.

16. இனம், நாட்டுரிமை, மதம் ஆகியவற்றின் காரணமாக எவ்வித வரம்பிற்கும் உட்படுத்தப்படாமல் வயதடைந்த ஆண்கள் மற்றும் பெண்கள் திருமணம் செய்து கொள்ளவும் ஒரு குடும்பத்தை தேடிக் கொள்ளவும் உரிமை உண்டு.

17. தனியாகவோ அல்லது பிறர்களுடன் கூட்டு சேர்ந்தோ சொத்தை சொந்தமாக வைத்துக் கொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

18. ஒவ்வொருவருக்கும் தமது சிந்தனை, மனச்சாட்சி, மதம் ஆகியவற்றை பின்பற்ற சுதந்திர உரிமை உண்டு. இந்த உரிமையில் ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை தனியாகவோ, சமூகமாகவோ, பொதுவிலோ, தனிப்பட்ட விதத்திலோ மாற்றிக் கொள்ளும் சுதந்திரமும் உள்ளடங்கும்.



Scanned with CamScanner

19. ஒவ்வொருவருக்கும் கருத்துக்களை வெளியிட சுதந்திர உரிமை உண்டு. இந்த உரிமையில் எவரது தலையீடும் இல்லாமல் கருத்துரைகளை நிலை நிறுத்தும் சுதந்திரமும் மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமாக செய்தியை எந்த நாட்டிலிருந்தும் பெறுவதற்கும் அனுப்புவதற்கும் உண்டான சுதந்திரமும் அடங்கும்.

20. அமைதியாக கூடுவதற்கும் சங்கங்கள் அமைத்துக் கொள்வதற்கும் ஒவ்வொருவருக்கும் சுதந்திர உரிமை உண்டு.

21. ஒவ்வொருவரும் தனது நாட்டின் அரசாங்கத்தில் நேரடியாக அல்லது சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் வாயிலாக பங்கு கொள்ள உரிமை உண்டு.

22. சமுதாயத்தின் உறுப்பினர் என்ற வகையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்பைப் பெற உரிமை படைத்தவர். அவர் தனது மதிப்பிற்கும், தனது ஆளுமையின் சுதந்திரமான மேம்பாட்டிற்கும் அவசியமாக உள்ள பொருளாதார சமுதாய, கலாச்சார உரிமைகளை தேசிய, சர்வதேச நாட்டின் ஒத்துழைப்பின் வாயிலாகவும் நாட்டில் உள்ள வளங்கள் பெற்றுக் கொள்ள உரிமை படைத்தவர்.

23. ஒவ்வொருவரும் வேலை செய்வதற்கும், தனது வேலையை சுதந்திரமாக தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் வேலைக்கு உண்டான நியாயமான, சாதகமான சூழல்களுக்கும், வேலையின்மைக்கு எதிராக பாதுகாப்பைப் பெறவும் உரிமை உண்டு. எவ்வித பாகுபாடும் இல்லாமல் சமமான வேலைக்கு சமமான ஊதியம் பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

24. வேலை நேரங்களின் மீதான நியாயமான கட்டுப்பாடுகள், தகுந்த காலகட்டங்களில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை உட்பட வேலையின் பொழுது இடைவேளை மற்றும் வேலைப் பளுவிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளல் ஆகியவற்றிற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

25. ஒவ்வொருவருக்கும் தனது குடும்பத்தினரின் நல்வாழ்க்கைக்காக, ஆரோக்கித்திற்காக போதுமான உணவு, உடை, குடியிருப்பு, மருத்துவ சேவை, தேவையான சமூகச் சேவைகளை பெற்று ஒரு தரமான வாழ்வைப் பெற உரிமை படைத்தவர். வேலையின்மை, உடல் நலமின்மை, இயலாமை ஏற்படுதல், விதவைப் பருவம், முதுமைப் பருவம் ஆகிய நிகழ்வுகளின் பொழுது பாதுகாப்பு பெற உரிமை உண்டு.

26. ஒவ்வொருவருக்கும் கல்வி பெற உரிமை உண்டு. கல்வியானது குறைந்தபட்சம் அதன் தொடக்கம் அல்லது அடிப்படை நிலைகளில் இலவசமாக அளிக்கப்படவேண்டும். தொடக்க நிலை கல்வி கட்டாயமானதாக இருக்க வேண்டும். தொழில்நுட்ப மற்றும் சுயதொழில் கல்வி பொதுவாக அனைவருக்கும் கிடைக்கும்படி செய்யப்படுதல் வேண்டும். மேல்நிலைக் கல்வியானது தகுதியின் அடிப்படையில் அனைவரும் சமமாக அடையக் கூடியதாக இருக்கவேண்டும்.

27. சமுதாயத்தின் கலாச்சார வாழ்வில் சுதந்திரமாக கலந்து கொள்ளவும், கலைகளை துய்க்கவும், அறிவியல் மேம்பாட்டையும் அதன் பலன்களையும் பகிர்ந்து கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

28. ஒரு சமுதாய மற்றும் சர்வதேச ஒழுங்கமைவை முழுமையாக அடைந்து பயன்பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

29. ஒவ்வொருவருக்கும் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளைக் கொண்டுள்ளனர். ஏனெனில் அதில் மட்டுமே ஒருவரது ஆளுமையின் தடையற்ற மற்றும் முழு வளர்ச்சி சாத்தியமாகும்.

30. எந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் அழிப்பதற்காக நோக்கம் கொண்ட எந்தச் செயல்பாட்டிலும் ஈடுபடுவதற்காக எந்தச் செயலையும் நிறைவேற்றுவதற்காக எந்த நாட்டிற்கும், குழுவிற்கும், நபருக்கும் உரிமை எதுவும் இருப்பதாக பொருள் விளக்கம் கொள்ள முடியவில்லை.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் பிரிவுகளுக்கு நாடுகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டி ஒரு சட்ட விளைவைக் கொடுப்பதற்காக சில சர்வதேச உடன்படிக்கைகளை தயாரிக்கும் பணியில் ஐக்கிய நாடுகள் சபை ஈடுபட்டது. இதனால் மனித உரிமைகளின் மீதான இரண்டு சர்வதேச உடன்படிக்கைகள் பிறந்தன. 16.12.1966ம் ஆண்டை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை ஒரு மனதாக ஏற்றுக் கொண்டது. அவை 1. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை, 1966 2. பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை, 1966 ஆகும். இந்த இரண்டு உடன்படிக்கைகளும் 'மனித உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கைகள்' என்று அழைக்கப்படுகிறது.

## 5. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை, 1966

வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை, **1966 (International Covenant on Civil and Political Rights, 1966)** ன் படி ஒரு தனிமனிதர் மற்ற மனிதர்களுக்கும் தாம் சார்ந்துள்ள சமூகத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளைக் கொண்டு இருக்கையில் தற்பொழுதைய உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளின் மேம்பாடு மற்றும் கடைப்பிடித்தல் ஆகியவற்றிற்காக பாடுபடும் பொறுப்பில் உள்ளார். இதனை பின்வரும் சட்டங்கள் ஒப்புக் கொள்கின்றன.

**நாடுகளின் பொறுப்பேற்பு:**

நடைமுறையில் இருக்கும் சட்டம் இயற்றல் வாயிலாகவோ அல்லது வேறு செயல்முறைகளின் வாயிலாகவோ முன்பே ஏற்பாடு செய்யப்படாது இருத்தல், தற்போதைய உடன்படிக்கைக்குத் தரப்பினராக உள்ள ஒவ்வொரு நாடும், தனது அரசியல் அமைப்பு சாசன நெறிமுறைகளின்படியும், வகைமுறைகளுக்கு ஏற்பவும், அங்கீகரிக்கப் பெற்ற உரிமைகளை நிறைவேற்றத் தேவைப்படும் அத்தகு சட்டம் இயற்றலுக்கு உண்டான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொறுப்பேற்கின்றது.

ஒவ்வொரு நாடும், அதில் அங்கீகரிக்கப் பெற்ற உரிமைகளும் சுதந்திரங்களும் எந்த மனிதரின் விஷயத்திலாவது மீறப்பட்டால்



Scanned with CamScanner

அத்தகைய மீறல் அதிகாரப்பூர்வமாக செயல்படும் நபர்களால் செய்யப்பட்டு இருந்தாலும்கூட அதற்குரிய பயனுள்ள தீர்வு அம்மனிதருக்கு கிடைக்குமாறு செய்கிறது.

தீர்வு ஒன்றைக் கோரும் மனிதன் எவருக்கும் தகுதி வாய்ந்த நீதித்துறை, நிர்வாகத்துறை அல்லது சட்டத்துறை அதிகாரிகளாலோ நாட்டின் சட்டத்துறையால் நியமிக்கப் பெற்ற அதிகாரியாலோ தீர்மானிக்கப்படவும், நீதி வழியிலான தீர்வு பெறும் வாய்ப்புகளை மேம்படுத்தவும், அத்தகைய தீர்வுகள் கொடுக்கப்பட்டவுடன் அவற்றை தகுதியுள்ள அதிகாரிகள் நிறைவேற்றுவதை உறுதி செய்யவும் பொறுப்பேற்கின்றது.

**நாடுகளின் நடவடிக்கைகள் :**

நாட்டின் வாழ்வையும் அது நிலைத்து இருத்தலையும் அச்சுறுத்துகின்ற ஒரு நிலை உருவாகி இருப்பதாய் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பொது நெருக்கடி நிலையின்போது சூழ்நிலையின் தேவைகளுக்கு மட்டுமே உரிய அளவில் தமது கட்டுப்பாடுகளில் இருந்து விலகிச் செல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால் அத்தகைய நடவடிக்கைகள் சர்வதேசச் சட்டத்தின்படியான தமது பிற கட்டுப்பாடுகளுக்கு முரணான வகையிலும் இனம், நிறம், பால், மொழி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டும் வகையிலும் செய்யப்படுதல் கூடாது.

தற்போதைய உடன்படிக்கைக்கு தரப்பினர்களாக உள்ள நாடு விலகிச் சென்றுள்ள வகைமுறைகளையும், அதற்குரிய காரணங்களையும் குறிப்பிட்டு ஐக்கிய நாடுகளின் தலைமைச் செயலாளரின் முகவர் மூலமாக அனைத்து நாடுகளுக்கும் உடனடியாகத் தகவல் தெரிவிக்கவேண்டும். அதே முகவரின் மூலமாக அத்தகைய விலகிச் செல்லலை நீக்க இருக்கும் தேதியைக் குறிப்பிட்டு மேலும் ஒரு தகவலும் அளிக்கவேண்டும்.

**சுதந்திரங்களின் அங்கீகாரம் :**

எந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் அழிப்பதற்காக நோக்கம் கொண்ட எந்தச் செயல்பாட்டிலும் ஈடுபடுவதற்காகவும், தற்போதைய உடன்படிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளதற்கும் கூடுதலான அளவில் அவைகளை வரம்பிற்கு உட்படுத்துவதற்காக எந்த நாட்டிற்கும், குழுவிற்கும் உரிமை எதுவும் இருப்பதாக தற்போதைய உடன்படிக்கையில் உள்ள எதுவும் உட்கிடையாக குறிப்பதாக பொருள் விளக்கம் கூறமுடியாது.

எந்த நாட்டிலும் உள்ள சட்டம், மரபுகள், ஒழுங்கு முறைகள் அல்லது நடப்பில் இருக்கின்ற அடிப்படை மனிதஉரிமைகளில் எதுவும் தற்போதைய உடன்படிக்கை அங்கீகரிக்கவில்லை என்றோ அல்லது குறைந்த அளவில்தான் அங்கீகரித்து இருக்கிறது என்றோ காரணம் கற்பித்துக் கொண்டு அவைகளின்மீது வரம்புகள் விதிக்கப்படவோ, அவைகளில் இருந்து விலகிச் செல்லுதலோ கூடாது.



Scanned with CamScanner

**வாழ்வியல். மற்றும் அரசியல் உரிமைகள் :**

ஜீ வாழ்க்கை உரிமைகளை பாதுகாக்கிறது. சித்ரவதை அல்லது கொடுமையான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான விதத்தில் நடத்துதலையோ அல்லது தண்டனையையோ தடைச் செய்கிறது அடிமைத்தனம், அடிமை வணிகம் மற்றும் கட்டாயமாக பணிக்கு உட்படுத்துவதை தடைச் செய்கிறது.

ஜீ ஒவ்வொருவருக்கும் சுதந்திரமாக இருப்பதற்கு உரிமையும், உடல் பாதுகாப்பு உரிமையும் உண்டு. அதிகாரப் போக்கில் கைது செய்வதையும் சிறை வைப்பதையும் தடைச் செய்கிறது. சட்டப்படி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதனால் தங்களது சுதந்திரத்தை இழந்த அனைத்து நபர்களும் மனிதநேயத்தோடு மனிதரிடத்தில் இயற்கையாக பொதிந்துள்ள மதிப்பிற்கு மரியாதை அளித்தும் நடத்தப்பட வேண்டும்.

ஜீ நாட்டின் எல்லைக்குள் எங்கும் சென்று வரவும், தனது வசிப்பிடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திர உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு வெளிநாட்டவர் தற்போதைய உடன்படிக்கை தரப்பினராக உள்ள நாட்டில் இருந்து சட்டப்படியாக வெளியேற்றப்படுவதற்கு வரம்புகளை விதிக்கிறது.

ஜீ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் முன்பு சமத்துவ உரிமையை வழங்குகிறது. நியாயமான மற்றும் பொது விசாரணையைக் கோர உரிமை உண்டு.

ஜீ குற்றவியல் சட்டங்களுக்கு முன்பே அதிகாரம் அளிப்பதை தடைச் செய்கிறது. எங்கும் சட்டத்தின் முன் நிற்கும் ஒரு நபராக தம்மை அங்கீகரிக்கும்படி ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. எவர் ஒருவரது அந்தரங்கமும், குடும்பமும், இல்லமும் அல்லது கடிதப் போக்குவரத்தும் மற்றவர்களின், சட்ட விரோதமான தலையீட்டிற்கும் மரியாதையும் நற்பெயரும் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்படக் கூடாது என்றும் தடை விதிக்கிறது.

ஜீ ஒவ்வொருவருக்கும் தமது சிந்தனையையும் மனச்சாட்சியையும் மற்றும் மதத்தையும் பின்பற்ற சுதந்திர உரிமை உண்டு. மேலும் எவரது தலையீடும் இல்லாமல் கருத்துரைகளை நிலைநிறுத்தும் உரிமையும் கருத்துக்களை வெளியிடும் சுதந்திர உரிமையும் உண்டு.

ஜீ அமைதியாக கூட்டம் நடத்தும் உரிமையை அங்கீகரிக்கிறது சங்கம் அமைக்கும் சுதந்திர உரிமையை அளிக்கிறது. திருமணம் செய்து கொள்ளும் மற்றும் ஒரு குடும்பத்தை தேடிக் கொள்ளும் உரிமையை அளிக்கிறது.

ஜீ ஒவ்வொரு குழந்தையும் தனது குடும்பத்தாலும் சமுதாயத்தாலும் நாட்டாலும் பாதுகாப்பு பெற உரிமை படைத்தவர். ஒவ்வொரு குடிமகனும் தனது நாட்டு நடப்பில் கலந்து கொள்ளவும், இரகசியமான வாக்களிப்பு முறையில் தகுந்த காலகட்டங்களில் நியாயமான முறையில் நடத்தப்படும் தேர்தலில் ஓட்டளிக்கவும், தேர்ந்தெடுக்கப்படவும் உரிமையும் வாய்ப்பும் பெற்றவர்.



Scanned with CamScanner

✽ சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் அச்சட்டத்தின் சம பாதுகாப்பை பெற அனைவருக்கும் உரிமை உண்டு. மொழிவாரி சிறுபான்மையினர் வசிக்கும் நாடுகளில் அத்தகைய சிறுபான்மைப் பிரிவுகளைச் சேர்ந்த மனிதர்களுக்கு சமூகமாக இணைந்து சொந்த கலாச்சாரத்தைத் துய்க்கவும், தமது சொந்த மதத்தைக் கடைப்பிடித்து போற்றவும், சொந்த மொழியைப் பயன்படுத்தவும் உள்ள உரிமை மறுக்கப்படுதல் கூடாது.

**விருப்புவழி உடன்பாடு :**

ஒரு சர்வதேச உடன்படிக்கைக்கு தரப்பினரான நாடுகள் மற்றொரு உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தையும் விரும்பி ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கலாம் என்ற நிலை இருந்தால் அது 'விரும்பு வழி உடன்பாடு அல்லது ஒப்பந்தம்' எனப்படுகிறது.

**(அ) விருப்புவழி உடன்பாடு - விளக்கம் :**

வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கைக்கு 3 முறைகள் உள்ளன. அவை, 1. அறிக்கை அனுப்பும் முறை 2. நாட்டிற்கு நாடு தகவல் அனுப்பும் முறை 3. சமரச முறை ஆகும்.

**(ஆ) அறிக்கை அனுப்பும் முறை :**

இது முதல் வழிமுறை ஆகும். இந்த உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளை அமல்படுத்துவதற்காக உடன்படிக்கையின் உட்பட்ட நாடுகள் எடுத்த நடவடிக்கைகள் குறித்து அவை ஒவ்வொன்றும் மனிதஉரிமைகள் குழுவிற்கு சமர்ப்பித்தல் ஆகும். இது அறிக்கை அனுப்பும் முறை எனப்படுகிறது.

**(இ) நாட்டிற்கு நாடு தகவல் அனுப்பும் முறை :**

இது இரண்டாவது வழிமுறை ஆகும். இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள உரிமை செயல்படுத்துவதற்காக நாட்டிற்கு நாடு தகவல் பரிமாறிக் கொள்ளும் முறை ஆகும். ஆனால் இந்த முறை ஒரு நாட்டின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும். ஒரு நாடு, உடன்படிக்கையில் உட்பட்ட உள்ள பிறிதொரு நாடு பின்பற்றவற்றை என்று கூறி அனுப்பும் தகவல்களை பெற்றுக் கொள்ளவும், அவற்றை பரிசீலிக்கவும் மனித உரிமைகள் குழுவிற்கு தகுதி உள்ளது என்பதை அங்கீகரித்து அந்நாடு விளம்புகை செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றில் எவைஎவை பின்பற்றவில்லை என்று கூறி அதற்கு எழுத்து பூர்வமாக தகவல் அனுப்பமுடியும். அத்தகவலை பெற்றுக் கொண்டு 3 மாதங்களுக்குள் விளக்கம் அனுப்ப வேண்டும். அந்த விளக்கத்திற்கு பிறகும், இரு நாடுகளுக்கும் இடையிலான மேற்படி பிரச்சனை தீரவில்லை என்றால், அதில் மனித உரிமைகள் குழு தலையிடும். அது அப்பிரச்சனையை பரிசீலித்து தனது தீர்வை வழங்கும்.



Scanned with CamScanner

(ஈ) சமரச நடைமுறை :

இது மூன்றாவது வழிமுறை ஆகும். இரு நாடுகளையு திருப்திபடுத்தவில்லை என்றால் மனித உரிமைகள் குழுவான பிரச்சனையை தற்காலிக சமரச ஆணையம் ஒன்றை அமைக்கும். தன நல்லெண்ண சேவைகளை சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கும் வழங் பிரச்சனையில் ஒரு சமரசமான தீர்வைத் தர முயல்கிறது.

## 6. பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை, 1966

பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகளின் மீதா சர்வதேச உடன்படிக்கை, 1966(**International Covenant on Economic Social and Cultural Rights, 1966**)ன்படி, சுதந்திர மனிதர்கள் அச்சம், வறுமை ஆகியவற்றிற்கு சுதந்திரத்தை அனுபவிப்பது என்னும் இலட்சிய நோக்கு ஒவ்வொருவருக்கும் தத்தம் பொருளாதார, சமுதாய, கலாச்சா உரிமைகளையும் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளையு அனுபவிப்பதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கித் தந்தால்தா நிறைவேறும் என்பதை அங்கீகரித்து உள்ளன.

**மக்களின் சுய நிர்ணய உரிமை :**

அனைத்து மக்களுக்கும் தம் நிலையை தாமே சுயமாக நிர்ணயிக்க உரிமை உண்டு. அந்த உரிமையின் அடிப்படையில் அவர்கள் தத்தம் அரசியல் அந்தஸ்த்தைச் சுதந்திரமாக நிர்ணயம் செய்து பொருளாதார, சமுதாய, கலாச்சார அபிவிருத்தியை சுதந்திரமாக தொடருவர்.

பரஸ்பர நன்மைக் கொள்கையும், சர்வதேசச் சட்டத்தையும் ஆதாரமாயக் கொண்ட சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பினால் தோன்றும் கடமைப் பொறுப்புகள் எவற்றுக்கும் பாதகமின்றி, தத்தம் இயற்கைச் செல்வத்தையும், வள வாய்ப்புகளையும் அனைத்து மக்களும் தமது சொந்த நலன்களைக் கருதி சுதந்திரமாகப் பகிர்ந்து கொள்ளலாம்.

சுயாட்சி இல்லாதவையும், ஆட்சியில் இருப்பவையுமான பகுதிகளின் நிர்வாகத்திற்கு அதிகாரம் உடைய நாடுகள் உட்பட தற்போதைய உடன்படிக்கைக்கு தரப்பினரான நாடுகள், சுய நிர்ணய உரிமை உருப்பெற்று விளங்கச் செய்வது ஆகும். ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கூறுகளுக்குப் பொருந்தும் விதத்தில் அவ்வுரிமையை மதிப்பதும் வேண்டும்.

**நாடுகளின் பொறுப்பேற்பு :**

இந்த உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்டு உள்ள உரிமைகளின் முழு பயன்பாட்டை முற்போக்கான விதத்தில் அடையும் நோக்கத்திற்காக தன்னிடம் உள்ள வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி தனியாகவோ அல்லது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவி மற்றும்



Scanned with CamScanner

ஒத்துழைப்புடன் அனைத்து வழிகளிலும் சட்டம் இயற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமாக நடவடிக்கைகள் எடுக்க பொறுப்பேற்கின்றது.

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல், பிறந்த நாட்டின் இயல்பு, சொத்து, பிறப்பு போன்ற எவ்வித பாகுபாடும் இன்றி, தற்போதைய உடன்படிக்கையில் விளக்கப்பட்டு உள்ள உரிமைகளானது செயற்படுத்தப்படும் என்று உத்திரவாதம் அளிக்க தற்போதைய உடன்படிக்கைக்கு உட்பட்டு உள்ள நாடுகள் பொறுப்பேற்கின்றது.

வளரும் நாடுகள் மனித உரிமைகளையும் மற்றும் தங்களது நாட்டின் பொருளாதார நிலையையும் தக்கவாறு கவனத்தில் கொண்டு தம் நாட்டவர் அல்லாத பிறருக்கு தற்போதைய உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்டு உள்ள பொருளாதார உரிமைகளை அளிக்க எந்த அளவிற்கு உத்திரவாதம் கொடுக்க முடியும் என்பதைத் தாமே தீர்மானிக்கலாம்.

**சுதந்திரங்களின் அங்கீகாரம் :**

தற்போதைய உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள உரிமைகளை அனுபவித்தலின்மீது சட்டம் ஒன்றால் மட்டுமே தீர்மானிக்கப்பட்ட வரம்புகளை உடன்படிக்கையின் தரப்பு நாடுகள் விதிக்கலாம் என்று அங்கீகரிக்கிறது. அதுவும் ஒரு மக்களாட்சி சமுதாயத்தின் பொது நலனை மேம்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமே இருத்தல் வேண்டும்.

**பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகள் :**

சுதந்திரமாக தேர்ந்தெடுத்த வேலையை செய்ய ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை இந்த உடன்படிக்கையின் உட்பட்ட நாடுகள் அங்கீகரிக்கின்றது. வேலையின் நியாயமான மற்றும் சாதகமான சூழல்களை அனுபவிக்கவும், தொழில் சங்கங்களை அமைக்கவும் அதில் பங்கேற்கவும், சமுதாய காப்பீடு உள்ளிட்ட சமுதாய பாதுகாப்பு பெறவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

குடும்பமும், தாய்மையும், குழந்தைகளும் மற்றும் இளவயது நபர்களும் பாதுகாப்பும், உதவியும் பெற உரிமை கொண்டவை. திருமணத்திற்கு சுதந்திரமாக இசைவளிக்க உரிமை உண்டு. உயர்ந்த அளவில் எட்டக் கூடிய உடல்ரீதியான மற்றும் மனரீதியான ஆரோக்கியத்தை அனுபவிக்க ஒவ்வொருக்கும் உரிமை உண்டு.

கட்டாய ஆரம்பக் கல்வியை அனைவருக்கும் ஒரு நியாயமான கால கட்டத்திற்குள் இலவசமாக அளிக்க இந்த உடன்படிக்கையின் உட்பட்ட நாடுகள் ஒவ்வொன்றும் பொறுப்பேற்கிறது. அறிவியல் முன்னேற்றத்தின் பயன்களை அனுபவிக்கவும், கலாச்சார வாழ்வில் பங்கேற்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

**சர்வதேச உடன்படிக்கை வேறுபாடுகள் :**

வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை மற்றும் பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை வேறுபாடுகள்:



Scanned with CamScanner

| வ. எ | வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை | பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை |
|---|---|---|
| 1. | இது வாழ்வியல் மற்றும் அரசியல் குறித்த மனித உரிமைகளை விளம்புகிறது. (எ-டு. சித்ரவதைப்படுத்தக் கூடாது. பாகுபாடு காட்டக் கூடாது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் போன்று) | இது பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகள் குறித்த மனித உரிமைகளை விளம்புகிறது. (எ-டு. போதுமான வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தித் தருதல், தொழிற் சங்கங்கள் அமைத்துக் கொள்ளுதல், பெண்டிர் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு, மருத்துவ வசதி போன்று) |
| 2. | இதில் கூறப்பட்டுள்ள உரிமைகள் பெரும்பாலும் எதிர்மறைத்தன்மை கொண்டவை. அதாவது மக்களின் இன்னென்ன உரிமைகளை நாடுகள் மீறக் கூடாது என்று கட்டளையிடும் விதத்தில் இவ்வுரிமைகள் உள்ளன. | இதில் கூறப்பட்டுள்ள உரிமைகள் பெரும் பாலும் நேர்மறைத் தன்மை கொண்டவை. அதாவது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மக்களின் பொருளாதாரம், சமுதாய உணர்வு, கலாச்சரரம் ஆகிய வற்றையும் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று அரசுக்கு நெறி முறைவுறுத்தும் கொள்கை களாக விளங்குகின்றன. |
| 3. | இதில் கூறப்பட்டுள்ள உரிமை களை அரசு மீறினால், பாதிக்கப் பட்டவர் தக்க நீதிமுறைத் தீர்வழிகளை மனித உரிமைகள் ஆணையங்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றின் வழியாகப் பெறலாம். இவ்வுரிமைகள் நீதிமுறைப்படி வலியுறுத்தி செயல்படுத்தக் கூடியது ஆகும். | இதில் கூறப்பட்டுள்ள உரிமைகள் மீறப்பட்டதால் அதனால் பாதிக்கப் பட்டவர் நீதிமுறைத் தீர்வுவழி பெற இயலாது. ஏனெனில் இவை நீதி முறைப்படி வலியுறுத்திச் செயல் படுத்தக் கூடியவை அல்ல. |
| 4. | இதில் கூறப்பட்டுள்ள உரிமைகள், நமது இந்திய அரசியலமைப்பில் பகுதி3-ல் உள்ள அடிப்படை உரிமை களுக்கு ஒப்பானதாகும். அந்த அடிப்படை உரிமை களே மேற்கண்ட வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமை களின் அடிப்படையில் பிறந்தவை என்றும் கூறலாம். | இதில் கூறப்பட்டுள்ள உரிமைகள், நமது இந்திய அரசியமைப்பில் பகுதி 4ல் உள்ள அரசு நெறி முறையுறுத்தும் கொள்கைகளுக்கு ஒப்பானதாகும். அந்த அரசு நெறி முறையுறுத்தும் கொள்கை களே, மேற்கண்ட பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமை களின் அடிப்படையில் பிறந்தவை என்றும் கூறலாம். |



Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| 5. | இதில் கூறப்பட்டுள்ள உரிமைகளை நாடுகளின் இடையே வலியுறுத்திச் செயல்படுத்த மனித உரிமைகள் குழு உள்ளது. | இதில் கூறப்பட்டுள்ள உரிமைகளை நாடுகளுக்கு இடையே வலியுறுத்திச் செயல்படுத்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையமும், ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு முகமைகளும் உள்ளன. |
| 6. | ஒரு நாடு இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள உரிமைகளை மீறுகிறது என்பதன் அடிப்படையில் மற்றொரு நாடானது மேற்படி மனித உரிமைகள் குழுவிற்கு தகவல் ஏதும் அனுப்ப முடியாது. ஆனால் எப்பொழுது அனுப்ப முடியும் என்றால் அம்மற்றொரு நாடானது, இந்த உடன் படிக்கையின் படி, தான் ஒரு நாட்டிற்கு எதிராக அனுப்பும் தகவல்களை பெற்றுக் கொள்ள மனித உரிமைகள் குழுவிற்கு தகுதி உள்ளது என்பதை அங்கீகரித்து விளம்புகை செய்து, விருப்பப்பட்டு ஏற்றுக் கொள்ள வேண்டும். | இங்கு நிலைமையே மாறுபட்டது ஆகும். ஒரு நாடு இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டு உள்ள உரிமைகளை மீறுகிறது என்பதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின் தனிநபர் கூட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையத்திற்கு தகவல் அனுப்பலாம். |
| 7. | இந்த உடன்படிக்கையானது 23.3.1976ம் தேதி முதல் அமலுக்கு வந்தது. | இந்த உடன்படிக்கையானது 3.1.1976ம் தேதி முதல் அமலுக்கு வந்தது. |

## 7. சமகாலத்திய சவால்கள்

இந்தியா உள்ளிட்ட உலக அளவில் சமகாலத்திய சவால்கள் இருப்பினும் அதற்கான எண்ணிக்கையில் அடங்கா வகையில் உள்ளன. சட்டங்களும் அதற்குரிய வழிமுறைகளும் பல உள்ளன.

### 7.1 குழந்தைத் தொழிலாளர்களின் நிலையும் உரிமையும்

குழந்தைகளை நலனே நாட்டின், சமுதாயத்தின் நலனாகும். இந்தியக் குழந்தைகள் கீழ்க்கண்ட உரிமைகளைப் பெற தகுதியுடையவர்கள். 1. மனித கண்ணியத்துடன் வாழும் உரிமை 2. பெற்றோரின் பராமரிப்பில் வாழும் உரிமை 3. இனம், நிறம், பால், தேசியம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் வாழும் இயல்பான உரிமை 4. ஆரோக்கியமான முறையில வளர வசதிகளையும், வாய்ப்புகளையும் பெறும் உரிமை 5. ஆளுமையை வளர்க்கக் கல்வி பயிலும் உரிமை 6. சுதந்திரமாக கருத்துக்களைச் சொல்லும் உரிமை 7. தேசியத்தைப் பெறும் உரிமை 8. சுரண்டலில் இருந்தும், உடல், மனரீதியான கொடுமைகளில் இருந்தும் விடுபட்டு சுதந்திரமாக உள்ள உரிமை.



Scanned with CamScanner

## குழந்தைகள் சட்டம் :

❀ 1960ல் இந்திய அரசு குழந்தைகள் சட்டத்தை இயற்றியது. 1974ல் இந்திய அரசு குழந்தைகளுக்கான தேசியக் கொள்கையை வெளியிட்டது. குழந்தைகள் இளம் வயதில் குற்றங்கள் செய்வதை தடுத்து அந்தக் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக 1986ல் மத்திய அரசு குழந்தைகள் நீதிச் சட்டத்தை இயற்றியது. அவை 1. குழந்தைப் பிறந்தவுடன் பெற்றோர்கள் குழந்தையின் பிறப்பை பதிவு செய்யவேண்டும் 2. பெயரிட்ட பிறகு குழந்தையானது நல்ல குடிமகனாக வளர முறையான பராமரிப்பு கட்டாயமாகின்றது 3. ஒவ்வொரு குழந்தைக்கும் முறையானக் கல்வியும் எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகளும் அளிக்கப்பட வேண்டும்.

❀ யுனிசெப் அறிக்கையின்படி உலகம் முழுவதிலும் 5 முதல் 14 வயதுக்கு உட்பட்ட 158 மில்லியன் சிறுவர், சிறுமிகள், வீட்டு வேலைத் தவிர பிற வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்புகள் குழந்தைத் தொழிலாளரின் உழைப்புச் சுரண்டலை கவனத்தில் கொண்டுள்ளது.

❀ 1990ம் ஆண்டுகளில் சோமாலியா மற்றும் ஐக்கிய நாடுகளைத் தவிர உலகில் உள்ள பிற நாடுகள் அனைத்தும் குழந்தைகள் உரிமைக்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. சோமாலியாவை வழிநடத்தும் அரசாங்கம் இல்லாததால், தாமதமாக 2002ம் ஆண்டு சோமாலியா அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.

❀ 1999ம் ஆண்டு உலகளவில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான ஓர் இயக்கம் உருவெடுத்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்த இயக்கத்தில் பங்கேற்றனர். 17.11.1998ம் ஆண்டு துவங்கப்பட்ட இந்த இயக்கம் உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் சென்று அதிகளவு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களையும் பங்கேற்க வைத்தது. ஜெனிவாவில் நடைபெற்ற குழந்தைத் தொழிலாளர் அமைப்பு கருத்தரங்கில் இந்த இயக்கம் நிறைவு பெற்றது. இதில் பங்கேற்றவர்கள் குழந்தைத் தொழிலாளர் அமைப்பு உடன்படிக்கையை ஆதரித்ததும், குழந்தை தொழிலாளருக்கு எதிரான அணுகுமுறையும் எதிர்த்தும் பேசினார். குழந்தைத் தொழிலாளர் அமைப்பு வரலாற்றில் இன்று 169 நாடுகள் இந்த உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. உடன்படிக்கை ஒப்புக் கொள்ளப்பட்டதற்கு உலகளவில் நடந்த விழிப்புணர்வே மிகப்பெரிய காரணம் ஆகும்.

❀ ஆசியாவில் 61% மும், ஆப்பிரிக்காவில் 32% மும், லத்தீன் அமெரிக்காவில் 7% மும், அமெரிக்காவில் 1% மும், கனடா, ஐரோப்பா மற்றும் செழிப்பான நாடுகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். ஆசியாவில் நடைபெறும் வேலையில் 22 % மும், அமெரிக்காவில் 17% மும், குழந்தைத் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை விகிதம் நாட்டுக்கு நாடும், நாடுகளுக்குள்ளேயும் நிறைய அளவில் வேறுபட்டு காணப்படுகின்றன.

## குழந்தைத் தொழிலாளர்கள் நிலை :

❀ குழந்தைத் தொழிலாளர் பிரச்சனை என்பது உலகளாவியப் பிரச்சனை ஆகும். 14 வயதுக்கு உட்பட்டவர்களை யாவரும் குழந்தைகள் ஆவர். 14 வயதுக்கு உட்பட்ட எந்தவொரு குழந்தையையும்



Scanned with CamScanner

தொழிற்சாலைகளில் பணியில் நியமிக்கக் கூடாது என்று அதிகாரப்பூர்வமாக இந்திய அரசு அறிவித்துள்ளது. இருப்பினும் இந்திய அளவிலும் உலகளவிலும் இன்றளவும் குழந்தைகள் பணிகளில் அமர்த்தப்படுகின்றனர்.

❀ உலகளவில் பல இலட்சம் குழந்தைகளின் கரங்கள் தீப்பெட்டித் தொழிற்சாலைகள், மோட்டார் பணிமனைகள், சுரங்கத் தொழில்கள், விசைத்தறிப் பட்டறைகள், உணவு விடுதிகள், செங்கல் சூலைகள், பட்டாசுத் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகின்றன. சிலர் பிச்சை எடுப்பதில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஏழ்மை, கல்லாமை, சூழ்நிலைகள், மனக்குழப்பங்கள் ஆகியவை குழந்தைத் தொழிலாளர் என்ற நிலைக்கு தள்ளுவதற்கு வழி செய்கின்றன.

**குழந்தை தொழிலாளர் அதிகரிப்பு :**

❀ இந்தியாவில் 1981ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை 1.4 கோடி ஆகும். அரசு சாரா நிறுவனம் ஒன்றின் கணக்கெடுப்பில் இந்த எண்ணிக்கை 4.4 கோடி எனக் கணக்கிட்டுள்ளது. 2001ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1.27 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் இந்தியாவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கன்னியாகுமரியில் முந்திரி, ரப்பர் தோட்டங்களிலும், திருப்பூரில் பனியன் தொழிலிலும், சிவகாசியில் பட்டாசு, தீப்பெட்டி தொழிற்சாலைகள், பிற மாவட்டங்களில் சாலையோர உணவகங்கள், செங்கல் சூளைகள், கல்குவாரிகள், மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் இடங்கள், ஹோட்டல், லேத், சிறு இன்ஜினியரிங் யூனிட்டுகள், மிட்டாய், இறைச்சிக் கடை, டீ கடை என 10 மணி முதல் 20 மணி நேர வேளையில் குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

❀ இந்தியாவில் தேசிய உற்பத்தியில் 20 சதவீதம் குழந்தைத் தொழிலாளர்களின் உழைப்பினால் உருவாக்கப்படுகிறது. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும்போது, அவர்களது பெற்றோருக்கு முன்பணம் மற்றும் கடன்தொகை அளித்து கொத்தடிமைகள் போல வேலை வாங்கப்படுகின்றனர். எத்தனை சட்டங்கள், கண்காணிப்புகள் இருந்தாலும், குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை. வலுவான சட்டங்களால் மட்டுமே இதனை போக்கமுடியும். குழந்தைத் தொழிலாளர் உருவாக குடும்ப வறுமை, அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் இருத்தல், பெற்றோரில் ஒருவர் உயிரிழத்தல், குடும்பத் தலைவர், மது மற்றும் தீய பழக்கங்களுக்கு அடிமையாதல், குழந்தைகளின் தாய், தந்தையருக்கு இடையில் பிரிவு போன்றவை முக்கியக் காரணங்களாகக் கருதப்படுகின்றன.

**குழந்தைத் தொழிலாளர்களை பாதுகாத்தல் :**

❀ மக்களின் மனப்பாங்கு மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில் பொருள்கள் உற்பத்தி ஆகியவற்றில் குழந்தைத் தொழிலாளர் குறித்த அக்கறை தற்போது அதிகரித்து உள்ளது. குழந்தைத் தொழிலாளர்கள் தயாரித்த பொருள்களை வாங்குவதை புறக்கணித்தால் அது இன்னும் கூடுதல் விளைவை ஏற்படுத்தி விடும். ஏனென்றால் தற்போது பார்த்து



Scanned with CamScanner

வரும் சாதாரண வேலையைவிட்டு உடல், மனரீதியாக வேதனை தரும் பாலியல் மற்றும் விவசாயம் போன்ற தொழில்களில் அதிகளவில் குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். இதற்கு சரியான உதாரணம் சொல்ல வேண்டும் என்றால் அமெரிக்காவில் குழந்தைத் தொழிலாளர் தடைச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு வங்கதேசத்தில் உள்ள ஆடை தயாரிப்பு தொழிற்சாலையில் பணிபுரிந்த 50000 குழந்தைத் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். அதன்பிறகு அந்த குழந்தைகள் கல்வெட்டுதல், கடினமான பணி மற்றும் பாலியல் தொழிலுக்குச் சென்றனர். இந்த தொழில்கள் ஆடை தயாரிப்பு தொழிற்சாலையைவிட மிக மிக அபாயகரமானது. இதை யுனிசெப் ஆய்வு செய்துள்ளது. குழந்தைத் தொழிலாளர்களைப் புறக்கணிப்பது என்பது அவர்களின் நீண்டகால வாழ்வியல் முறைகளை சிதைக்கிறது என்றும் யுனிசெப் தெரிவித்துள்ளது.

❀ மில்டன் பிரைட்மான் கூற்றின்படி, தொழிற்புரட்சி ஏற்படுவதற்கு முன்பாக எல்லாக் குழந்தைகளுமே விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். தொழிற்புரட்சியின்போது பண்ணைத் தொழிலில் இருந்து தொழிற்சாலைக்கு இடம்பெயர்ந்தனர். கூடுதல் நேரத்துக்கான சம்பளம், மற்றும் சம்பள உயர்வால் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதற்கு பதிலாக பள்ளிக்கு அனுப்பினர். சட்டம் இயற்றுவதற்கு முன்பாகவும், பின்பாகவும் குழந்தைத் தொழிலாளர்முறை மெல்ல குறைந்தது.

❀ மேற்கத்திய சமூகத்தில் குழந்தைகளின்நிலை பற்றி எழுதிய பொருளாதார வரலாற்று ஆய்வாளர் ஹியூஜ் கன்னிங்ஹாம் கூறுகையில், 20ம் நூற்றாண்டு ஆரம்பத்தில், வளர்ந்த நாடுகளில் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை குறையும் என 50 ஆண்டுகளுக்கு முன்பான கணிப்பில் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அப்படியில்லை. மீண்டும் வளர்ந்த நாடுகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பெருகியுள்ளனர். இது தேசிய அளவிலான அல்லது உலகளாவிலான பொருளாதாரத்தைப் பற்றிய கேள்வியை எழுப்புகிறது.

**குழந்தைகள் பாலியல் கொடுமை தடுப்பு சட்டம் :**

❀ இந்தியாவில் குழந்தைகளிடம் பாலியல் வன்முறை, சித்ரவதை, ஆபாசபடம் எடுத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கும் வகையில் இந்திய அரசால் குழந்தைகள் பாலியல் கொடுமை தடுப்பு சட்டம் கொண்டு வரப்பட்டு உள்ளது. அதற்கான சட்டமுன் வரைவுக்கு மத்திய அமைச்சரவை 3.3.2011ல் ஒப்புதல் அளித்துள்ளது.

❀ இந்த சட்டத்தின்படி ஒருவருக்கு அதிகபட்சமாக 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், குழந்தைகளிடம் தவறான முறையில் நடக்கும் பெரியவர்களின் செயல்கள் பாலியல் தொந்தரவாக கருதவும். இச்செயல்களுக்கு குறைந்தபட்ச தண்டனையாக 3 வருடம் சிறை தண்டனை விதிக்கவும், சிறுவர்களுக்கான பாலியல் தொல்லைகளை தடுக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

❀ அனாதை ஆசிரமங்கள், சிறுவர் காப்பகங்கள் போன்ற இடங்களில் குழந்தைகளை கவனிப்பவர்கள் குழந்தைகளின் காப்பாளர்களாக



Scanned with CamScanner

கருதப்படுவார்கள். அவர்கள் குழந்தைகளிடம் தவறான முறையில் நடக்கும் பட்சத்தில் அது அவலமாக கருதப்படும். பாதுகாப்பு துறை, காவல்துறை, அரசு ஊழியர்கள், குழந்தை காப்பகத்தின் நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள், மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவை இந்த நம்பிக்கைக்கு உரியவர்கள் என்ற பட்டியலில் வருகிறார்கள். மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்று திறனாளிகள் ஆகியவர்கள் மீது பாலியல் குற்றங்கள் புரிபவர்களுக்கு 12 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை வழங்கப்படும்.

❀ குழந்தைகளின் ஆபாசப் படங்கள் வைத்திருப்பதும் அதை ஊடகங்களில் பயன்படுத்துவதும் தண்டனைக்குரிய சட்டமாக கருதப்படும். மேலும் ஊடகங்கள் மற்றும் புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றம் இழைக்கப்படும் தெரிந்த தகவல்களை அரசுக்கு தர அறிவுறுத்தப்படுகிறார்கள். தகவல் தராத பட்சத்தில் அது குற்றமாக கருதப்படும். இந்த புதிய சட்டம் குழந்தைகளை எல்லா விதமான பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கின்றது.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் நடவடிக்கைகள்:

❀ குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு (தடுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) 1986 சட்டத்தின்படி, 15 தொழில்கள் மற்றும் 57 செயல்முறைகளில் (திட்ட பகுதி அ மற்றும் பகுதி ஆ) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தடுக்கப்பட்டு உள்ளது. தொழில்துறை தவறு செய்பவர்களைக் கடுமையாகக் கண்டிப்பதோடு, அவர்கள்மீது சட்டப்படி முறையான நடவடிக்கையும் எடுக்க வேண்டும். அதோடு இச்சட்டத்தின் திட்ட செயல்பாடுகள் முறையாக செயல்படுத்தப்படுகின்றனவா என நடமாடும் தொழிலாளர் நீதிமன்றங்கள் மூலம் கவனிக்கப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட வழக்குகளை முறையாக விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும்.

❀ இளையோர் நீதிச்சட்டம்(இளையோர் நீதிக் காப்பு) - 2006 என்பது ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட சிறார்கள், குழந்தைத் தொழிலாளர்களுக்கு கவனிப்பு, பாதுகாப்பு, முன்னேற்றம் மற்றும் மறுவாழ்வு அளிக்கும் சட்டம் ஆகும்.

குழந்தைகளின் நலனுக்கான சட்டங்கள் :

❀ இந்திய அரசியல் அமைப்பின் நெறிக்காட்டும் வழிமுறைகளில் சரத்து எண்39(க) மற்றும் 45 ஆகியன குழந்தைகள் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் பற்றிக் கூறுகிறது.

❀ சட்டம் 24, குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப் பற்றியது ஆகும். இது குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து அவர்களைப் பாதுகாக்க உறுதிச் செய்கிறது. 14 வயதிற்கு உட்பட்ட எந்தக் குழந்தையும் ஆலைகளில் வேலை செய்யவும், சுரங்கள் மற்றும் அபாயமான தொழில்கள் செய்வதையும் தடை செய்கிறது.

❀ சட்டம் 39(க), குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி, குழந்தைகள் மற்றும் இளையோர்மீது போதிய கவனத்துடன் செயல்படுதல், சுரண்டலில் இருந்து பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.



Scanned with CamScanner

ஃ சட்டம் 45, பதினான்கு வயதிற்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க வழிவகுக்கிறது.

ஃ நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சுதந்திர போராட்ட தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே, குழந்தைகளின் கல்வி உரிமையின் முக்கியத்துவத்தை ஆங்கிலேயர் காலத்திலேயே சட்டசபையில் எடுத்துரைத்து, அதனை பெறுவதற்காக அரும்பாடுபட்டார். அவரின் கனவு 1.4.2010ம் நாள் கொண்டு வரப்பட்ட கல்வி உரிமைச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. 6 முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு கல்வி ஓர் அடிப்படை உரிமையாக ஆக்கப்பட்டு உள்ளது. இதன் மூலமாக இந்திய அரசு இளைய சமுதாயத்தை நிறைவான கல்வி அறிவு படைத்தோர் சமுதாயமாக மாற்ற வழி வகுத்துள்ளது.

ஃ குழந்தைகள் முன்னேற்றம் மற்றும் நலனுக்காக மிகுதியான நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. அவை,

1. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம் (ICDS) - 1975 என்பதின் நோக்கமானது, 6 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களின் உடல்நலத்தைப் பாதுகாத்தல். குழந்தை இறப்பு விகிதம், சத்துணவு குறைவு, பள்ளி இடை நிற்றல் போன்றவற்றின் விழுக்காடுகளைக் குறைத்தல் ஆகும்.

2. பணிக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்காக குழந்தைகள் பேணி வளர்க்கும் ராஜீவ்காந்தி குழந்தைக் காப்பக திட்டம் 2006ல் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்தி நடத்தி வருகின்றது.

3. வீதிகளில் வாழும் குழந்தைகளுக்கானத் திட்டமானது, வீதிகளில் ஆதரவின்றி திரியும் குழந்தைகளுக்கு உறைவிடம், ஊட்டச்சத்து, உடல்நலம் பேணல், கல்வி மற்றும் ஓய்வு நேரத்தை பயன்படுத்த வழிசெய்தல் போன்ற ஒருங்கிணைப்பு திட்டங்கள் நடைமுறைப்பட்டு உள்ளன. குழந்தைகளைத் தவறாக பயன்படுத்துவதில் இருந்தும், சுரண்டலில் இருந்தும் இத்திட்டம் பாதுகாக்கிறது.

4. குழந்தை உதவி மையங்களானது, பிரச்சனைகளில் இருக்கின்ற குழந்தைகளுக்கும் அவசரக் காலத்திலும் உதவி செய்கின்றன. குழந்தைகளின் உடல்நலன், பாதுகாப்பு ஆகியவற்றிலும் சிறப்புக் கவனத்தை செலுத்துகின்றன.

5. ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்பு அமைப்பானது நிறுவனம் சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா குழந்தைகளுக்கு பாதுகாப்பு கிடைக்க உதவுகிறது. 6. வேலைக்குச் செல்லும் குழந்தைகளுக்கான கவனிப்பும், பாதுகாப்பும் 2005 என்பது முறைச்சாராக் கல்வியும், தொழிற்கல்வியும், தொடர்கல்வியும், வேலைக்குச் சென்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

ஃ குழந்தைகள் தினம் கடைப்பிடித்தல் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்14ம் நாள் 'குழந்தைககள் தினமாக'க் கொண்டாடப்படுகிறது. அது அரசுக்கும், தன்னார்வ நிறுவனங்களும், குழந்தைகளின் வளர்ச்சித் திட்டங்களை திரும்பிப் பார்க்க வாய்ப்பு அளிக்கிறது. மேலும் பல்வேறுத் துறைகளில் அவர்கள் முன்னேற ஊக்கம் அளிக்கின்றது.

ஃ குழந்தைகளுக்காக பல்வேறு சட்டங்களை உருவாக்கினாலும் குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற கொடுமைகள் குறித்து அவர்களுக்கு



Scanned with CamScanner

விழிப்புணர்வு உருவாக்கப்பட வேண்டும். பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டுவர சரியான வழிகாட்டுதலையும், நெறிப்படுத்துதலையும் அணுகக்கூடிய வகையில் அவர்களை உருவாக்க வேண்டும். குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற பல்வேறு கொடுமைகள் தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றை நீக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமுதாய நல நிறுவனங்கள் ஆகியவைகள் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.

## 7.2 பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துக் கொண்டு அவற்றை நீக்க முயல்வது ஆகும். தனியுரிமை, சமத்துவம், அரசியல், விடுதலை மற்றும் தன்னாட்சி இவற்றை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டது.

**பெண்ணியம் - விளக்கம் :**

**Feminism** என்ற ஆங்கிலச் சொல் **Femina** என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபு ஆகும். பெண் என்னும் சொல் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்று பொருள்படும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் பண்புகளைக் குறிக்கவே பயன்பட்டு வந்தது. பின்பு பெண்களின் உரிமையைப் பேசுவதற்காகக் குறிப்பிடப்பட்டது. 1889 வரையில் **Womanism** என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சனைகளையும் அதன் அடிப்படையிலான போராட்டங்களையும் உணர்த்தப் பயன்பட்டு வந்தது. பின்பு பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காகக் குறிப்பிடப்பட்டது. 1890ம் ஆண்டு முதல் Womanism என்ற சொல்லின் இடத்தை **Feminism** என்ற சொல் பெற்றது.

சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதி, **Feminism** என்பதற்கு பெண் உரிமை ஏற்புக் கோட்பாடு, பெண்ணுரிமை ஆதரவு என்று கூறியிருக்கும் பொருள் பொருத்தமுடையதாகும் என்கிறது.

**அறிஞர்கள் கருத்து :**

கார்டன் என்பவர், "பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம்" என்கிறார்.

ஜெயின் என்பவர், "பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி, பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும் அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக் கொள்ள வைப்பது" என்றார்.

புட்சன் என்பவர், "பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம்" என்றார்.

சார்லட் பஞ்சு என்பவர், "பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன்மூலம் உலக அளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தினை ஏற்படுத்த முடியும்" என்கிறார்.

ரோஸலிண்ட் டெல்மார் என்பவர், "பெண்ணியம் என்பது பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம்" என்ற கருத்துத் தெரிவிக்கிறார்.



Scanned with CamScanner

ரே ஸ்டான்சி என்பவர், "பெண்ணியவாதி என்பவர் பெண்களின் போராட்டத்திற்குத் துணை நின்று அவர்களின் அடிமைத்தனத்தைக் களைந்தெறிய உதவுவதோடு அவரின் மையக் கொள்கை சமுதாயத்தில் பெண்களின் நிலையில் மாற்றம் என்பதைப் பற்றியதாகவே இருக்கவேண்டும்" என்று குறிப்பிடுகின்றார்.

ஆண்டாண்டுக் காலமாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் பெண் அடிமைப்பட்டே இருந்தாள். குடும்ப நிர்வாகம் முதற்கொண்டு பல கடமைகளைச் செய்தாலும், அன்பு, பாசம் முதலிய பல நல்ல பண்புகளைப் பெற்றிருந்தாலும் பெண் தொடர்ந்து அடிமையாகவே இருக்கிறாள். இந்தச் சமுதாயம் ஆண்களை மையமிட்டது. எல்லாக் கருத்துக்களும் செயல்களும் ஆண்களை மையமிட்டே நடக்கின்றன. இவ்வாறு பெண்ணியம் தீவிரமான கருத்துக்களை முன்வைக்கிறது. இத்தகைய சமுதாயச் சூழ்நிலையை மாற்றவேண்டும். பெண்விடுதலை பெறவேண்டும் என்று பெண்ணியம் கூறுகிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆளுமை உண்டு. அந்த ஆளுமை காப்பாற்றப்படவேண்டும் என்று பெண்ணியம் கூறுகிறது. பெண் விடுதலை என்பது சமூக பொருளாதார அரசியல் - பண்பாட்டுத் தளங்களில் பெண் சுயமாக இயங்குவதற்கு வேண்டிய உரிமைகளைப் பெறுவது பெண்ணியம் ஆகும்.

**பெண்ணியம் வரலாறு :**

கி.பி.19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்ணியம் என்ற கோட்பாடு எழுந்தது. தொடர்ந்து பிரான்சு நாட்டைச் சேர்ந்த சய்மோன் தெபௌவே எழுதிய இரண்டாவது பாலினம் என்ற பிரசித்தமான நூலை முன்னோடியாகக் கொண்டு பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன் வைக்கப்பட்டது. பல நாடுகளில் பெண்ணுரிமை ஒரு பிரச்சினையாகப் பேசப்பட்டது. இயக்கங்களும் தோன்றின.

இந்தியாவில் சமூகச் சீர்திருத்த உணர்வுடைய பலர் பெண்ணியம் பற்றிப் பேசியும் எழுதியும் வந்தனர். தமிழகத்தில் முதல் நாவலாசிரியராகிய மாயவரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை, பெண் விடுதலை பற்றி எழுதியுள்ளார். திரு.வி.க. பெண்ணின் பெருமை என்ற நூலை எழுதியுள்ளார். வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் பெண்ணின் அற்புத ஆற்றலைக் கதையாக்கித் தந்துள்ளது. தமிழகத்தில் பெண்விடுதலை பற்றி அழுத்தமாகவும் புதுமைக் கண்ணோட்டதுடனும் எழுதியவர்கள் இருவர். ஒருவர் பாரதியார் இன்னொருவர் தந்தை பெரியார். தமிழகத்தில் 1980ம் ஆண்டு வாக்கில் பெண்ணிய இயக்கங்கள் தோன்றின.

**பெண்ணியத்தின் கருப்பொருள்கள் :**

1. பெண்ணியம் அனைத்து வகைப் பெண்களுக்கும் உரிமை வேண்டுவது. ஆண், பெண் சமத்துவ உரிமைகள், பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை முறைகளுக்கும், பணிகள் அனைத்திற்கும் உரிமை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
2. பெண்களின் உரிமையைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்தும் அனைத்தையும் பெண்கள் முன்னேற்றத்திற்கு கேடு விளைவிக்கும்

அனைத்தையும் நீக்குதல் வேண்டும். 3. பெண்களுக்கு விழிப்புணர்வு ஊட்டி அவர்களை ஒன்றுபடுத்தியும் உரிமைக்குப் போராடுதல், இயக்க ரீதியாக ஒன்றுபடுதலும் போராடுதலும் வேண்டும். 4. பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தை நிலை நாட்டுதல் வேண்டும். 5. ஆணாதிக்கத்தை அடையாளம் கண்டு அதனை எதிர்த்தல் வேண்டும். 6. பெண்களின் மீதான அனைத்துவகை ஒடுக்கமுறைகளையும் ஆராய்ந்து அதனைப் போக்கவதற்கான தீர்வுகள், விடுதலை பெறுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். 7. சுருக்கமாகச் சொன்னால் பெண்களின் நலனை போற்றுதலும், அதனை அடைதலும், அடைந்தவற்றைக் காத்தலும் ஆகும்.

**பெண்கள் உரிமைகளும், சட்டங்களும் :**

பழங்காலத்தில் இருந்தே பெண்களின்நிலை மாறுபட்டே இருந்து வருகின்றது. பெண்கள் மிக உயர்வாகக் கருதப்பட்டதும், சொல்ல முடியாத அளவு துன்பங்கள் அனுபவித்ததும் வரலாற்று உண்மைகள் ஆகும். சமூகத்தில் பெண்கள் நிலையை உயர்த்த இந்திய அரசு எண்ணற்ற உரிமைகளையும், சட்டங்களையும் நடைமுறைப்படுத்தி உள்ளது.

இந்திய அரசியலமைப்பு ஏற்றத்தாழ்வற்ற சமத்துவம் மற்றும் பெண்களுக்கான சிறப்பு சலுகைகளுக்கும் உத்திரவாதம் அளித்துள்ளது. (இந்திய அரசியலமைப்பின் விதிகள் 14, 15, 16) இது தவிர அரசாங்கமும் பெண்கள் நலனுக்கான பல சமூக நலச் சட்டங்களையும் நிறைவேற்றி உள்ளது. ஒவ்வொரு வருடம் மார்ச் 8 அன்று பன்னாட்டு மகளிர் தினமாக கொண்டாடப் படுகின்றது.

**பெண்களுக்கான சமூக நலச் சட்டங்கள் :**

1. 1955ம் ஆண்டு ஏற்படுத்தப்பெற்ற இந்து திருமணச் சட்டப்படி பெண்களின் திருமண வயது 17 வயதாக அறிவிக்கப்பெற்று தற்பொழுது 21 வயதாக அறிவிக்கப்பட்டு பின்பற்றப்படுகின்றது 2. 1956ம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம், பெற்றோர்களின் சொத்துக்களையடைய பெண்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது 3. 1961ம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம்(1984ல் திருத்தப்பட்டது). வரதட்சணை வாங்குபவர்களுக்கு சிறைத் தண்டணைகளை கூடிய கடுந்தண்டணைகளை அளிக்கின்றது 4. 1956ம் ஆண்டு இந்து விதவைகள் மறுமணச் சட்டம், இந்து விதவைகள்(கைம்பெண்கள்) மறுமணத்தை அங்கீகரிக்கின்றது. 5. இந்து திருமணச் சட்டம் (1954ல் தமிழக அரசின் திருத்தச் சட்டப்படி) சுயமரியாதை திருமணங்களுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் 6. 1989ம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் (தமிழக அரசின் திருத்தச் சட்டம்)பெண்களுக்குப் பரம்பரை சொத்தில் சமபங்கு உரிமை 7. தமிழக அரசின் 1999ம் ஆண்டு பெண்களை கண்ணியமற்ற முறையில் சித்தரிப்பதை தடை செய்யும் சட்டமானது, வாரப்பத்திரிகைகள், சுவரொட்டிகள், விளம்பர பலகைகள், ஊடகங்கள் போன்றவைகளில் விளம்பரப்படுத்துவதை தடை செய்கின்றது.

## பெண்களுக்கான தொழிலாளர் சட்டங்கள் :

பணிக்குச் செல்லும் பெண்களின் பாதுகாப்பிற்காக இந்திய அரசு பெண்களுக்கான தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்தி உள்ளது. 1. 1948ம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டம் 2. 1951ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் 3. 1952ம் ஆண்டு சுரங்கத் தொழிலாளர் சட்டம் போன்ற சட்டங்கள் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் அவர்களின் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. 4. 1961ம் ஆண்டு மகப்பேறு நலச்சட்டம் மகப்பேறு காலத்தில் பெண்கள் விடுப்பு எடுக்கவும், அக்காலத்தில் ஊதியம் பெறவும் உறுதி செய்யப்பட்டு உள்ளது.

## பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் :

பெண்களைப் பாதுகாக்க கல்வி அளிக்க, வாழ்வாதரங்களை உயர்த்த, எண்ணற்ற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில: 1. வேலைக்கானப் பயிற்சித் திட்டமானது பணி மற்றும் பயிற்சி ஆதாரத்திட்டம் ஆகும். இத்திட்டம் 1996ல் ஆரம்பிக்கப்பட்டது. இது கைவேலைப்பாடுகள், கைத்தறிகள், காதி போன்ற கிராமத் தொழிற்சாலைகளில் வேலைவழங்க பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. 2. சுயவம்சத்திட்டமானது பெண்களுக்கு, சுய உதவிக்குழுக்கள் போன்ற திட்டங்களின்வழியாக பெண்களின் அதிகாரக் குவிப்பு மற்றும் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது. 3. குறுகிய கால இல்லங்கள்-1996 என்பது சமூக, பொருளாதார, மன அழுத்தம் போன்ற பிரச்சனைகளில் துன்பப்படுகின்ற பெண்களுக்கு ஆற்றுப்படுத்தும் இடமாக இது உள்ளது. 4. குடும்ப ஆலோசனை மையங்களானது குடும்பங்களில் ஒத்துப்போக முடியாத சூழலினாலும், சமூக ஆக்கிரமிப்புகளாலும் பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு அறிவுரை வழங்கும் மையமாக இவைச் செயல்படுகின்றன. 5. பெண்கல்வித் திட்டங்களானது பல்வேறு காரணங்களினால் பள்ளிப்படிப்பை தொடர முடியாத 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் கல்வி கற்கவும், திறன்களை வளர்க்கவும் வழி செய்கிறது. இதன்மூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. இது பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. 6. கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களானது பெண்கள் தங்களின் உரிமைகளையும், வாய்ப்புகளையும் தெரிந்து கொள்ளாததால் எண்ணற்றப் பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டி உள்ளது. இந்தத் திட்டம் ஏழைப் பெண்களிடம் விழிப்புணர்வை உருவாக்கி அவர்கள் தங்கள் நிலைகளையும், உரிமைகளையும் தெரிந்து பல பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது.

பெண்களின் சமூக வாழ்க்கை உயர்வு அரசின் சட்ட திட்டங்களில் மட்டுமல்ல, ஏராளமான சமூக நல அமைப்புகளின் முயற்சியாலும் முன்னேற்றம் கண்டு உள்ளது. இவைகளின் உதவியோடு எதிர்காலத்தில் பெண்கள் நிலை மேலும் உயர்வடையும் என உறுதியாகக் கூறலாம்.

## பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் :

அ. இரட்டை வேலைப்பளு என்கிற கொடிய சுமை உலகம் முழுமைக்கும் பெண்களைச் சார்ந்ததாகவே இருக்கின்றன.



Scanned with CamScanner

ஆ. கடமையைச் சரியாகச் செய்தாலோ, இழுத்த இழுப்பிற்கு அடிபணிய மறுத்தாலோ அவர்களின் மேலதிகாரிகளால் பெண்கள் அலட்சியப்படுத்தப்படுவதோடு தேவை இல்லாத குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாக நேரிடுகிறது.

இ. வேலைக்குப் போகும் பெண்களின் நடை, உடை, நடத்தை ஆண்களால் கிண்டல் அடிக்கப்படுகிறது. போக்குவரத்துப் பொது வாகனங்களில் இடிமன்னர்களின் துன்புறுத்தல்களுக்கும் ஆளாக நேரிடுகிறது.

ஈ. மாதவிலக்குத் தொல்லைகள், போதிய கழிப்பிட வசதியின்மை போன்றவையும் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது.

உ. உள்ளாட்சி நிர்வாகங்களில் பெயர் அளவிற்குப் பெண்கள் பொறுப்புக்களில் இருக்கிறார்கள். நடைமுறை செயற்பாடுகள் அனைத்தையும் இப்பெண்களின் குடும்ப ஆண்களே செய்கின்றனர். தனித்துச் செயற்பட முடியாத அளவிற்கு கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர்.

எ. அரசுப் பணியைத் தவிர பிற இடங்களில் இருபாலரும் ஒரே மாதிரியான வேலையைச் செய்த போதிலும் சமமான ஊதியம் வழங்கப்படுவதில்லை.

ஏ. பெண்களுக்கென்று தனியாக உணவருந்தும் இடங்கள், கழிப்பறைகள், ஓய்வறைகள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை முறையாகப் பல நிறுவனங்கள் செய்து தருவதில்லை.

## 7.3. ஒப்பந்தத் தொழில்முறை

❀ அசோசெம் என்ற அமைப்பு பிப்ரவரி 2014ல் ஒரு செய்திக் குறிப்பை வெளியிட்டு இருக்கிறது. அதன்படி நமது நாட்டில் 2008-09க்கும், 2012-13க்கும் இடையில் ஒப்பந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 39 சதவீதம் அதிகரிக்கிறது. ஒப்பந்த தொழிலாளர்களைப் பயன்படுத்துவது, நிரந்தரமான வேலையைக் கொண்ட எல்லாத் துறைகளிலும் அதிகரித்திருக்கிறது. இதில் வாகன உற்பத்தி, கட்டுமானம், தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பத்துறை, விரைவாக நகரும் நுகர் பொருள்கள், சுகாதார சேவைகள், கல்வி போன்றவை அடங்கும். மேற்கூறப்பட்ட துறைகளில் வேலையானது நிரந்தரமான தன்மை கொண்டவை ஆகும். எனவே அங்கு தொழிலாளர்களை நிரந்தர அடிப்படையில் வேலைக்கு வைக்கப்பட வேண்டும்.

❀ அசோசெம்-னுடைய செய்திக் குறிப்பு, தொழிற்சாலைகளிலும் சேவைத் துறைகளிலும் ஒப்பந்தத் தொழில்முறை நிலவுகிறது என்றும் மருத்துவர்கள், அறிவியல் அறிஞர்கள், விஞ்ஞானிகள், மேலாளர்கள், கணக்கர்கள் போன்றவர்களும் ஒப்பந்த முறையில் வேலைக்கு வைக்கப்படுகிறார்கள் என்றும் கூறுகிறது. பல பன்னாட்டு நிறுவனங்களில், உழைப்பாளர்களில் 50 சதவீதத்திற்க்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு துறைகளிலும் ஒப்பந்த முறையில் வேலைக்கு வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை பல்வேறு ஒப்பந்தக்கார முகவர்கள் மூலம் வேலைக்கு எடுக்கிறார்கள்.



Scanned with CamScanner

❀ நமது நாட்டுத் தொழிலாளர்களில் இளைஞர்கள் தான் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். இவர்களது இளமையான உழைக்கும் சக்தி மீது, உலக முதலாளிகள் கண் வைத்திருக்கின்றனர். அவர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற தன்னுடைய பேராசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்த இளமையான உழைக்கும் மக்களின் சக்தியை மிகக் குறைந்த ஊதியத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென முதலாளி வர்க்கம் விரும்புகிறது. எனவே முதலாளி வர்க்கம் எல்லா வகையான சமூகப் பாதுகாப்பையும், உரிமைகளையும் தொழிலாளர்களுக்கு தராமல் மறுக்க விரும்புகிறது.

❀ ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஒப்பந்தத் தொழில் முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பல பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடைப்பெற்றன. அந்த நேரத்தில் மத்திய அரசு ஒப்பந்தத் தொழில் முறைப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் சட்டத்தைக் கொண்டுவர முடிவு செய்தது. அச்சட்டம் 5.9.1970ம் தேதி சட்டமாகியது.

❀ ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தின் பெயரே குறிப்பிடுவதுபோல இதன் முக்கிய நோக்கமானது ஒப்பந்தத் தொழில் முறையை முடிவுக்குக் கொண்டு வருவதாகும். ஆனால் அது ஒப்பந்தத் தொழிலாளர்களை பயன்படுத்துவதை அனுமதிப்பதற்கும், சுரண்டலை அதிகரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

❀ தொழிலாளர்களின் கோரிக்கையானது ஒப்பந்தத் தொழில் முறை இருக்கக்கூடாது என்பதாகும். இச்சட்டமானது 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்தும். 20க்கும் குறைவான தொழிலாளர்களை வேலைக்கு வைத்துள்ள நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் உரிமைகளை இச்சட்டம் மறுக்கிறது. மேலும் வேலை நிரந்தரமானதாக இல்லாமல் இருக்கும் சூழ்நிலையில் ஒப்பந்த வேலையை இது சட்ட ரீதியானதாக ஆக்குகிறது. இதன் மூலம் முதலாளி, தொழிலாளர்களைச் சுரண்டுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது.

❀ ஒரு நிறுவனத்தின் முதலாளி ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தை மீறினால் அவருக்கு அதிகபட்சமாக 3 மாத சிறைத் தண்டனையும், ரூ 500 அபராதமும் மட்டுமே விதிக்கப்படும். இது தொழிலாளர்களுடைய சமூக பாதுகாப்பையும் பிற உரிமைகளையும் உறுதி செய்ய வேண்டுமென ஒப்பந்தத்தாரரைக் கட்டாயப்படுத்துவது இல்லை.

❀ எல்லா வகையான வேலைகளிலும் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவது என்பது ஒரு எழுதாத சட்டமாக ஆகியிருக்கிறது. ஆனால் வழக்கமாக நடைபெறும் வேலைக்கும் பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெறும் வேலைக்கும் தொழிலாளர்கள் நிரந்தர அடிப்படையில் வேலைக்கு எடுக்கப்பட வேண்டும். சட்டப்படி அவர்களுக்கு உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும்.

❀ கடந்த சில ஆண்டுகளாக அரசாங்க வேலைக்கு ஒப்பந்தத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக அரசாங்க அலுவலகங்களில் எழுத்தர் பணியாளர்கள் பல ஆண்டுகளுக்கு ஒரே ஊதியத்திலும், எவ்வித சமூக பாதுகாப்பும், ஆண்டு விடுமுறை, சங்கம்

அமைக்கும் உரிமை போன்ற தொழிலாளர்களுக்கான எவ்வித உரிமைகளும் இன்றி வேலை செய்யுமாறு ஒப்பந்த முறையின் கீழ் வேலைக்கு வைக்கப்படுகின்றனர்.

❀ ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பும் மறுக்கப்படுகிறது. ஒரு விபத்து நிகழுமானால் இறந்த தொழிலாளியின் குடும்பத்தினருக்கு எவ்வித இழப்பீடும் கிடைப்பதில்லை. ஏனெனில் அந்தத் தொழிலாளி எந்த முதலாளிக்கு வேலை செய்தானென அந்தத் தொழிலாளியின் குடும்பத்தினருக்கு நிருபிப்பது மிகவும் கடினமாகும். ஒப்பந்தத்தாரர்களால் வேலைக்கு வைக்கப்படும் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டையோ, சம்பளத்திற்கான சீட்டோ பெரும்பாலும் கொடுக்கப்படுவது இல்லை.

❀ ஒப்பந்தத் தொழில் முறையானது ஒப்பந்த முறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பாதகமாக இருப்பது மட்டுமின்றி அது ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் பாதகமானதாக இருக்கிறது. முதலாளிகளால் பயன்படுத்தப்படும் ஒப்பந்தக்காரர்கள், திறமை தேவைப்படும் நுணக்கமான வேலைகளில் கூட பயிற்றுவிக்கப்படாத தொழிலாளர்களை அவர்கள் நியமிக்கிறார்கள். இதன் மூலம் தொழிலாளர்களைப் பயிற்றுவிக்கும் செலவை அவர்கள் தவிர்க்கிறார்கள். இரயில், சாலை மற்றும் விமானப் போக்குவரத்து, வாகனங்களை முறைப்படுத்துதல் போன்ற முக்கியமான பணிகளில் பயிற்றுவிக்கப்படாத தொழிலாளர்களை ஒப்பந்தக்காரர்கள் பயன்படுத்துவது பொது மக்களுக்கு மிகவும் அபாயகரமானது ஆகும்.

❀ கடந்த பல்லாண்டுகளாக எல்லா பெரிய தொழிற்சாலைகளிலும் சுரங்கங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசாங்கத் துறைகள், மருத்துவமனைகள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், விமான நிலையங்கள் என நாடு எங்கிலும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இப்படி எல்லா இடங்களிலும் ஒப்பந்த முறையில் வேலைக்கு வைக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் தங்களுடைய வேலையை முறைப்படுத்த வேண்டுமென தொடர்ந்து போராடி வருகின்றனர்.

❀ ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு தங்களுடைய வாழ்க்கையை சீரழிக்கும் ஒப்பந்தத் தொழில்முறை ஒரு சாபக்கேடாகும். ஒப்பந்தத் தொழிலாளர்கள் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளது. ஓவர் டயம் ஊதியம் பெறுவதற்கு மாறாக அவர்கள் வேலை செய்த நேரத்திற்கான முழு ஊதியம் கூட அவர்களுக்குக் கிடைப்பது இல்லை. அவர்களுடைய ஊதியம் நிரந்தரத் தொழிலாளியின் ஊதியத்தைக் காட்டிலும் மிகக் குறைவாக உள்ளது. ஆண்டுதோறும் கொடுக்கப்படும் ஊதிய உயர்வு கூட இவர்களுக்குக் கிடைப்பது இல்லை.

❀ பல பன்னாட்டு நிறுவனங்களிலும் ஒரே வேலையை ஒப்பந்தத் தொழிலாளி, பயிற்சித் தொழிலாளி மற்றும் நிரந்தரத் தொழிலாளி என பல்வேறு வகைத் தொழிலாளர்களைக் கொண்டு செய்கிறார்கள். இப்படிப்பட்ட பெரும்பாலான இடங்களில் வேலை செய்பவர்களில் 70 சதவீதம் பேர் ஒப்பந்தத் தொழிலாளர்களாகவும், மீதமுள்ள 30 சதவீதம்



Scanned with CamScanner

பேர் பயிற்சி மற்றும் நிரந்தரத் தொழிலாளர்களாகவும் இருக்கின்றனர். இஎஸ்ஐ மற்றும் பிஎப் பிடித்தங்கள் போக ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியமாக 6500யிலிருந்து 8000 ரூபயாக மட்டுமே கிடைக்கிறது. டெல்லியில் உள்ள அரசாங்கப் பள்ளிகளில் உள்ள ஒப்பந்த ஆசிரியர்களுக்கு நாள் கூலியாக ரூபாய் 750 மட்டுமே கிடைக்கிறது. விடுமுறை நாள்களுக்கு ஊதியம் இல்லை.

❀ வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற வகையில் எல்லா வயது வந்த குடிமக்களுக்கும் பாதுகாப்பான உத்திரவாதமான வேலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் அரசு ஒப்பந்தத் தொழில் முறையை தொழிலாளர்கள் மீது சுமத்தி, குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்யுமாறு தொழிலாளர்களை நிர்பந்தப்படுத்தி வருகிறது. அசோசெம்-னுடைய அறிக்கை இந்த உண்மைக்கு சான்றாக இருக்கிறது.

**இதற்கான தீர்வு என்ன :**

❀ ஒவ்வொருவருக்கும் ஒரு பொருத்தமான உத்திரவாதமான வேலையை உறுதி செய்யக்கூடிய ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டும். கோடிக்கணக்கான தொழிலாளர்களுடைய வேலை, பதிவு செய்யப்படாத காரணத்தால் அவர்களுக்கு சட்டபூர்வமான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எனவே எல்லாத் தொழிலாளர்களும் பதிவு செய்யப்படவேண்டும். ஊதியம் பெறும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம், ஓய்வூதியம் மற்றும் எல்லாப் பயன்களும் எவ்வித விதி விலக்குமின்றி உரிமையாக கிடைக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் கட்டாயமாகக் கிடைப்பதை சட்டம் உறுதி செய்யவேண்டும்.

❀ சுரண்டல் இல்லாமல் முதலாளித்துவ அமைப்பு இயங்க முடியாது. இந்த அமைப்பில் தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் ஒரு நேரடி மோதல் இருக்கிறது. சுரண்டலைத் தொடர்ந்து தீவிரப்படுத்துவதன் மூலம் தன்னுடைய இலாபத்தை அதிகரிக்க முதலாளி வர்க்கம் முயற்சிக்கிறது.

❀ சுரண்டலுக்கு முடிவு கட்டும் நோக்கத்தோடு தொழிலாளி வர்க்கம் ஒரு போராட்டத்தை நடத்த வேண்டும். வர்க்கப் போராட்ட கண்ணோட்டத்தோடு தொழிலாளர் வர்க்கம் தன்னுடைய அமைப்பை வலுப்படுத்த வேண்டும். தொழிலாளி வர்க்க போராட்டத்தின் நோக்கமானது முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி எறிந்துவிட்டு தன்னுடைய சொந்த ஆட்சியை நிறுவுவதாக இருக்க வேண்டும்.

❀ தொழிற்சாலைகள், சுரங்கங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், சேவைத்துறை போன்ற துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நாம் அனைவரும் முதலாளித்துவ இலாபத்தை உருவாக்கும் பொருளாதாரப் போக்கை மாற்றுவதற்காக நம்முடைய போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். எல்லா வகையாக சுரண்டலுக்கும் முடிவு கட்டிவிட்டு மனிதன் மனிதன் சுரண்டுவது என்பதை முடியாததாக ஆக்கும் ஒரு சமுதாயத்திற்கு பிறப்பளிக்கும் ஒரு பொருளாதாரத்தைத் தொழிலாளி வர்க்கம் மட்டுமே தலைமை தாங்கி நடத்திச் செல்ல முடியும்.

## 7.4 அகதிகள்

ஒரு குறிப்பிட்ட நாட்டில் வாழ்பவர்கள் போர்கள், இனக்கலவரம், அரசியல் சூழல்கள் பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவற்றால் சிக்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டு பிற நாடுகளுக்குச் செல்பவர்கள் அகதிகள் ஆவார்கள்.

தம்முடைய வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக தஞ்சம் அடைகின்றனர். அவர்கள் வீடும், நாடுமற்ற அனாதைகள் அவர்களுக்கெனத் தனிப்பட்ட பன்னாட்டுச் சட்டங்கள் இல்லை. அகதிகள் பன்னாட்டு உடன்படிக்கைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். கடந்த நூற்றாண்டிலிருந்து அகதிகளின் எண்ணிக்கையானது போர்கள், இனப்படுகொலை போன்ற காரணங்களால் படிப்படியாக அதிகரித்துள்ளது. அகதிகள் சொந்த நாட்டில் உரிமையற்றவர்கள். புதிய நாட்டிலும் அவர்களுக்கு குடியுரிமை கிடையாது. அயல்நாட்டில் ஆதரவற்ற அனாதைகளாய் கல்வி, உணவு, இருப்பிடம், சுகாதாரம் போன்ற வசதிகளற்றவர்களாய் வாழ்கின்றனர்.

**அகதிகளுக்கான பிரச்சனைகள் :**

❀ தங்கள் சொந்த நாட்டில் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனையைச் சமாளிக்க முடியாமல் பிழைக்க ஏதாவது வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்பி ஓர் புதிய நாட்டிற்கு அனுமதி இல்லாமல் செல்பவர்களே அகதிகள் என்று அழைக்கப்பட்டனர். அரசியல், போர் உள்ளிட்ட காரணங்களால் தம்முடைய நாட்டிலிருந்து வெளியேறி பிற நாட்டிலோ அல்லது அதே நாட்டில் பிற இடங்களுக்கோ அடைக்கலம் புகுந்தவர், இடம் பெயந்தவர், ஆதரவற்றோர், நாடு இழந்தவர், புலம் பெயர்ந்தவர், தஞ்சம் புகுந்தவர் அகதிகள் ஆவர்.

❀ 2000ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் சிறப்புத் தீர்மானமொன்றின்படி, அகதிகளுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தும் முகமாக உலக அகதிகள் தினமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆப்பிரிக்க அகதிகள் நாள் ஜீன்20ல் கொண்டாடப்படுவதால் இந்நாள் உலக அகதிகள் நாளாகப் அறிவிக்கப்பட்டது. பல்வேறு மோதல்களுக்குள் சிக்கி அகதிகளாக தாம் வசிக்கும் நாட்டினுள், பிற நாடுகளிலென இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகி வாழ்ந்து வரும் அகதிகள் பற்றிய விழிப்புணர்வினை உலக மக்களிடத்தில் ஏற்படுத்துவதே இந்நாளின் முக்கியமான நோக்கமாகும்.

❀ அன்றைய நாள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் பல்வேறு போர்களால் அரசியல், சமூகச் சூழல்களால் அதிகமாக அல்லலுறும் அகதிகளை நினைவு கூறும் வகையில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகள், இசை நிகழ்ச்சிகள், நினைவஞ்சலி நிகழ்வுகள் எனப் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் ஒவ்வோர் ஆண்டும் இந்நிகழ்வுகளுக்கான கருப்பொருளைத் தீர்மானிக்கிறது.



Scanned with CamScanner

## ஐக்கிய நாட்டு அவையும் அகதிகள் உரிமையும் :

❀ உலக மக்களின் உரிமைகளை பன்னாட்டு அளவில் அது விரிவுபடுத்தியது. ஐக்கிய நாட்டு அவையின் சாசனமே அகதிகள் பற்றிய செய்திகளைக் கொண்டுள்ளது. 1948ல் வெளியிடப்பட்ட பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனம் மூலம் மனிதர்கள் சுதந்திரமான வாழ்க்கை வாழ, பாதுகாப்புடன் வாழ அவர்களுக்கு உரிமையுண்டு என்பது சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. அப்பிரகடனத்தின் 14ம் பிரிவு பலதரப்பட்ட கொடுமைகள், சித்திரவதை போன்ற இடர்ப்பாடுகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்பதைக் குறிப்பிடுகின்றது. மனித உரிமைச் சட்டங்கள் காரணமாகவும் மனிதத்தன்மை, மனிதாபிமானம் போன்ற தேவையான வசதிகளைச செய்து தரவேண்டியது அந்நாட்டு அரசின் கடமையாகும். உள்நாட்டு மக்கள், அந்நிய நாட்டு அகதிகள் தம்முடைய வசதிகளுக்குப் பல வழிகளில் இடையூறாக இருப்பதாகக் கருதுகின்றனர். வளர்ச்சியுற்ற நாடுகளிலிருந்து வளர்ந்து வரும் நாடுகளுக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் அந்நாடுகளின் வளர்ச்சியும் முன்னேற்றமும் பாதிக்கப்படுமாகையால் அந்நாடுகள் அகதிகளை வெறுக்கின்றன. எனவே நாடுகளின் கடமைகள் என அகதிகளின் உரிமைகளைச் சுட்டிக் காட்டியுள்ளது.

❀ பன்னாட்டு அளவிலான அகதிகள் சிக்கல்களைக் களையவேண்டும் என்பதற்காக 1951ல் ஐக்கிய நாட்டவையிள் அகதிகள் உயர்ஆணையம் உருவாக்கப்பட்டது. 1951ம் ஆண்டிலேயே அவ்வாணையம் அகதிகளைக் காக்க ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. தொடர்ந்து அகதிகள் பாதுகாப்புக்காக மற்றொரு ஒப்பந்தம் 1967ல் செய்து கொள்ளப்பட்டது. பன்னாட்டு அளவில் அகதிகள் உரிமைகள் பற்றிய உடன்படிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. அகதிகளின் நிலையை உயர்த்துமாறு அந்தந்த நாடுகளின் தன்மைகளைச் சாதகமாக ஆக்குகின்றது. தனது நாட்டில் உள்ள அகதிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக அந்த நாடு தக்க முயற்சிகளை எடுக்கிறது. தனிப்பட்ட, முறை சாராத, அரசு சாராத அமைப்புகளின் துணையுடன் அகதிகளின் பிரச்சனைகளுக்கு முடிவுகாண வகை செய்கின்றது. அகதிகள் தாயகம் திரும்பவும், உள்நாட்டில் உள்ள சமுதாயத்துடன் ஒத்துப் போகவும் வகை செய்து அகதிகள் புனர் வாழ்வுக்கான வழிகளை மேற்கொள்ளுகின்றது. அகதிகளின் எண்ணிக்கை அளவு அவர்களது நிலை ஆகியன பற்றிய பல செய்திகளைப் பெற்று அதற்கான வழிகளை மேற்கொள்ளுகின்றது. பல நாடுகளின் அரசுகளுடன் தொடர்பு கொண்டு அகதிகளுக்கு பல உதவிகளைத் தருகின்றது. 1995ம் ஆண்டில் உலகளவில் 20 மில்லியன் அகதிகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டு உள்ளது. ஐக்கிய நாட்டவையின் பொதுச்சபையின் பணிகளால் அகதிகளின் நலன்கள் பேணப்படுகின்றன. சில நாடுகளில் அகதிகள் காவலில் தொல்லைகளுக்கு ஆளாகும்போது அகதிகளின் உரிமைகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. உயர் ஆணையத்தின் விதிகளுக்கு மாறாக யாரையும் கைது செய்யலாகாது. அகதிகளைத் தாய்நாட்டிற்கு அனுப்புவதிலும் இது பல உதவிகளைச் செய்கின்றது.



Scanned with CamScanner

ஜீ அகதிகளும் அரசியல் கலப்பற்ற அமைப்புகளை உருவாக்கலாம். அதேநேரம் புகலிடம் பெற்றுள்ள நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுச் செயல்படவேண்டும். அகதிகளுக்குத் தேவையான கல்வியைத் தருவதும் அந்தந்த நாடுகளின் கடமையாகும்.

**இந்தியாவும் அகதிகளும் :**

பஞ்சசீலக் கோட்பாட்டினைத் தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையாகக் கொண்ட இந்தியத் துணைக் கண்டம் பல அகதிகளின் பிரச்சனைகளைக் கண்டுள்ளது. இலங்கை, மியான்மர், ஆப்கானிஸ்தானம், வங்காளதேசம், ஈரான், ஈராக் போன்ற நாடுகளிலிருந்து சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் அகதிகளாக வந்துள்ளனர். இந்தியா அவர்களை மனிதாபிமானத்துடன் நடத்துகின்றது.

**அகதிகளின் பொதுநிலை :**

ஐக்கிய நாட்டு அவையின் அகதிகள் உயர் ஆணையத்தின் குறிப்பின்படி இன்று உலகம் முழுவதிலும் சுமார் 2 கோடி அகதிகள் உள்ளார்கள். பல நாடுகளிலும் உள்ள சமூக, அரசியல் சிக்கல்கள் காரணமாக அகதிகளின் எண்ணிக்கை பெருகி உள்ளது. ஆப்பிரிக்காவின் சோமாலியாவிலிருந்து 4 இலட்சம் அகதிகள் எதியோப்பியாவுக்குச் சென்றனர். செர்பியாவுக்கும் குரோஷியர்களுக்கும் இடையிலான போர் காரணமாக 40 இலட்சம் அகதிகள் உருவாயினர். சுமார் 2,70,000 மியான்மர் முஸ்லீம்கள் வங்காள தேசத்தில் புகலிடம் பெற்றுள்ளனர். இவ்வாறு பலநிலைகளிலும் அகதிகளின் எண்ணிக்கை பெருகி வருவதால் ஏற்படும் சிக்கல்கள் மனிதாபிமானத்திற்கு பெரிதும் சவாலாக உள்ளன. நாடுகளின் பொறுப்புகளும் கடமைகளும் அதிகரித்துள்ளன.

**அகதிகள் அறிக்கையை தயாரித்தல் :**

1951ம் ஆண்டின் அகதிகளின் நிலை தொடர்பான ஐக்கிய நாடுகள் உடன்பாடு அகதிகள் பற்றி திட்ட அறிக்கையை தயார் செய்தது.

அகதி என்ற கருத்துரு, உடன்பாட்டின் இணைப்புக்கள் மூலமும் ஆப்பிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் நடைப்பெற்ற பிரதேச மாநாடுகளிலும் விரிவாக்கம் பெற்றது. இதனால் சொந்த நாட்டில் நடைபெறும் போர் அல்லது வேறு வன்முறைகள் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறுபவர்களும் அகதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. தன்னை அகதியாக ஏற்றுக்கொள்ளும்படி விண்ணப்பிக்கும் ஒருவர் அகதிக்கான தகுதியை கோருபவர் எனப்படுகின்றார்.

இரண்டாவது உலகப் போரைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பாவில் இருந்து ஏராளமானவர்கள் வெளியேறியதைத் தொடர்ந்து அகதிகள் ஒரு சட்டபூர்வமான குழுவாக வரையறுக்கப்பட்டனர். வளைகுடா பகுதியில் ஏற்பட்ட தீவிரவாத தாக்குதல்களால் 2015ம் ஆண்டுகளில் பல அகதிகள் மரணம் அடைந்தார்கள். அகதிகள் பாதுகாப்புத் தொடர்பான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்வது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம் ஆகும். இந்நிறுவனம் 2006ல் உலகில் உள்ள மொத்த அகதிகள் தொகையை 8.4 மில்லியன் எனக் கணக்கிட்டு உள்ளது. ஐக்கிய அமெரிக்க அகதிகள் மற்றும் குடிவருவோருக்கான



Scanned with CamScanner

குழு உலகின் மொத்த அகதிகள் தொகை 12,019,700 என்கிறது. அத்துடன் உள்நாட்டிலேயே அகதியானோர் உட்பட போரினால் இடம்பெயர்ந்த மொத்த அகதிகள் 34,000,000 எனவும் இக்குழு மதிப்பிட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம் வரையறுத்துள்ளபடி அகதிகள் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுகள், அகதிகள் தாமாகவே சொந்த நாட்டுக்குத் திரும்புதல், குடியேறிய நாட்டிலேயே கலந்து விடுதல், மூன்றாம் நாடு ஒன்றில் குடியேற்றுதல் என்பனவாகும். 2014ம் ஆண்டு நிலையின்படி மிக அதிகமான அகதிகள், பாலஸ்தீனப் பகுதிகள், ஆப்கானிஸ்தான், ஈராக், மியன்மார், சூடான், சிரியா, திபெத் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆகும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை அதிகமாகக் கொண்ட நாடு சூடான் மற்றும் இந்தியா, இலங்கை ஆகும்.

**இலங்கைத் தமிழர்கள் முகாம் :**

இலங்கையில் இனப்பிரச்சினை காரணமாக இலங்கைத் தமிழர்களுக்கும், இலங்கை ராணுவத்திற்கும் இடையே நிகழ்ந்த ஈழப்போரால் இலங்கை ராணுவம் நடத்திய கொடூரத் தாக்குதல்களால் இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். இந்தியாவில் தஞ்சமடைந்தபோது அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்திய அரசால் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களில் இலங்கைத் தமிழர்களுக்காக சிறப்பு முகாம் ஏற்படுத்தப்பட்டது.

**மறுவாழ்வு உதவிகள் :**

தமிழ்நாட்டில் 115 முகாம்களில் 73,241 இலங்கை தமிழர்களும்(19,340 குடும்பத்தினர்) மற்றும் வெளி இடங்களில் 31,802 இலங்கை தமிழர்களும்(11,288 குடும்பத்தினர்) உள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள இலங்கை தமிழர்களுக்கு குடியிருப்பு, குடிநீர், மின்சாரம், உணவுப்பொருள்கள், மாதந்திர பணக்கொடை, திருமண உதவித் திட்டம் மற்றும் கல்வி ஆகியன வழங்கப்பட்டது.

**தற்போதைய நிலை :**

முதியவர்கள் தென்னை கீற்று முடைதல் போன்ற சுயதொழில் மற்றும் கட்டுமானப்பணிகளிலும், இளைஞர்கள் நூற்பாலை மற்றும் விசைத்தறி ஆலைகளிலும் பணிசெய்து வருமானம் ஈட்டுகின்றனர். சுமார் 25 ஆண்டுகள் கடந்த முகாம்களில் உள்ள குடியிருப்புகள் சிதைந்து பாழடைந்த நிலையில் உள்ளது. இலங்கை தமிழர்கள் குடியிருப்புகளை சீரமைத்து இந்திய குடியுரிமை கோருகின்றனர்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகவும் தமிழக முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்குக் குடியுரிமை கிடைக்காததால், அரசுப்பணி வாய்ப்பு உள்பட எந்த உதவியும் கிடைக்கவில்லை. எனவே தமிழக முகாமைவிட்டு செல்வதாக அகதிகள் தெரிவித்து உள்ளனர்.

**புகலிட உரிமை :**

ஒரு நாட்டில் ஒருவருக்கு தன் வாழ்வில் துன்புறுத்தலும் அச்சுறுத்தலும் படும்போது அவர் இன்னொரு நாட்டுக்குச் சென்று வாழ்வதற்கான உரிமை கோருவதே புகலிட உரிமை ஆகும். இது



Scanned with CamScanner

உலக மனித உரிமைகள் சாற்றுரையிலும், அகதிகளின் நிலை தொடர்பான ஐக்கியநாடுகள் உடன்படிக்கையிலும், ஜெனீவா உடன்படிக்கையிலும் பல்வேறு நாடுகளின் சட்டங்களிலும் நிலைநாட்டப்படும் ஓர் அடிப்படை மனித உரிமை ஆகும். இந்த உரிமை கடந்த 10 ஆண்டுகளாக ஐரோப்பா, வடஅமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய இடங்களில் மதிக்கப்பட்டு வந்தாலும், அண்மைக்காலமாக புகலிடம் கோரும் அகதிகள் எண்ணிக்கையைக் குறைக்கும் வண்ணம் சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன.

## 7.5 இந்திராகாந்தி நினைவு அறக்கட்டளை

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் நினைவாக அமைதி, ஆயுத ஒழிப்பு மற்றும் மேம்பாட்டுக்கு சிறந்த பங்களிப்பை வழங்குபவர்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு அமைதி விருது வழங்கப்படுகிறது. இது மிகவும் கவுரவமான விருதாக கருதப்படுகிறது. 'இந்திரா காந்தி அமைதி விருது - 2015'க்கு அகதிகள் நலனுக்கான ஐ.நா. ஆணையத்தை பரிசுக் குழுவினர் தேர்ந்தெடுத்து உள்ளனர்.

1950ம் ஆண்டு அகதிகளுக்கான ஆணையத்தை ஐ.நா. உருவாக்கியது. இரண்டாம் உலகப்போரின்போது தாய் நாட்டை விட்டு இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உதவும் நோக்கத்தில்தான் இந்த ஆணையம் தொடங்கப்பட்டது. அதன்பின் உலகளவில் இடம்பெயரும் அகதிகளின் நல்வாழ்வுக்காக ஐ.நா. ஆணையம் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

தாய்நாட்டைவிட்டு வெளியேறிய லட்சக்கணக்கான அகதிகளுக்கு உதவியது. அவர்களின் மறுவாழ்வுக்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தது போன்ற சிறந்த பங்களிப்புக்காக இந்திரா காந்தி அமைதி விருது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்திராகாந்தி அமைதி விருதிற்காக ரூ.25 லட்சம் ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## 7.6 தீர்ப்புகள்

நீதிமன்றங்களில் ஒரு வழக்கானது இரு மருங்கிலும் விவாதிக்கப்பட்டு அதற்கான தீர்ப்பை அலசி ஆராய்ந்து நீதிபதி எடுத்துரைப்பார். அத்தகைய தீர்ப்பினை இனி காண்போம்.

**கடவுளுக்கு காணிக்கையாக விலங்குகளை பலியிடுதலுக்கு தடை:**

ஜஸ்ராஜ்ஸ்ரீ ஸ்ரீமால் எதிர் ஆந்திர மாநில அரசு **(AIR 2002 NOC 163)** என்ற வழக்கில் **'விலங்குகள் மற்றும் பறவைகள் பலியிடுதல் தடைச்சட்டத்தை'** முழுமையாக அமுல்படுத்த, ஆந்திர மாநில அரசுக்கு உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீ லிங்கமந்துலா சுவாமி திருக்கோயில் விழாவின்போது கடவுளின் ஆசிர்வாதத்தைப் பெற ஆயிரக்கணக்கான விலங்குகள் பலியிடப்படுகின்றன என்றும், இச்செயல் சட்டத்திற்கு எதிரானது என்றும் கூறப்பட்டது. மனு விசாரணையின்போது



Scanned with CamScanner

அந்த மாவட்டத்தைச் சேர்ந்த காவல்துறை கண்காணிப்பாளர் திருவிழா அமைதியாக நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டள்ளதாக தெரிவித்தார். விலங்குகள் பலியிடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் விலங்குகளை பலியிடுதலை தடை செய்யவும், குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் பதில் அளித்தார். இதை ஏற்றுக் கொண்ட ஆந்திர மாநில உயர்நீதிமன்றம் எதிர்காலத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகள் தொடரவேண்டும் என்று அரசுக்கு உத்தரவிட்டது.

**குழந்தைத் திருமணத்தடைச்சட்டம் அனைவருக்கும் பொருந்தும்:**

முசாபர் அலி 'எதிர்' ஆந்திர மாநில அரசு **(2002 CriLj 1068)** என்ற வழக்கில் 1929ம் ஆண்டின் குழந்தைத் திருமணத் தடைச்சட்டம், இஸ்லாமியர்கள் உள்பட இந்தியர்கள் அனைவருக்கும் பொருந்தும் என்று ஆந்திர மாநில உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் 18 வயது நிறைவடையாத பெண்ணுக்கு திருமணம் செய்து வைத்ததாக, அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்மீது வழக்கு பதிவு செய்து விசாரிக்கப்பட்டனர். குழந்தைத் திருமணத் தடைச்சட்டத்தின் கீழ் குழந்தைகளைத் தாக்கி திருமணம் செய்து வைத்தல் குற்றம். இவ்வாறு வழக்கு தொடுக்கப்பட்டவர்க்கு எதிராக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்தை அணுகினார்கள். அதில் இஸ்லாமியர்களுக்கு இச்சட்டம் பொருந்தாது என்றும் 1937ம் ஆண்டின் ஷரியத் சட்டமும், இஸ்லாமிய தனிநபர் சட்டங்களும் மட்டுமே தங்களைக் கட்டுப்படுத்தும் என்றும், அதன் அடிப்படையில் ஒரு இஸ்லாமியப் பெண் பருவம் எய்திவிட்டாலே திருமணத்திற்கு தகுதி உடையவர் ஆகின்றார் என்றும் வாதிட்டனர். இதற்கு ஆதரவாக ஷரியத் சட்டத்தின் செயல்பாட்டுத் தன்மை குறித்து உச்சநீதிமன்றம் வழங்கிய பல்வேறு தீர்ப்புகளை மேற்கோள் காட்டினார். இவ்வாதத்தை ஏற்க மறுத்து மனுவினைத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் சட்டப்பிரிவு-12ல் இச்சட்டம் இந்திய குடிமக்கள் அனைவருக்கும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளதாகவும், இதில் இஸ்லாமியர்களும் உள்ளடக்கம் என்று கூறியது. ஒரு இஸ்லாமியப் பெண் இளவராக இருக்கும்போது செய்துகொண்ட திருமணம் இல்லா நிலையாகாது. அதே நேரத்தில் அத்திருமணத்தில் பங்கு பெற்றவர்கள் இச்சட்டப் பிரிவுகள் 4, 5 மற்றும் 6ன் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கையில் இருந்து விலக்கு பெற முடியாது என்றும் விளக்கமளித்தது.

**காவல்துறை அதிகாரிகள்மீது குற்ற வழக்கு தொடர அனுமதி:**

அருண்குமார் 'எதிர்' மதன் பட்நாயக் **(2002 Cri LJ-NOC47)** என்ற வழக்கில் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 197ன்படி காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக குற்ற வழக்கு தொடர அரசின் முன் அனுமதி தேவை என்று ஒரிசா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இவ்வழக்கில் பணியில் ஈடுபட்டு இருந்த காவல்துறை அதிகாரி தன்னிச்சையாக செயல்பட்டு தாக்கினார் என்று குற்றம் சாட்டப்பட்டது. தாக்குதலுக்கு உள்ளானவரின் தனிநபர் புகாரினை, குற்றவியல் நடுவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். இதை எதிர்த்து செய்யப்பட்ட மேல்முறையீட்டை



Scanned with CamScanner

விசாரித்த உயர்நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்டிருக்கும் காவலருக்கு எதிரான குற்றம், அவர் தன் சட்டப்படியான கடமையை செய்ய பணியில் இருந்தபோது செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளதால் காவல் அதிகாரிக்கு எதிராக வழக்கு தொடுக்க அரசின் முன் அனுமதி தேவை என்று கூறி குற்றவியல் நடுவரின் நடவடிக்கையை செல்லாததாக்கி உத்தரவிட்டது.

## 7.7 தேசிய மனித உரிமை ஆணையம் (சட்டப்பிரிவு-3)

ஒரு தன்னாட்சி பெற்ற இந்திய அரசாங்கத்தின் ஆணையமாகும். 12.10.1993ல் மனிதஉரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993ன் கீழ் இவ்வாணையம் நிலைநாட்டப்பெற்றது. பாரிசில் நடைப்பெற்ற ஐக்கிய நாடுகள் அவை சார்பில் மனித உரிமை பாதுகாப்பு ஆணைய கூட்டத்தில் எடுக்கப்பெற்ற தீர்மானத்தின் அடிப்படையில் இவ்வாணையம் இந்தியாவில் உருவாக்கப்பட்டது.

**தேசிய மனித உரிமைகள் ஆணையம் அமைத்தல்(பிரிவு-3) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-3ன்படி தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை அமைத்தல் பற்றி கூறுகிறது. அவை,

1. ஆணையத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்தவும், மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றவும் மத்திய அரசானது தேசிய மனித உரிமைகள் ஆணையம் எனப் பெயர் வழங்கப்படும் குழு ஒன்றை அமைக்கவேண்டும்.

2. ஆணையமானது பின்வருவோர்களை கொண்டு இருத்தல் வேண்டும். ஒரு தலைவரையும் - அவர் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்திருக்க வேண்டும். ஒரு உறுப்பினரையும் - அவர் உச்ச நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாக இருக்க வேண்டும். ஒரு உறுப்பினரையும் - அவர் ஒரு உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதியரசராக இருக்க வேண்டும். இரண்டு உறுப்பினர்களையும் - அவர் மனித உரிமைகள் தொடர்புடைய விஷயங்களில் அறிவையோ அல்லது நடைமுறை அனுபவத்தையோ கொண்டவர்களிடமிருந்து நியமனம் செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

3. சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம், தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம், பெண்களுக்கான தேசிய ஆணையம் ஆகியவற்றின் தலைவர்கள், 12வது பிரிவின் (அ) முதல் (ஓ) வரையிலான உட்கூறுகளில் கூறப்பட்டுள்ள பணிகளை ஆற்றுதல் பொருட்டு ஆணையத்தின் உறுப்பினர்களாக கருதப்படவேண்டும்.

4. ஆணையத்தின் தலைமை நிர்வாக அலுவலராக பொதுச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் மற்றும் ஆணையமானது அவரிடம் ஒப்படைக்கலாம் எனக் கூடிய அதிகாரங்களை அவர் செயல்படுத்த வேண்டும்.

5. ஆணையத்தின் தலைமை அலுவலகம் டெல்லி ஆகும் மற்றும் ஆணையமானது மத்திய அரசின் மன் ஒப்புதலுடன் இந்தியாவின் வேறு இடங்களில் அலுவலகங்களை அமைக்கலாம்.



Scanned with CamScanner

**தலைவர் பிற உறுப்பினர்கள் நியமனம்(பிரிவு-4) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-4ன்படி தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களின் நியமனம் பற்றி கூறுகிறது. அவை,

1. தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் இந்திய குடியரசுத் தலைவரால் அவரது கையொப்பம் மற்றும் முத்திரை கொண்ட ஆணையினால் நியமனம் செய்யப்பட வேண்டும். இந்த உட்பிரிவின் கீழான ஒவ்வொரு நியமனமும் பின்வருவோர்கள் அடங்கிய ஒரு குழுவின் பரிந்துரைகளைப் பெற்ற பின்னரே செய்யப்பட வேண்டும். அவர்கள், பிரதம அமைச்சர் - தலைவர், மக்களவை தலைவர் - உறுப்பினர், இந்திய அரசாங்கத்தில் உள்துறை அமைச்சகத்திற்கு பொறுப்பேற்றுள்ள அமைச்சர் - உறுப்பினர், மக்களவையில் எதிர்க்கட்சியின் தலைவர் - உறுப்பினர், மாநிலங்களவையில் எதிர்க்கட்சியின் தலைவர் - உறுப்பினர், மாநிலங்களவையின் துணைத் தலைவர் - உறுப்பினர் ஆவர்.

**ஆணையத்தின் உறுப்பினர் ஒருவரை நீக்குதல்(பிரிவு-5) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-5ன்படி ஆணையத்தின் உறுப்பினர் ஒருவரை நீக்குதல் பற்றி கூறுகிறது. அவை,

1. சட்ட உட்பிரிவு(1)ல் எவை கூறப்பட்டு இருப்பினும் அதைப் பொருட்படுத்தாமல் குடியரசுத் தலைவர் தனது உத்திரவால் ஆணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் எவரையேனும் அந்தந்த நிகழ்விற்கு ஏற்ப பின்வருவருவனவற்றின் அடிப்படையில் பதவியிலிருந்து நீக்கலாம். அவை, (அ) அவர் நொடிப்புநிலை அடைந்தவர் எனத் தீர்மானிக்கப்பட்டுவிட்டால் (ஆ) அவர் தனது பதவியின் பணிக்காலத்தில் தனது பதவியின் கடமைகளுக்கு புறம்பாக ஊதியம் பெறக் கூடிய பணி எதிலேனும் ஈடுபட்டு இருந்தால் (இ) அவர் உள்ளம் ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ தனது பதவியைத் தொடர தகுதியற்றவராக ஆகிவிட்டால் (ஈ) பித்துப் பிடித்தவராக இருப்பராயின் அல்லது தகுதியான நீதிமன்றத்தினால் அவர் அவ்வாறு விளம்பப்பட்டிருப்பாராயின் (உ) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கி இருக்கிறதென குடியரசுத் தலைவர் கருதுகிற குற்றச்செயல் ஒன்றிற்காகக் குற்றம் என தீர்ப்பு அளிக்கப்பட்டுச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருப்பராயின் அத்தலைமையாளரை அல்லது பிற உறுப்பினர் எவரையும் அவரது பதவியில் இருந்து குடியரசுத் தலைவர் நீக்கலாம்.

2. சட்ட உட்பிரிவு(2)ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு குடியரசுத் தலைவரால், உச்ச நீதிமன்றத்திற்குச் செயல்பட்டு இருக்கும் குறிப்புரையின் அடிப்படையில் செய்த விசாரணையின் பேரில் மாநில ஆணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் எவரேனும் அந்தந்த நிகழ்விற்கு ஏற்ப அவரது மெய்ப்பிக்கப்பட்ட நெறியிழந்த நடத்தை காரணமாக பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். இதனை குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்பிய பிறகு அதன் அடிப்படையில் குடியரசுத் தலைவர் பிறப்பிக்கும் உத்திரவால் மட்டுமே மாநில ஆணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் எவரேனும் அவரது பதவியில் இருந்து நீக்கப்படுதல் வேண்டும்.



Scanned with CamScanner

**உறுப்பினர்களின் பதவிக் காலம்(பிரிவு-6) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது, சட்டப்பிரிவு-6ன்படி உறுப்பினர்களின் பதவிக்காலம் பற்றி கூறுகிறது. அவை,

1. தலைவராக நியமிக்கப்பட்ட எந்த நபரும் அவர் தனது பதவியில் அமரும் தேதியிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு அல்லது அவர் 70 வயதை அடையும் வரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

2. உறுப்பினராக நியமிக்கப்பட்ட எந்நபரும் அவர் தனது பதவியில் அமரும் தேதியிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அவர் மற்றொரு 5 அண்டு காலத்திற்கு மறு-நியமனம் பெறத் தகுதியுடையவர். இருப்பினும் எந்த உறுப்பினரும் அவர் 70 வயதை கடந்த பிறகு பதவி வகித்தல் கூடாது.

3. பதவி வகித்தல் முடிவுக்கு வருவதின் பேரில், ஒரு தலைவர் அல்லது ஒரு உறுப்பினர் இந்திய அரசாங்கத்தின் கீழோ அல்லது மாநில அரசாங்கம் ஏதேனுமொன்றின் கீழோ மேற்கொண்டு பணிபுரிய தகுதியற்றவர் ஆவார்கள்.

**உறுப்பினரே தலைவராக செயல்படுதல்(சட்டப்பிரிவு-7) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது, சட்டப்பிரிவு-7ன்படி உறுப்பினரே தலைவராக செயல்படுதல் பற்றி கூறுகிறது. அவை,

1. தலைவரின் இறப்பு, பணிதுறப்பு அல்லது மற்ற காரணங்களினால் அவரது பதவியிடம் காலியாகுமேயானால் அந்தக் காலியிடத்தை நிரப்ப ஒரு புதிய தலைவர் நியமனம் செய்யப்படும் வரை உறுப்பினர்களில் ஒருவரை தலைவராக செயல்பட குடியரசுத் தலைவர், அறிவிப்பின் மூலம் அவ்வுறுப்பினருக்கு அதிகாரம் அளிப்பார்.

2. தலைவரானவர் விடுப்பின் காரணமாக வராமல் இருப்பதினாலோ அல்லது வேறு வகையிலோ தனது பணிகளை பணியாற்ற முடியாமல் இருக்கும். அப்பொழுது, குடியரசுத் தலைவரின் அறிவிப்பின் மூலம் அடுத்த நிலையில் உள்ள உறுப்பினர்களில் ஒருவர் தலைவராக இருந்து, விடுப்பில் சென்ற தலைவரின் பணிகளை செய்யவேண்டும்.

**விதிமுறைகளும் நிபந்தனைகளும்(சட்டப்பிரிவு-8) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-8ன்படி விதிமுறை மற்றும் நிபந்தனைகள் பற்றி கூறுகிறது. உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் ஊதியங்களும் படிகளும் மற்றும் அவர்களது பணிக்கான பிற விதிமுறைகளும் நிபந்தனைகளும் குறித்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும். ஒரு உறுப்பினரின் ஊதியமும் படிகளும் மற்றும் அவரது பணிக்கான பிற விதிமுறைகளும் நிபந்தனைகளும் அவரது நியமனத்திற்கு பிறகு அவருக்கு பாதகமாக மாற்றப்படுதல் கூடாது.

**ஆணையத்தின் நடவடிக்கை(சட்டப்பிரிவு-9) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-9ன்படி ஆணையத்தின் நடவடிக்கை பற்றி கூறுகிறது. அவை ஆணையத்தின் அமைப்பில் ஏதேனும் காலியிடம் அல்லது குறை இருக்கிறது என்ற அடிப்படையில் மட்டுமே அதன் செயல் அல்லது நடவடிக்கைகள் குறித்து வினவுதல் கூடாது.



Scanned with CamScanner

**ஆணையத்தின் நடைமுறை(சட்டப்பிரிவு-10) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-10ன்படி ஆணையத்தின் நடைமுறை பற்றி கூறுகிறது. அவை,

1. தலைவர் பொருத்தமென எண்ணும் அத்தகு நேரத்திலும் இடத்திலும் ஆணையம் கூடுதல் வேண்டும் 2. தனது சுய நடைமுறையை ஆணையம் ஒழுங்குமுறைப்படுத்துதல் வேண்டும் 3. ஆணையத்தின் அனைத்து உத்தரவுகளும் முடிவுகளும் பொதுச் செயலாளரால் அல்லது இதன் பொருட்டு தலைவரால் முறைப்படி அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஒரு அலுவலரால் உண்மைக்கான உறுதிக் கையொப்பம் இடவேண்டும்.

**ஆணையத்தின் அலுவலர், பிற ஊழியர்(சட்டப்பிரிவு-11) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-11ன்படி ஆணையத்தின் அலுவலர் மற்றும் பிற ஊழியர் பற்றி கூறுகிறது. அவை,

1. மத்திய அரசானது பின்வருவோர்களை ஆணையத்திற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். அவர்கள், ஆணையத்தின் பொதுச் செயலாளராக இருத்தலுக்காக இந்திய அரசாங்கத்தின் செயலாளர் பதவித் தகுதி உடைய ஒரு அலுவலர் உள்ளார். காவல்துறை தலைமை இயக்குநரின் பதவிக்கு குறையாத ஒரு அலுவலரின் கீழான காவல்துறை மற்றும் புலனாய்வு ஊழியர்கள் ஆணையத்தின் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமாக உள்ள பிற அலுவலர்களும் ஊழியர்களும் உள்ளனர்.

2. மத்திய அரசால் இயற்றப்படும் அத்தகு விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆணையமானது தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு பிற நிர்வாக தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞானநுட்ப ஊழியர்களை நியமிக்கலாம்.

3. உட்பிரிவு 2ன் கீழ் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களின் மற்றும் பிற ஊழியர்களின் ஊதியங்களும், படிகளும் மற்றும் பணிக்கான நிபந்தனைகளும் குறித்து உரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

**ஆணையத்தின் பணிகளும் அதிகாரங்களும்(சட்டப்பிரிவு-12) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-12ன்படி ஆணையத்தின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் பற்றி கூறுகிறது. அவை,

(அ) நபர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றின் பேரில்: 1. மனித உரிமைகளின் மீறுகைக்கான அல்லது அதில் தலையீட்டு குறைத்தலுக்கான 2. அரசு பணியாளர் ஒருவரால் அத்தகைய மீறுகையைத் தடுப்பதில் காணப்பட்ட கவனமற்ற தன்மைக்கான முறையீட்டினை விசாரித்தல்.

(ஆ) நீதிமன்றம் ஒன்றின் முன்னர் முடிவுறா நிலையில் உள்ள மனித உரிமை மீறலுக்கான குற்றச்சாட்டு எதனையும் உள்ளடக்கி உள்ள நடவடிக்கை எதிலும் மாநில மனித உரிமைகள் ஆணையர் அத்தகைய நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் தலையிடுவது ஆகும்.



Scanned with CamScanner

(இ) அணுகுமுறை, சீர்திருத்தம் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைச்சாலை அல்லது நிலையம் எதிலும் எங்கே நபர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளார்களோ அல்லது அங்கே இருக்கின்றவர்களின் வாழ்க்கை நிலையினை கவனமாக ஆராய்வதற்கும் அதில் பரிந்துரைகளை செய்வதற்கும் மாநில அரசாங்கத்திற்கு தகவல் அளித்துவிட்டு தேசிய மனிதஉரிமை ஆணையம் அதனைப் பார்வையிடுவது ஆகும்.

(ஈ) அரசியலமைப்பு அல்லது அச்சமயத்தில் அமலில் உள்ள எந்தச் சட்டத்திலாவது மனிதஉரிமைகளை பாதுகாப்பதற்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாவல் முறைகளை மறுஆய்வு செய்து அவற்றினை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கு உண்டான நடவடிக்கைகளை பரிந்துரைப்பது ஆகும்.

(உ) மனித உரிமைகளை அனுபவிப்பதைக் கட்டுப்படுத்தும் பயங்கரவாத செயல்கள் உள்ளிட்ட காரணிகளை மறுஆய்வு செய்து அதற்கு உகந்த நிவாரண நடவடிக்கைகளை பரிந்துரைப்பது ஆகும்.

(ஊ) மனித உரிமைகள் மீதான உடன்படிக்கைகள் மற்றும் பிற சர்வதேச ஆவணங்களையும் ஆய்வு செய்து அவற்றினை சிறந்த முறையில் செயல்படுத்த பரிந்துரைகளைச் செய்வது ஆகும்.

(எ) மனித உரிமைகள் பற்றிய துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகும்.

(ஏ) வெளியீடுகள், மக்கள் தொடர்பு சாதனங்கள், கருத்தரங்கங்கள் மற்றும் வேறு வழிகளின் மூலம் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையே மனித உரிமைகள் கல்வியறிவை பரப்புதல் மற்றும் இந்த உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கென கிடைக்கும் பாதுகாவல் முறைகள் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவது ஆகும்.

(ஐ) மனித உரிமைகள் துறையில் செயலாற்றும் அரசு சாரா அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் முயற்சிகளை ஊக்குவிப்பது ஆகும்.

(ஒ) மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு தான் அவசியமெனக் கருதும் ஆணையத்தின் பிற பணிகள் ஆகும்.

**விசாரணைகள் தொடர்பான அதிகாரங்கள்(சட்டப்பிரிவு-13) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-13ன்படி விசாரணைகள் தொடர்பான அதிகாரங்கள் பற்றி கூறுகிறது. அவை,

1. ஆணையம் இந்தச் சட்டத்தின்படியான முறையீடுகளை விசாரணை செய்கையில் உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டம் 1908ன்படி உரிமை வழக்கு ஒன்றின் விசாரிக்கும் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின் அதிகாரங்கள் அனைத்தையும் அதிலும் குறிப்பாக பின்வரும் விஷயங்களைப் பொறுத்து பெற்றிருத்தல் வேண்டும். அவை, (அ) சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புதல் மற்றும் அவர்களது வருகையை வலியுறுத்தல் (ஆ) ஆவணம் எதையாவது கண்டுபிடித்து தாக்கல் செய்தல் (இ) பிரமாணப் பத்திரிகைகளின் பேரில் சாட்சியங்களைப் பெறுதல் (ஈ) நீதிமன்றம் அல்லது பொது ஆவணம் நகலைக் கோருதல் (உ) சாட்சிகளை விசாரிப்பதற்கு அல்லது ஆவணங்களை ஆய்வு செய்வதற்காக பணிக்கிற ஆணைகளை வழங்குதல் ஆகும்.

2. விசாரணையின் கருப்பொருளுக்கு தொடர்புடையதாக அல்லது பயனுள்ளதாக இருக்கலாம் என்று ஆணையத்தின் அபிப்பிராயத்தில் தோன்றும். அந்த குறிப்புகள்மீது தகவல் அளிக்கும்படி ஆணையமானது எந்நபரையும் அச்சமயத்தில் அமலில் உள்ள எந்த சட்டத்தின் கீழாவது கோருவதற்குரிய எந்தச் சிறப்புரிமையாவது பெற்றிருந்தால் அதற்கு உட்பட்டு கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்ட எந்நபரும், இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) 176 மற்றும் 177வது பிரிவின் பொருளின்படி அத்தகு தகவலை அவர் சட்டப்படி அளிக்கக் கடமைப்பட்டவராக கருதப்படுதல் வேண்டும்.

3. ஆணையம் இதன் பொருட்டு அரசு இதழுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பதிவு பெற்ற அலுவலர் ஒருவரின்படி பிற அலுவலர் எவரும் கூட்டத்தில் அல்லது விசாரணைக்குரிய பொருள் தொடர்பான ஆவணம் எதுவும் ஆணையம் நம்புவதற்குக் காரணம் உடைய இடம் எதிலும் நுழையலாம். மேலும் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம் 1973ன் சட்டப்பிரிவு 100ன் படி எந்த அளவுக்குப் பொருந்துமோ அந்த அளவுக்கு உட்பட்டு ஆவணம் எதனையும் பறிமுதல் செய்யலாம் அல்லது அவற்றிலிருந்து ஏடுகுறிப்புகளையோ படிகளையோ எடுக்கலாம்.

4. ஆணையம் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆணையத்தின் பார்வையில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 175ல் சட்டப்பிரிவு 178ல், சட்டப்பிரிவு 179ல், சட்டப்பிரிவு 180ல் அல்லது சட்டப்பிரிவு 228ல் விவரிக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல் எதுவும் செய்யப்பட்டு இருக்கிறபோது ஆணையம் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டம் 1973ல் வகை செய்யப்பட்டுள்ளது. குற்றச்செயலை உருவாக்கும் பொருண்மைகளும் குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அதனை விசாரிப்பதற்கு குற்றவியல் நடுவர் ஒருவருக்கு வழக்கினை அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தகைய வழக்கு எதுவும் எந்தக் குற்றவியல் நடுவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோ அந்தக் குற்றவியல் நடுவர், குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம் 1973ன்படி, சட்டப்பிரிவு 346ன்படி அந்த வழக்கு அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதைப்போன்று குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான முறையீட்டை விசாரிப்பதற்கு முற்படுதல் வேண்டும்.

5. ஆணையத்தின் முன் இருக்கும் நடவடிக்கை ஒவ்வொன்றும் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 193 மற்றும் 228இன் பொருளின்படியும், பிரிவு 196ன் நோக்கங்களுக்காகவும் நீதிமுறை நடவடிக்கை ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆணையம் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம் 1973ல் சட்டப்பிரிவு 195இன் மற்றும் அத்தியாயம் XXVIன் நோக்கங்கள் அனைத்திற்காகவும் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**புலனாய்வு(சட்டப்பிரிவு-14&15) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-14 & 15ன்படி புலனாய்வு பற்றி கூறுகிறது. அவை,



Scanned with CamScanner

1. விசாரணை குறித்து புலனாய்வு ஏதேனும் செய்யும் நோக்கத்திற்காக ஆணையமானது மத்திய அரசின் அல்லது மாநில அரசின் இசைவோடு அந்தந்த நிகழ்விற்கேற்ப அல்லது எந்த புலனாய்வு நிறுவனத்தின் சேவைகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

2. விசாரணை குறித்த எந்த விஷயத்தையும் புலனாய்வு செய்யும் நோக்கத்திற்காக நட்ட உட்பிரிவு(1)ன் கீழ் சேவைகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட எந்த அலுவலரோ அல்லது புலனாய்வு நிறுவனமோ ஆணையத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, (அ) எந்த நபருக்கும் அழைப்பாணை அனுப்பி, அவர்களது வருகையை வலியுறுத்தி பிரமாணத்தின் பேரில் விசாரிக்கலாம் (ஆ) ஆவணம் எதையாவது கண்டுபிடித்து தாக்கல் செய்யக் கோரலாம் (இ) அலுவலகம் எதிலிருந்தாவது பொது ஆவணம் அதன் நகலைக் கோரலாம்.

3. ஆணையத்தின் முன்பு சாட்சியம் அளிக்கும் நடவடிக்கையில் உட்பிரிவு(1)ன் கீழ் சேவைகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட புலனாய்வு நிறுவனத்தின் முன்பு ஒரு நபரால் செய்யப்பட்ட எந்த வாக்குமூலத்திற்கு தொடர்பாகவும் சட்டப்பிரிவு 15ன் படி இந்த வகைமுறைகள் பொருந்தும்.

4. சட்ட உட்பிரிவு (1)ன் கீழ் சேவைகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட எந்த அலுவலரும் விசாரணை குறித்த எந்த விஷயத்தையும் புலனாய்வு செய்தல் வேண்டும்.

5. சட்ட உட்பிரிவு(4)ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள பொருண்மைகள், அதில் முடிவு ஏதேனும் அடையப்பட்டு இருப்பின் அவை சரியா என்பது குறித்து ஆணையமே தன்னைத்தானே திருப்தி செய்து கொள்ளுதல் வேண்டும்.

**வாக்கு மூலங்கள்(சட்டப்பிரிவு-16) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-16ன்படி வாக்கு மூலங்கள் பற்றி கூறுகிறது. சட்டத்தின்படி ஆணையத்தின் முன்பு சாட்சியம் அளிக்கும் நடவடிக்கையில் ஒரு நபரால் செய்யப்படும் எந்த வாக்கு மூலமும், அந்த வாக்கு மூலத்தால் பொய்ச் சாட்சியம் அளித்ததற்கான ஒரு குற்றவியல் வழக்கு தொடர்பைத் தவிர எந்த உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையிலும் அவரை உட்படுத்தவோ அல்லது அவருக்கு எதிராகவோ பயன்படுத்துதல் கூடாது. இருப்பினும் அந்த வாக்குமூலமானது, (அ) பதில் அளிக்கும்படி ஆணையம் அவரைக் கோரிய வினாவிற்கு அவர் எதிர் பதில் அளிக்கும்பொழுது செய்யப்பட்டு இருக்கிறது (ஆ) விசாரணையின் கருப்பொருளுக்கு தொடர்புடையதாக இருக்கிறது என்பதற்கு உட்பட்டது ஆகும்.

**விசாரணையின் வாதம் :**

விசாரணையின் எந்தக் கட்டத்திலும் ஆணையமானது, (அ) எந்நபரின் நடத்தையையாவது விசாரிப்பது அவசியமெனக் கருதினால் (ஆ) அந்த விசாரணையில் நபர் எவரது நற்பெயரும் குந்தகமாக பாதிக்கக்கூடும் என்று அது கருதுமாயின் அந்த விசாரணையில் அந்த நபருக்குக் கேட்கப்படுவதற்கும் அவரது மறுப்புரையில் சான்றினைத் தாக்கல் செய்வதற்கும் தகுமானதொரு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும் இந்தப் பிரிவில் உள்ள எதுவும் ஒரு சாட்சியின் நன்மதிப்பை பழிச்சாட்டும் பொழுது பொருந்தாது.



Scanned with CamScanner

## புகார்களின் மீதான விசாரணை(சட்டப்பிரிவு-17) :

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-17ன்படி புகார்களின் மீதான விசாரணை பற்றி கூறுகிறது. மனித உரிமை மீறல்கள் குறித்த புகார்களை விசாரிக்கும்பொழுது,

1. மத்திய அரசு அல்லது ஏதேனும் மாநில அரசு அல்லது அவற்றிற்குகீழ் அமைந்துள்ள வேறு அதிகார அமைப்பு அல்லது ஏதேனும் குழுவமைப்பு ஆகியவற்றிடமிருந்து தான் குறிப்பிடப்படும். அத்தகு காலத்திற்குள் தகவல் அல்லது அறிக்கையை கோரிடலாம். அவை, (அ) ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகவல் அல்லது அறிக்கை பெறப்படவில்லை என்றால் தாமே அந்த புகாரின் மீதான விசாரணையை மேற்கொள்ளலாம் (ஆ) தகவல் அல்லது அறிக்கை பெறப்பட்டதின் பேரில் அல்லது சம்பந்தப்பட்ட அரசால் அல்லது அதிகார அமைப்பால் அப்புகாரின் மீது தேவையான நடவடிக்கை தொடங்கப்பட்டுவிட்டது என்றோ ஆணையம் திருப்தி அடைந்தால் அது அப்புகாரை மேற்கொண்டு தொடராமல் இருக்கலாம்.

2. உட்கூறு(அ)ல் கூறப்பட்டுள்ள எதற்கும் குந்தகமில்லாமல் தான் பொருத்தமெனக் கருதினால், புகாரின் தன்மையைக் கருத்தில் கொண்டு அதன் மீதான விசாரணை ஒன்றை தொடங்கலாம்.

## விசாரணைக்கு பிறகு நடவடிக்கைகள் (சட்டப்பிரிவு-18) :

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-18ன்படி விசாரணைக்கு பிறகு நடவடிக்கைகள் எடுப்பது பற்றி கூறுகிறது. அவை,

1. மனித உரிமைகள் மீறல் நடந்துள்ளது என்பதையோ, மனிதஉரிமைகள் மீறலை தடுப்பதில் ஒரு பொது ஊழியரின் கவனக் குறைவையோ, அவ்விசாரணை வெளிப்படுத்தினால் சம்பந்தப்பட்ட நபர் அல்லது நபர்களுக்கு எதிராக குற்ற வழக்கை அல்லது ஆணையம் தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு பிற நடவடிக்கைகளை தொடங்குமாறு சம்பந்தப்பட்ட அரசிற்கு பரிந்துரை செய்யலாம்.

2. உச்சநீதிமன்றத்தை அல்லது சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்றத்தை, அந்நீதிமன்றம் அவசியமெனக் கருதும் கட்டளை, உத்தரவுகளை அணுகலாம்.

3. பாதிக்கப்பட்டோருக்கு அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு ஆணையம், தான் அவசியமெனக் கருதும் அத்தகு உடனடி இடைக்கால நிவாரணம் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அரசிற்கு பரிந்துரை செய்யலாம்.

4. ஆணையமானது விசாரணை அறிக்கையின் ஒரு நகலை தனது பரிந்துரைகளுடன் சம்பந்தப்பட்ட அரசிற்கோ, அதிகாரத்திற்கோ அனுப்புதல் வேண்டும். சம்பந்தப்பட்ட அரசோ அல்லது அதிகார அமைப்போ ஒரு மாதத்திற்குள் அந்த அறிக்கை குறித்து அதன்பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை உள்ளிட்ட தனது விமர்சனங்களை ஆணையத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

5. ஆணையமானது தனது விசாரணை அறிக்கையை சம்பந்தப்பட்ட அரசின் விமர்சனங்கள் ஏதேனும் இருப்பின், ஆணையத்தின் பரிந்துரைகளின் பேரில் சம்பந்தப்பட்ட அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கையுடனும் பொது மக்களுக்கு வெளியிடுதல் வேண்டும்.



Scanned with CamScanner

**ஆயுதப் படைகள் குறித்த நடைமுறை(சட்டப்பிரிவு-19) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-19ன்படி ஆயுதப்படைகள் குறித்த நடைமுறைப் பற்றி கூறுகிறது. அவை

1. ஆயுதப்படை உறுப்பினர்களினால் ஏற்பட்ட மனித உரிமைகள் மீறுகைக்கான முறையீட்டில் நடவடிக்கை எடுக்கையில் ஆணையம் பின்வரும் நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அவை (அ) அது தாமாக முற்பட்டோ அல்லது மனு ஒன்று பெறப்படுவதன் பேரிலோ மைய அரசாங்கத்திடமிருந்து அறிவிப்பு ஒன்றினை நாடிப் பெறலாம் (ஆ) அறிக்கை பெறப்பட்ட பின்னர் அது முறையீட்டின்மீது நடவடிக்கை எடுக்கலாம் அல்லது தேர்வுக்கு ஏற்ப அந்த அரசாங்கத்திற்கு அதன் பரிந்துரைகளைச் செய்யலாம்.

2. மத்திய அரசானது 3 மாதத்திற்குள்ளோ அல்லது ஆணையம் நீட்டித்து அனுமதிக்கும் அத்தகு காலத்திற்குள்ளோ அப்பரிந்துரைகளின் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து ஆணையத்திற்கு தகவல் தெரிவித்தல் வேண்டும்.

3. ஆணையமானது தனது விசாரணை அறிக்கையை மத்திய அரசிற்கு தான் செய்த பரிந்துரைகளுடனும், அப்பரிந்துரைகளின் பேரில் அந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கையுடனும் பொதுமக்களுக்கு வெளியிடுதல் வேண்டும்.

4. சட்ட உட்பிரிவு(3)ன்படி வெளியிடப்பட்ட அறிக்கையின் நகல் ஒன்றை ஆணையமானது மனுதாரருக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ வழங்குதல் வேண்டும்.

**ஆணையத்தின் ஆண்டு, சிறப்பு அறிக்கைகள்(பிரிவு-20) :**

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-20ன்படி ஆணையத்தின் ஆண்டு மற்றும் சிறப்பு அறிக்கைகள் பற்றி கூறுகிறது. அவை,

1. ஆணையம் மைய அரசாங்கத்திற்கும் தொடர்புடைய மாநில அரசாங்கத்திற்கும் ஆண்டறிக்கை ஒன்றை அனுப்புதல் வேண்டும். அவசரமானதாக அல்லது முக்கியமானதாக இருக்கிறது என்பதால் ஆண்டறிக்கை அனுப்பப்படும் வரையிலும் காலங்கடத்துதல் கூடாது என்று அது கருதுகிற பொருட்பாடு எதன்மீதும் சிறப்பு அறிக்கைகளை எந்த நேரத்திலும் அனுப்பலாம்.

2. மத்திய அரசு அல்லது மாநில அரசானது அந்தந்த நிகழ்விற்கேற்ப ஆணையத்தின் ஆண்டு மற்றும் சிறப்பு அறிக்கைகளை முறையே பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்னரும் அல்லது மாநில சட்டமன்றத்தின் முன்னரும் ஆணையத்தின் பரிந்துரைகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் குறிப்பாணை ஒன்றுடனும், பரிந்துரைகள் ஏற்கப்படாததற்கு காரணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றுடனும் வைக்கப்பட ஆவணம் செய்தல் வேண்டும்.



Scanned with CamScanner

## 7.8 தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் (சட்டப்பிரிவு-21)

தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் 17-04-1997ம் ஆண்டு மாநில அதிகாரத்தின் கீழ் சட்டப்பிரிவு-21ன்படி மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1993ல் உருவாக்கப்பட்டது. இதன்படி மாநில மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்டுள்ள ஒரு சில இந்திய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. இவ்வாணையம் தன்னாட்சி பெற்ற அமைப்பு ஆகும்.

**மாநில மனித உரிமை ஆணையம் அமைத்தல்(பிரிவு-21) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-21ன்படி மாநில மனித உரிமை ஆணையம் அமைத்தல் பற்றி கூறுகிறது. அவை,

1. இந்த பிரிவின் கீழ் ஒரு மாநில ஆணையத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்தவும், ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றவும் ஒரு மாநில அரசானது ------------ (மாநிலத்தின் பெயர்) எனப் பெயர் வழங்கப்படும் குழு ஒன்றை, ஒரு மாநில அரசு அமைக்கலாம்.

2. மாநில ஆணையமானது, (அ) உயர்நீதிமன்றம் ஒன்றின் தலைமை நீதிபதியாக இருந்திருக்கிற தலைமையாளர் ஒருவர் (ஆ) உயர்நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி ஒருவராக இருக்கிற உறுப்பினர் ஒருவர் (இ) அந்த மாநிலத்தில் மாவட்ட நீதிபதி ஒருவராக இருக்கிற உறுப்பினர் ஒருவர் (ஈ) மனிதஉரிமைகள் தொடர்பான பொருட்பாடுகளில் அறிவுடைய நபர்களில் இடையே இருந்து அமர்த்தப்பட வேண்டிய இரு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

3. மாநில ஆணையத்தின் தலைமை ஆட்சித்துறை அலுவலராக இருப்பதற்குச் செயலாளர் ஒருவர் இருப்பார். மாநில ஆணையம் அவருக்கு ஒப்படைவு செய்யலாகும் அதன் அதிகாரங்களைச் செலுத்துதலும் செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

4. மாநில ஆணையத்தின் தலைமை அலுவலகமானது மாநில அரசு அறிவிப்பின் மூலம் குறிப்படும் அத்தகு இடத்தில் அமைந்து இருத்தல் வேண்டும்.

5. அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் பட்டியல் II அல்லது IIIல் எண்ணிக்கையில் இடப்பட்டுள்ள பதிவுக் குறிப்புகளில் எவற்றிற்காவது தொடர்புடைய விஷயங்கள் குறித்த மனித உரிமைகள் மீறலை மட்டுமே ஒரு மாநில ஆணையமானது விசாரணை செய்யலாம்.

**தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்(பிரிவு-22) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-21ன்படி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் பற்றி கூறுகிறது. அவை,

1. தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் ஆளுநரால் அவரது கையொப்பம் மற்றும் முத்திரை கொண்ட ஆணையினால் நியமனம் செய்யப்பட வேண்டும். இருப்பினும் இந்த உட்பிரிவின் கீழான ஒவ்வொரு நியமனமும், பின்வருவோர்கள் அடங்கிய ஒரு குழுவின் பரிந்துரையைப் பெற்ற பின்னரே செய்யப்பட வேண்டும். அவர்கள் (அ) முதலமைச்சர் - தலைவர் (ஆ) சட்டப்பேரவைத் தலைவர் - உறுப்பினர் (இ) அந்த மாநிலத்தின் உள்துறைக்கு பொறுப்பேற்றுள்ள அமைச்சர் - உறுப்பினர் (ஈ) சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியின் தலைவர் - உறுப்பினர் ஆவர்.

2. குழுவில் உள்ள காலியிடம் ஏதேனும் காரணமாக மட்டும் ஒரு தலைவரின் அல்லது ஒரு உறுப்பினரின் நியமனம் செல்லுபடி அற்றதாகாது.

**மாநில ஆணையத்தின் உறுப்பினர் ஒருவர் நீக்கப்படுதல் (சட்டப்பிரிவு-23) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-21ன்படி மாநில ஆணையத்தின் உறுப்பினர் ஒருவர் நீக்கப்படுதல் பற்றி கூறுகிறது. அவை,

1. சட்ட உட்பிரிவு(1)ல் எவை கூறப்பட்டு இருப்பினும் அதைப் பொருட்படுத்தாமல் குடியரசுத் தலைவர் தனது உத்திரவால் ஆணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் எவரையேனும் அந்தந்த நிகழ்விற்கு ஏற்ப பின்வருவருவனவற்றின் அடிப்படையில் பதவியிலிருந்து நீக்கலாம். அவை,

(அ) அவர் நொடிப்புநிலை அடைந்தவர் எனத் தீர்மானிக்கப்பட்டுவிட்டால்

(ஆ) அவர் தனது பதவியின் பணிக்காலத்தில் தனது பதவியின் கடமைகளுக்கு புறம்பாக ஊதியம் பெறக் கூடிய பணி எதிலேனும் ஈடுபட்டு இருந்தால்

(இ) அவர் உள்ளம் ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ தனது பதவியைத் தொடர தகுதியற்றவராக ஆகிவிட்டால்

(ஈ) பித்துப் பிடித்தவராக இருப்பராயின் அல்லது தகுதியான நீதிமன்றத்தினால் அவர் அவ்வாறு விளம்பப்பட்டிருப்பாராயின்

(உ) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கி இருக்கிறதென குடியரசுத் தலைவர் கருதுகிற குற்றச்செயல் ஒன்றிற்காகக் குற்றம் என தீர்ப்பு அளிக்கப்பட்டுச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருப்பராயின் அத்தலைமையாளரை அல்லது பிற உறுப்பினர் எவரையும் அவரது பதவியில் இருந்து குடியரசுத் தலைவர் நீக்கலாம்.

2. சட்ட உட்பிரிவு(2)ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு குடியரசுத் தலைவரால், உச்ச நீதிமன்றத்திற்குச் செயல்பட்டு இருக்கும் குறிப்புரையின் அடிப்படையில் செய்த விசாரணையின் பேரில் மாநில ஆணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் எவரேனும் அந்தந்த நிகழ்விற்கு ஏற்ப அவரது மெய்ப்பிக்கப்பட்ட நெறியிழந்த நடத்தை காரணமாக பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். இதனை குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்பிய பிறகு அதன் அடிப்படையில் குடியரசுத் தலைவர் பிறப்பிக்கும் உத்திரவால் மட்டுமே மாநில ஆணையத்தின் தலைவர் அல்லது பிற உறுப்பினர் எவரேனும் அவரது பதவியில் இருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

**உறுப்பினர்களின் பதவிக்காலம்(சட்டப்பிரிவு-24) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-24ன்படி உறுப்பினர்களின் பதவிக்காலம் பற்றி கூறுகிறது. அவை,

1. தலைவராக நியமிக்கப்பட்ட எந்தநபரும் அவர் தனது பதவியில் அமரும் தேதியிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு அல்லது அவர் 70 வயதை அடையும் வரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.



Scanned with CamScanner

2. உறுப்பினராக நியமிக்கப்பட்ட எந்தநபரும் அவர் தனது பதவியில் அமரும் தேதியிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும். அவர் மற்றொரு 5 ஆண்டு காலத்திற்கு மறுநியமனம் பெறத் தகுதி உடையவர். இருப்பினும் எந்த உறுப்பினரும் அவர் 70 வயதை எட்டி விட்ட பிறகு பதவி வகித்தல் கூடாது.

3. பதவி வகித்தல் முடிவுக்கு வருவதைப்போல் ஒரு தலைவர் அல்லது ஒரு உறுப்பினர் இந்திய அரசாங்கத்தின் கீழோ அல்லது மாநில அரசாங்கம் எவரேனும் ஒன்றின் கீழோ மேற்கொண்டு பணிபுரிய தகுதியற்றவர் ஆவார்கள்.

**உறுப்பினர் தலைமையாளராக செயல்படுதல்(சட்டப்பிரிவு-25) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-25ன்படி உறுப்பினர் தலைமையாளராக செயல்படுதல் பற்றி கூறுகிறது. அவை,

1. தலைமையாளரின் இறப்பு, பதவிவிலகல் அல்லது பிறவாறான காரணங்களினால் அவரது பதவியில் காலியிடம் எதுவும் ஏற்படுகின்ற நிகழ்வில் அத்தகைய காலியிடத்தை நிரப்புவதற்காகப் புதிய தலைமையாளர் ஒருவர் அமர்த்தப்படும் வரையிலும் தலைமையாளராகச் செயல்படுவதற்கு உறுப்பினர்களில் ஒருவருக்கு அறிவிக்கை வாயிலாக ஆளுநர் அதிகாரம் அளிக்கலாம்.

2. தலைமையாளர் விடுப்பின் காரணமாக வராமல் இருப்பதினாலோ அல்லது வேறு வகையிலோ தனது பணிகளை ஆற்ற இயலாதிருக்கும் பொழுது ஆளுநரானவர் அறிவிப்பின் மூலம் இதற்கென அதிகாரம் அளிக்கலாகும் உறுப்பினர்களில் அத்தகைய ஒருவர் அத்தலைவர் தனது கடமைகளை மீண்டும் தொடங்கும் தேதிவரை அத்தலைவரின் பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

**பணிக்கான விதிமுறைகளும் நிபந்தனைகளும்(சட்டப்பிரிவு-26) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-26 பணிக்கான விதிமுறைகளும் நிபந்தனைகளும் பற்றி கூறுகிறது. உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் ஊதியங்களும் படிகளும் மற்றும் அவர்களது பணிக்கான பிற விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாநில அரசால் குறித்து உரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும். இருப்பினும் ஒரு உறுப்பினரின் ஊதியமும் படிகளும், அவரது பணிக்கான பிற விதிமுறைகளும் நிபந்தனைகளும் அவரது நியமனத்திற்கு பிறகு அவருக்கு பாதகமாக மாற்றப்படுதல் கூடாது.

**அலுவலர்களும் பிற ஊழியர்களும்(சட்டப்பிரிவு-27) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-27 அலுவலர்களும் பிற ஊழியர்களும் பற்றி கூறுகிறது. அவை,

1. மாநில அரசானது பின்வருவோர்களை ஆணையத்திற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். அவர்கள் (அ) மாநில ஆணையத்தின் செயலாளராக இருத்தலுக்காக, மாநில அரசாங்கத்தின் செயலாளர் பதவித் தகுதிக்கு குறையாத ஒரு அலுவலர் (ஆ) காவல்துறை தலைமை ஆய்வாளரின் பதவிக்கு குறையாத ஒரு அலுவலரின் கீழான காவல்துறை,



Scanned with CamScanner

புலனாய்வு ஊழியர்கள், மாநில ஆணையத்தின் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமாக உள்ள பிற அலுவலர்களும் ஊழியர்களும் நியமிக்கலாம்.

2. இதன்பொருட்டு மாநில அரசால் இயற்றப்படும் அத்தகு விதிமுறைகளுக்கு உட்பட்டு மாநில ஆணையமானது தான் பொருத்தமெனக் கருதும் பிற நிர்வாக தொழில்நுட்ப, விஞ்ஞானநுட்ப ஊழியர்களை நியமிக்கலாம்.

3. சட்ட உட்பிரிவு(2)ன் கீழ் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் மற்றும் பிற ஊழியர்களின் ஊதியங்களும், படிகளும், பணிக்கான நிபந்தனைகளும் மாநில அரசால் குறித்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

**ஆண்டறிக்கை(சட்டப்பிரிவு-28) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-28, ஆண்டறிக்கை பற்றி கூறுகிறது. அவை,

1. மாநில ஆணையம் ஆண்டறிக்கை ஒன்றை மாநில அரசாங்கத்திற்கு பணிந்து அனுப்புதல் வேண்டும். அவசரமானதாக அல்லது முக்கியமானதாக இருக்கிறது என்பதால் ஆண்டறிக்கை பணிந்து அனுப்பப்படும் வரையிலும் காலங்கடத்துதல் கூடாது என்று அது கருதுகிற பொருட்பாடு எதன்பேரிலும் சிறப்பு அறிக்கைகளை எந்த நேரத்திலும் அனுப்பலாம்.

2. மாநில அரசானது மாநில ஆணையத்தின் ஆண்டு மற்றும் சிறப்பு அறிக்கைகளை மாநில சட்டமன்றத்தில் இரு அவைகள் இருப்பின் அந்த, இரு அவைகளின் முன்னரும் அல்லது அந்த சட்டமன்றம் ஓரவை கொண்டதாக இருப்பின் அந்த அவையின் முன்னரும் மாநில ஆணையத்தின் பரிந்துரைகளின்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் குறிப்பாணை ஒன்றுடனும், பரிந்துரைகள் ஏற்கப்படாததற்கு காரணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றுடனும் வைக்கப்பட ஆவன செய்தல் வேண்டும்.

**புகார்கள் அனுப்புவது :**

தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்திற்கு அனுப்பப்படும் புகார்கள் ஆங்கிலம் அல்லது இந்தியிலோ 8வது அட்டவணையில் கூறப்பட்டுள்ளபடி மாநில மொழியான தமிழிலும் இருத்தல் வேண்டும். இந்த மொழிகளில் அனுப்பபடும் புகார்களை ஆணையம் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

1. புகார் மனுவுக்கு கட்டணம் கிடையாது. 2. புகாரில் முழுமையான விவரத்தை தெரிவித்தல் வேண்டும். 3. ஆணையம் புகார் சம்பந்தமான கூடுதல் தகவல்களை கேட்டுப் பெறலாம். புகார்களை பிரமாணப் பத்திரம்(அபிடாவிட்) மூலம் அளிக்குமாறு சொல்லலாம். 4. தந்தி மற்றும் தொலை நகல் மூலம் அனுப்பும் புகார்களை சற்று எச்சரிக்கையுடன் ஆணையம் ஏற்றுக் கொள்கின்றது.

**புகார் மனுவில் குறிப்பிட வேண்டியவை :**

1. பெயர் 2. இருப்பிட முகவரி 3. புகார் எழுந்த நிகழ்விடம் மற்றும் முகவரி 4. நாள் நிகழ்வின் காலம் 5. மனித உரிமை மீறல்களில் விரிவான / சுருக்கமான விவரங்கள் 6. எந்த பொது ஊழியர் குறித்து



Scanned with CamScanner

புகார் அல்லது துறையினர் குறித்து புகார் 7. நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளனவா / தீர்ப்பாயம் / வேறுபிற ஆணையங்களில் நிலுவையில் உள்ளனவா 8. இடர் / துயர் / பதிலீடு குறித்து வேண்டுவன.

**ஏற்கப்படாத புகார்கள் :**

1. தெளிவற்ற புகார் 2. தெளிவற்ற பெயர் இல்லாத புனைப்பெயரில் கொடுக்கப்பட்ட புகார் 3. மிகச்சிறிய அளவிலான புகார் 4. பொது ஊழியருக்கு எதிரானவல்லாத குற்றச்சாட்டு 5. சொத்துரிமைகள், ஒப்பந்த கட்டுப்பாடுகள், உரிமையியல் சார்ந்த பிரச்சினைகள் 6. பணி சம்பந்தமானப் புகார் 7. மனித உரிமைகள் மீறுதல் எதனையும் கொண்டிராத குற்றச்சாட்டுகள் 8. தொழில் அல்லது தொழில் தகராறு சம்பந்தமானப் புகார் 9 ஆணையத்தின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட புகார்.

**புகார்களைப் பெறுதல் :**

1. புகார்களை ஆணையம் பெற்றபின் அவைகளை துறை வாரியாக பிரிக்கப்பட்டு அவைகளை நாட்குறிப்பில் பதிவு செய்தபின் அந்தந்த சட்டப்பிரிவுக்கு அனுப்பபடுகின்றது. 2. அவசரப் புகார்களை அந்த துறை சட்டப் பதிவாளரின் உடனடியாக சமர்ப்பிக்கப்பட்டபின், பதிவாளர் அதற்குத் தேவையான கட்டளைகள் பிறப்பிக்கப்படும். 3. புகார்கள் மற்றும் தகவல்கள் ஆங்கிலத்தில் இல்லாதபொழுது அவற்றை உடனடியாக மொழிபெயர்த்து ஆணையத்தின் முன் வைக்கப்படும். அவசரத்தன்மைக்கேற்ப புகார்கள் சுருக்கமான உரைகளாக ஆங்கிலத்தில் தயார் செய்யப்படுகின்றன.

**ஆய்வு :**

ஒவ்வொரு புகாரும் அதன் தன்மைக் குறித்து ஆய்வு செய்யப்பட்டு அதன்படி வகைப்படுத்தப்படுகின்றது. அவற்றை ஒழுங்குபடுத்தியபின் அவற்றை தன்மைக்கேற்ப வழக்குப் பதிவு செய்து அதற்கு பதிவெண் வழங்கப்படுகின்றது.

**காலவரை :**

1. புகாரைப் பதிவு செய்த நாளிலிருந்து 7 நாள்களுக்கு மிகாமல் ஆணையத்தின் முன் வைக்கவேண்டும். 2. அவசரத் தேவையாக இருப்பின் அவற்றின் அவசரத் தன்மைக் கருதி 24 மணி நேரத்திற்குள் தேசிய அல்லது மாநில மனித உரிமை ஆணையத்தின் முன் வைக்கப்படவேண்டும் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

**அழைப்பாணை :**

1. புகார் மனுவில் கூறப்பட்டுள்ள நபருக்கு ஆணையம், அவர் குறித்து விசாரணை தேவையெனக் கருதினால் அவருக்கு அழைப்பாணைகள் (சம்மன்ஸ்) அனுப்பி ஆணையத்துக்கு வர ஆணையம் பணிக்கின்றது. 2. புகார்தாரர் அல்லது புகார்தாரரின் அதிகாரம் பெற்ற வேறொரு நபர்(வழக்குரைஞர் தான் என்பதில்லை. யார் வேண்டுமானாலும் அதிகாரம் பெற்றவராக) ஆணையத்தில் முன்னிலையாதல்(ஆஜர்) வேண்டும். 3. வழக்கிற்கு தேவையெனக் கருதினால், சாட்சியங்கள் அல்லது மற்றெவரேனும் தேவைப்படின் ஆணையம் அவர்களுக்கும் அழைப்பாணைகள்(சம்மன்ஸ்) அனுப்பினால் முன்னிலையாதல்(ஆஜர்) வேண்டும்.



Scanned with CamScanner

**புலன் விசாரணை :**

ஆணையமானது தனது 14வது பிரிவின் சட்டத்தில் வகைசெய்யப்பட்டு உள்ளவாறு அதனுடைய புலன் விசாரணையை மேற்கொள்ளுமாறு மாநில அரசின் புலனாய்வுக்கு உத்தரவிடும். இதன்படி அமையப்பட்ட குழுவினர் ஆணையத்திற்காக புலனாய்வை மேற்கொண்டு அதன் அறிக்கையை ஆணையத்தின் முன் சமர்ப்பிப்பர். குறிப்பிட்ட காலவரைக்குள் புலனாய்வை முடிக்கவில்லையெனில் மேற்கொண்டு முடிவுகளுக்காக காரணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பிக்கவேண்டும்.

**மனித உரிமை நீதிமன்றங்கள் (சட்டப்பிரிவு-30) :**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது சட்டப்பிரிவு-30ன்படி மனித உரிமை நீதிமன்றங்கள் பற்றி கூறுகிறது. மனித உரிமைகள் மீறப்பட்டதிலிருந்து எழும் குற்றச் செயல்களை விரைந்து விசாரணை செய்ய ஏதுவாக மாநில அரசால் உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியின் ஒருங்கிணைவுடன் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க சட்டம் வழிவகை செய்துள்ளதின்படி அமைக்கப்பெற்ற சிறப்பு நீதிமன்றங்கள் இவ்வழக்குகளை விசாரணை செய்யும். சிறப்பு மனித உரிமையியல் நீதிமன்றங்கள் என இந்நீதிமன்றங்கள் அழைக்கப்படும். சிறப்பு அரசு குற்றத்துறை வழக்குரைஞர் அரசின் சார்பில் இவ்வழக்குகளை மேற்கொள்வார்.

**மாநில மனித உரிமை ஆணைய நியமனங்கள் :**

சட்டப்பிரிவு 21ல் கூறப்பட்டுள்ளதின்படி அரசு ஆணை 1465, 1466 பொதுமக்கள் (சட்டம் மற்றும் ஒழுங்கு)துறை, நாள் 20.12.1996ல் கட்டமைக்கப் பெற்ற மாநில மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள் பின்வருமாறு நியமனம் செய்யப்படுகின்றனர். மாநில மனித உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் நியமனங்கள் அதன் சிறப்புக்குழுப் பரிந்துரையின்படி மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

## 7.9 பிரதான பாதுகாவலர்

முன்னாள் மாநில மனிதவுரிமை ஆணைய உறுப்பினர் திரு.கே. நடராஜன் குறிப்பிடுவது, "உண்மையில் மனித உரிமைகளின் பிரதான பாதுகாவலர் காவல்துறை எனலாம். சில களப்பணியாளர்களின் தவறான நடவடிக்கையால் காவல்துறை மனித உரிமை மீறல் புகாருக்கு உள்ளாகின்றது. பெரும்பாலான காவல்துறையினர் அதிகாரத் தோரணையோடு பணிபுரிந்தால்தான் மக்கள் மதிப்பர் என்ற தவறான எண்ணத்தில் உள்ளனர். இதனால் காவல்துறையினர் என்றாலே கடுப்புத் துறையினர், சீருடை அணிந்த சண்டைக்காரர், கெட்ட வார்த்தைகள் சரளமாக பேசுபவர். வழக்கு என்ற கொடுமைபடுத்துபவர். ஊழலில் உழலுபவர் என்ற எண்ணம் மேலோங்குகின்றது" என்கிறார்.

## 7.10 ஐ.நா.வின் மனித உரிமை விதிகள்

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இம்மனித உரிமைகள் மறுக்கப்பட்டன. அதனால் இதை ஏற்படுத்தும் பொறுப்பு ஐ.நா. அவைக்கு ஏற்பட்டது. 24.11.1945ல் ஐ.நா. அவை ஏற்பட்டவுடன் அமைக்கப்பட்ட



Scanned with CamScanner

குழுவின் முன் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அக்குழுவினரால் உருவாக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட விதிகள், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், பன்னாடுகளுக்கும் பொருந்துவனவாகவும் அமைந்து இருந்தது.

1948ம் ஆண்டு ஐ.நா.வினால் அமைக்கப்பட்ட சிறப்புக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மனித உரிமைகள் டிசம்பர் 10 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த தினத்தையே ஆண்டுதோறும் டிசம்பர் 10 அன்று மனித உரிமைகள் தினமாக அனைத்து நாடுகளாலும் கொண்டாடப்படுகின்றது. 10.12.1948ம் ஆண்டு 30 விதிகள் இயற்றப்பட்டது. அதில் சில முக்கிய விதிகளான,

1. அனைத்து மனிதர்களும் சுதந்திரமாகவும் சம அந்தஸ்துடனும் சம உரிமை பெற்றுள்ளனர் 2. ஒவ்வொருவருக்கும் வாழ்வியல் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு பெற உரிமை உண்டு 3. எவரையும் அடிமைப்படுத்துதல் கூடாது 4. சட்டத்தின் முன் அனைவரும் சமம். வேறுபாடின்றி அனைவருக்கும் சட்டப்பாதுகாப்பு அளிக்கப்படும் 5. எவரையும் காரணமின்றி கைது செய்யவோ, சிறையில் வைக்கவோ, நாடு கடத்தவோ கூடாது 6. அவரவர் நாட்டு எல்லைக்குள் நடமாடவும் வசிக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு 7. ஒவ்வொரு நாட்டு குடிமகனுக்கும் குடியுரிமை உண்டு 8. திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையில் ஈடுபடும் உரிமை 9. சொத்துரிமை 10. சிந்திக்கும் உரிமை, செயல்படும் உரிமை மற்றும் வழிபாட்டு உரிமை 11. கருத்து தெரிவிக்கவும், எண்ணங்களை வெளியிடவும் உரிமை 12. அமைதியான முறையில் கூட்டம் கூட்டவும், சங்கம் அமைக்கவும் உரிமை 13. அவரவர் நாட்டு அரசாங்கத்தில் பங்கெடுக்கும் உரிமை 14. வேலை செய்வதற்கான உரிமை 15. வேலைக்கேற்ற ஊதியம் பெறும் உரிமை 16. எல்லாக் குழந்தைகளுக்கும் சமூகப் பாதுகாப்பு பெறும் உரிமை 17. தாய் சேய் உரிமை ஆகும்.

## 8. அடிப்படை மனித உரிமைகள்

❀ வாழும் உரிமை, உணவுக்கான உரிமை, நீருக்கான உரிமை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் பேச்சுரிமை, சிந்தனைச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம், தகவல் சுதந்திரம், சமயச் சுதந்திரம், அடிமையாகா உரிமை, சித்தரவதைக்கு உட்படா உரிமை, தன்னாட்சி உரிமை மற்றும் சுயநிர்ணயம், ஆட்சியில் பங்கு கொள்ளும் உரிமை, நேர்மையான விசாரணைக்கான உரிமை, நகர்வு சுதந்திரம், கூடல் சுதந்திரம், குழுமச் சுதந்திரம், கல்வி உரிமை, மொழி உரிமை, பண்பாட்டு உரிமை சொத்துரிமை, தனிமனித உரிமை என்பன அடிப்படை மனிதஉரிமை ஆகும்.

❀ அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக் குழு நிறுவப்பட்டமை, 1864ம் ஆண்டின் 'லீபர் நெறிகள்' 1864ம் ஆண்டின் முதலாம் ஜெனீவா மாநாடு என்பன அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்ததுடன் இரண்டு உலகப் போர்களுக்குப் பின்னர் அச்சட்டங்கள் மேலும் வளர்ச்சி பெற உதவின.

❀ உலகப் போர்களும், அவற்றினால் விளைந்த உயிர்ச் சேதங்கள் மனித உரிமை மீறல்களும் தற்கால மனிதஉரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் வளர்ச்சிபெறத் தூண்டுதலாக அமைந்தன.



Scanned with CamScanner

முதலாம் உலகப் போரின் பின்னர் உருவான வெர்சாய் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, 1919ம் ஆண்டில் நாடுகள் சங்கம் உருவானது. இச்சங்கம், கூட்டுப் பாதுகாப்பு மூலம் போரைத் தவிர்த்தல், நாடுகளுக்கு இடையேயான முரண்பாடுகளை கலந்து பேசுதல், இராசதந்திர வழிமுறைகள், உலக நலன்களை மேம்படுத்துதல் என்பவற்றின் மூலம் தீர்த்துக் கொள்ளுதல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டு இருந்தது.

❀ 1945ம் ஆண்டின் யால்ட்டா மாநாட்டில் நாடுகளின் சங்கத்தின் பணிகளை முன்னெடுப்பதற்குப் புதிய அமைப்பு ஒன்றை உருவாக்க கூட்டு வல்லரசுகள் இணங்கின. இதன் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் அவை உருவாக்கப்பட்டது. அனைத்துலக மனிதஉரிமைகள் சட்டம் தொடர்பில் இவ்வமைப்பு பெரும் பங்கு ஆற்றியுள்ளது. உலகப் போர்களைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் அவையும் அதன் உறுப்பு நாடுகளும் ஈடுபட்ட கலந்துரையாடல்களும், உருவாக்கிய சட்ட அமைப்புக்களுமே இன்றைய அனைத்துலக மனிதாபிமானச் சட்டம், அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் என்பவற்றில் உள்ளடங்கி உள்ளன.

❀ 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இம்மனிதவுரிமைகள் மறுக்கப்பட்டன. அதனால் இதை ஏற்படுத்தும் பொறுப்பு ஐ.நா அவைக்கு ஏற்பட்டது. 24-12-1945ல் ஐ.நா அவை ஏற்பட்டவுடன் அமைக்கப்பட்ட குழுவின் முன் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அக்குழுவினரால் உருவாக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட விதிகள், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், பன்னாடுகளுக்கும் பொருந்துவனவாகவும் அமைந்து இருந்தது. ஆண்டுதோறும் டிசம்பர் 24 அன்று ஐ.நா தினமாக ஐ.நா உருவான நாளை அனைத்து நாடுகளாலும் கொண்டாடப்படுகின்றது.

## 9. பன்னாட்டு பொது மன்னிப்பு நிறுவனம்(ஆம்னெஸ்டி)

1961ல் பிரிட்டன் வழக்கறிஞர் பீட்டர் பொன்சன் என்பார் பன்னாட்டு பொது மன்னிப்பு நிறுவனத்தை அமைத்தார். ஐ.நா.சபை போன்ற பல பன்னாட்டு அமைப்புகளுடன் தொடர்பு கொண்ட இந்நிறுவனமும் எந்த அரசின் சார்பின்றி சுதந்திரமாக இயங்கி வருகிறது. பல்வேறு நாடுகளில் ஆட்சிபுரியும் சர்வாதிகாரிகள், அரசியல் தலைவர்களை விசாரணையின்றி சிறையில் அடைத்து வைத்துள்ளன. சான்றாக நைஜீரியாவின் சர்வாதிகாரி அபாச்சா, அந்நாட்டில் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவரை பதவியிலிருந்து நீக்கி சிறையில் அடைத்துள்ளார். அதேபோல் மியான்மரில் ஆட்சிபுரியும் இராணுவ அரசு சுகியூ ஆங்கான் என்பவரை வீட்டுக்காவலில் வைத்துள்ளது. அன்றைய தென்னாப்பிரிக்கா குடியரசு தலைவர் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறையில் வாடியவர். இவ்வாறு அரசியல் காரணங்களுக்காக சிறையில் வாழும் தலைவர்களை விடுவிக்க இந்த நிறுவனம் முயற்சி எடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் தலைமையகம் லண்டன் ஆகும்.



Scanned with CamScanner

## 10. செஞ்சிலுவை சங்கம்

பன்னாட்டு செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம் ஒரு பன்னாட்டு மனிதாபிமான அமைப்பு ஆகும். இவ்வியக்கத்தில் நாடு, இனம், மதம், வகுப்பு, அரசியல் கருத்து என்பவற்றின் அடிப்படையில் வேறுபாடு காட்டாமல் மனித உயிர்களையும், உடல் நலத்தையும் பாதுகாத்தல், மனிதர்களுக்கு மதிப்பு கொடுப்பதை உறுதிப்படுத்துதல், மனிதர்களின் துன்பங்களைத் தடுத்தலும் அவற்றை நீக்குதலும் ஆகிய கொள்கைகளை ஏற்றுக்கொண்டு 97 மில்லியன் தன்னார்வலர்கள் உலகம் முழுவதும் பணிபுரிகின்றனர். இவ்வியக்கம், பல தனித்தனியான அமைப்புகளை உள்ளடக்கிய ஒன்றாகும். இவ்வமைப்புக்களில், பொது அடிப்படைக் கொள்கை, நோக்கம், சின்னம், சட்டவிதிகள், ஆட்சி உறுப்புக்கள் என்பவற்றால் ஒன்றிணைந்துள்ளன.

**இயக்கத்தின் பகுதிகளாவன :**

பன்னாட்டு செஞ்சிலுவைச் செயற்குழு, செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் பன்னாட்டுக் கூட்டமைப்பு, தேசிய செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்கள் ஆகும்.

**இளம் செஞ்சிலுவைச் சங்கம் :**

பள்ளிகளில் படிக்கும் மாணவர்களிடையே செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவை நோக்கமாகக் கொண்டு வருவதற்காக இளம்செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கப்படுகிறது. பள்ளித் தலைமையாசிரியர் மேற்பார்வையில் செஞ்சிலுவைச் சங்கத்தில் ஈடுபாடுடைய பள்ளியாசிரியர் ஒருவரைக் கொண்டு இக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக்குழுக்களில் ஈடுபாடு கொண்ட பள்ளி மாணவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர்.

**இயக்கத்தின் வரலாறு :**

சூன் மாதம் 1859ம் ஆண்டு சுவிட்சர்லாந்து வர்த்தகரான ஹென்றிடி யூனாண்ட் இத்தாலிக்குப் பயணம் செய்து இருந்தார். அங்கு ஆஸ்திரிய, பிரான்சிய, இத்தாலியப் படைகளைச் சேர்ந்த 3 லட்சம் படைவீரர்கள் தொடர்ந்து போரிட்டு இருந்தனர். இதன் விளைவாக 40000பேர் போர்க்களத்தில் குற்றுயிராய்க் கிடந்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை யாரும் கண்டுகொள்ளவில்லை. இந்நிகழ்வு ஹென்றி டியூனாண்ட்டை வெகுவாகப் பாதித்தது. ஊர்மக்களின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவொரு பேதமுமின்றிச் சிகிச்சை அளித்தார்.

ஜெனிவா திரும்பிய டியூனாண்ட், சோல்பரினோ நினைவுகள் என்னும் நூலை எழுதினார். இந்நூல் அவரது சொந்த செலவில் 1862ல் பிரசுரமானது. இந்நூலின் பிரதிகளை ஐரோப்பாவில் காணப்பட்ட முன்னணி அரசியல் மற்றும் இராணுவப் பிரதிநிதிகளுக்கு எல்லாம் அனுப்பினார். இதற்கெல்லாம் மேலாக 1959ல் தனது சோல்பரினோ அனுபவங்களை முக்கியமானவர்களுடன் பகிர்ந்து கொண்டதுடன் இத்தகைய பாதிக்கப்படும் இராணுவத்தினருக்கு உதவக்கூடிய தொண்டர் அமைப்பின் ஆக்கம் குறித்தும் கலந்துரையாடினார்.

1863ல் டியூனாண்டின் நூல் பிரதி ஒன்று ஜெனிவா பொதுநலன்புரி அமைப்பின் தலைவரான கஸ்டாவா மொய்னியர் அவர்களுக்குக் கிடைத்தது. இவர் இதனை ஜெனிவா பொதுநலன்புரி அமைப்பின் கூட்டத்தில் ஆரம்ப கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொண்டார். பின்னர் டியூனாண்டின் ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டன. இதன் விளைவாக இதன் நடைமுறைப்படுத்தல் பற்றி நாடாளவிலான மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டது. இதன் விளைவாக பன்னாட்டு செஞ்சிலுவை இயக்கம் 1863ல் ஜெனிவாவில் அமைக்கப்பட்டது.

**செஞ்சிலுவை இயக்கமும் முதலாம் உலகப்போரும் :**

முதல் உலகப்போர் ஏற்படுத்திய தாக்கங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தை தேசிய அமைப்புகளுடன் நெருக்கமாக பணியாற்றி சவால்களுடன் முன்னெடுத்து சென்றது. அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளில் இருந்தும் சண்டையில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகளில் பாதிக்கப்பட்ட படையினருக்குப் பணியாற்ற அனுப்பியது. 15.10.1914ம் ஆண்டு சண்டை ஆரம்பித்து சில நாள்களில் செஞ்சிலுவைச் சங்கம் அதன் பன்னாட்டு போர்க் கைதிகள் இதனை அறிந்து கொண்டனர். 1914ம் ஆண்டு முடிவில் 1200 தொண்டர்களைக் கொண்டு இருந்தது. உலகப்போரின் முடிவில் 20 மில்லியன் கடிதங்களையும் செய்திகளையும், 1.9 மில்லியன் பொதிகளையும் மற்றும் 18 மில்லியன் சுவிசு பிராங்க் பெறுமதியான பண நன்கொடைகளையும் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்த போர்க் கைதிகளுக்குப் பரிமாறியது. ஏறக்குறைய 2,00,000 கைதிகள் யுத்தக் குழுக்களுக்கு இடையில் பரிமாறப்பட்டதுடன் தமது தாய்நாடுகளுக்கு விடுதலை செய்யப்பட்டார்கள்.

**செஞ்சிலுவை இயக்கமும் இரண்டாம் உலகப்போரும் :**

ஜெனீவா உடன்படிக்கையின் 1929ம் ஆண்டின் திருத்தத்தின்படி பன்னாட்டு செஞ்சிலுவை இயக்கத்தின் இரண்டாம் உலகப்போர் காலப்பகுதியிலான பணிகள் சட்ட அடிப்படைகளைப் பெற்றன. இயக்கத்தின் பணிகள் முதல் உலகப்போர் காலப் பணிகளை ஒத்ததாகக் காணப்பட்டது. அதாவது போர்க் கைதிகளின் முகாம்களைத் தரிசித்தலும் மதிப்பிடலும், பொதுமக்களுக்கு உதவிகளையும் நிவாரணங்களையும் ஒழுங்குபடுத்துதல், காணாமல் போனோர் மற்றும் கைதிகள் தொடர்பான தகவல்களை பரிமாற்றலும் முறைமைப்படுத்தலும் முதலானவை ஆகும். போரின் முடிவில் 179 பணிக்குழுக்கள் 41 நாடுகளைச் சேர்ந்த போர்க் கைதிகளின் முகாம்களுக்கு 12,750 தரிசிப்புகளை மேற்கொண்டு இருந்தனர். ஆயினும் செருமனியில் நாசிசம் செருமானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் செயல்பாடுகளை ஜெனீவா உடன்படிக்கையை மீறும் வகையில் தடைப்படுத்தினர். யூதர்களின் நாசி அரசியல் கைதிகளின் முகாம்களில் பெரும் இன அழிப்புகள் நடைபெற்றன. யுத்தம் நடைப்பெற்றபோது பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சேவை செய்வது தொடர்பான எந்தவொரு உடன்படிக்கைகளையும் நாசிகளுடன் செய்துகொள்ள முடியவில்லை.

இரண்டாம் உலகப்போரின்போது சுவிட்சர்லாந்து தரைப்படை அலுவலகர் மோறிசு ரொசோல் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியாக



Scanned with CamScanner

பெர்லின் நகருக்கு அனுப்பப்பட்டார். அதன் பிரகாரம் அவர் 1943 ஓச்சுவிச்சுவுக்கும் 1943ல் திரெசிஎன்டாட்சுவுக்கும் அனுப்பப்பட்டார். குளொட் லான்சமான் தனது அனுபவங்களைப் பதிவுசெய்து 1979ல் **Visitor from the living** என்னும் பெயரில் வெளியிட்டார்.

**செஞ்சிலுவைச் சங்கமும் நோபல் சமாதானப் பரிசிலும் :**

பன்னாட்டு செஞ்சலுவை இயக்கம் இதுவரை 1917, 1944 மற்றும் 1963 என மூன்று முறை அமைதிக்கான நோபல் பரிசினை பெற்றுள்ளது. 1917ல் இதன் திறமையான போர்க்கால நடவடிக்கைகளுக்காக இந்நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போது 1914 முதல் 1918 வரை நடைபெற்ற நோபல் பரிசளிப்பு அது ஒன்றுதான். 1944ல் நோபல் முதலாம் உலகப்போரின் முதன்மைக் காலகட்டமான 1939 முதல் 1945 வரையான சேவைக்காக வழங்கப்பட்டது. 1936ல் இவ்வியக்கம் அதன் நூற்றாண்டுக் காலக் கொண்டாட்டங்களின்போது அதன் மூன்றாவது நோபல் பரிசினை பெற்றது.

**இரண்டாம் உலகப்போரின் பின்னர் பன்னாட்டு செஞ்சிலுவை இயக்கம் :**

ஜெனீவா உடன்படிக்கையில் மேலும் இரு திருத்தங்கள் 12.8.1949ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டன. கடலிலே காயத்துக்கு உள்ளான, நோய்வாய்ப்பட்ட படையினரின் சுகப்படுத்தல் சம்பந்தமாக உடன்படிக்கை ஒன்று ஜெனீவா உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது ஹக் உடன்படிக்கையின் தொடர்ச்சியாக கொள்ளப்படும். இது இரண்டாவது ஜெனீவா உடன்படிக்கை எனப்படுகின்றது.

இரண்டாம் உலகப்போரில் பெற்றுக் கொண்ட அனுபவங்களில் அடிப்படையில் புதிய உடன்படிக்கையான நாலாவது ஜெனீவா உடன்படிக்கையான போரின்போது பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான உடன்படிக்கை 1949இல் ஏற்றப்பட்டது. இதில் 8.6.1977ல் சேர்த்துக் கொள்ளப்பட்ட இவற்றை உள்நாட்டுப் போர்களில் பொதுமக்களை பாதுகாக்கும் ஏற்பாடுகளை வலியுறுத்துகின்றது. தற்போது உள்ள நாலாவது உடன்படிக்கைகளில் 600க்கு மேற்பட்ட பிரிவுகள் பொதுமக்கள் பாதுகாப்பு குறித்துப் பேசுகின்றன. ஆனால் 1864ம் ஆண்டு உடன்படிக்கையில் தனியே 10 பிரிவுகளே இருந்தன. 16.10.1990ல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை செஞ்சிலுவைச் சங்கத்தை அதன் குழுக் கூட்டங்களுக்கு அமைப்பாளர்களாக அனுமதித்தது. வெளியமைப்பு ஒன்றை இவ்வாறு அனுமதித்தது இதுவே முதல் முறையாகும்.

**அமைப்பின் நடவடிக்கைகள் :**

பன்னாட்டு செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம் மற்றும் அதன் தேசிய இயக்கங்கள் என்பவற்றில் மொத்தமாக 97 மில்லியன் பேர் பணியாற்றுகின்றார்கள். 1965ல் வியன்னாவில் நடைப்பெற்ற பன்னாட்டு மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 7 அடிப்படைக் கோட்பாடுகள் செயல்பட்டு வருகின்றது. இக்கோட்பாடுகள் அமைப்பின் உத்தியோக பூர்வ கோட்பாடுகளாக 1986ல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவை, 1. மனிதாபிமானம் 2. பாரபட்சமின்மை 3. நடுநிலைமை 4. சுதந்திரத்தன்மை 5. தொண்டுபுரிதல் 6. ஒற்றுமை 7. பரந்த வியாபகம் ஆகும்.



Scanned with CamScanner